# இந்துமதம் என்ன சொல்கிறது?

பாகம் - 3

# தத்துவ சாரம்

'கலாபூஷணம்' திருமதி ஞானம் ஞானசேகர ஐயர்

# இந்துமதம் என்ன சொல்கிறது?

## பாகம் - ३

## 'தத்துவ சாரம்'

'கலாபூஷணம்'
**திருமதி ஞானம் ஞானசேகர ஐயர்**
B.A. (Cey.) ; Dip in Edu.
*முன்னாள் இந்து சமய பாட இணைப்பாளர்,*
*ஆசிரிய ஆலோசகர், மத்திய மாகாண கல்வித் திணைக்களம்,கண்டி,*
*இலங்கை.*

ஞானம் பதிப்பகம்

நூல்: இந்து மதம் என்ன சொல்கிறது? பாகம் - 3 'தத்துவ சாரம்'
ஆசிரியர்: கலாபூஷணம் திருமதி ஞானம் ஞானசேகர ஐயர்
பதிப்பு: 1ஆம் பதிப்பு, 2015
பதிப்பகம்: ஞானம் பதிப்பகம்

Book: Indhumatham Enna Solgirathu? Prt - 3 'Thathithuva Saram'
Author: Kalabooshanam Mrs. Gnanam Gnanasekara Iyar
Edition: 1st Edition, 2015
Published By: Gnanam Pathippakam
3B, 46th Lane, Colombo 06, Sri Lanka
Tel: 0094 11 2586013. Fax: 0094 2362862. Email: editor@gnanam.info
Web: www.gnanam. info

Price: SL Rs. 400/= US $ 5

ISBN: 978-955-8354-56-8

உ

சிவமயம்



வெண்பா

சித்தி யுறுவார் தெளியுங் கலையுறுவார்
பத்தி யுறுவார் பயனுறுவார் – அத்திமுக
முன்னவனை யைங்கரனை முத்திதரும புன்னைநகர்
மன்னவனை முன்போற்று வார்



## குலதெய்வ வழிபாடு

(கடவுள் வாழ்த்து – கீரிமலை நகுலேஸ்வரர்)

வையமீதினி லுயிர்களுக் கிகபரம் வழங்கத்
தையலாணகு லாம்பிகை தணைந்திடா தமரச்
செய்ய மேனிகொண் டமர்ந்தரு ளுதவுதெய் வீகத்
துய்யதோர்நகு லேசன் திருபதந் துதிப்பாம்

யாழ்ப்பாணம் கீரிமலை, ஸ்ரீ நகுலேஸ்வரர்

# பதிப்புரை

இந்துமதம் என்ன சொல்கிறது? என்னும் நூல் வரிசையில் கலாபூஷணம் திருமதி ஞானம் ஞானசேகரஐயர் வழங்கும் மூன்றாவது நூல் இதுவாகும்.

முதலாவது நூலில் இந்துமத அறிமுகம், கோயில் வழிபாட்டு முறைகள் தொடங்கி மக்கள் ஆற்ற வேண்டிய கடமைகள், ஆன்மார்த்த கிரியைகள், அவை எவ்வாறு செய்யப்பட வேண்டும், அவற்றால் விளையக்கூடிய பயன்கள்யாவை, தல விசேடங்கள் போன்ற பல விடயங்கள் அடங்கியுள்ளன.

இந்து சமய வாழ்வுடன் தொடர்பான ஆச்சிரம தர்மத்தின் ஒவ்வொரு படி நிலையிலும் அவற்றிற்குரிய தர்மங்கள் கிரியைகள், சடங்குகள் ஆகியவற்றை நிறை வேற்றும் பொழுது பயன்படுத்தப்படும் சாதனங்களான மங்கலப் பொருட்களின் மகத்துவம் பற்றிக்கூறுவது இரண்டாவது நூல். மங்கலப் பொருட்கள் யாவை, அவற்றின் தத்துவப்பின்னணியாது, அவை எப்போது, எதற்கு எவ்விடத்தில் பயன்படுத்தப்படுகின்றன முதலிய விளக்கங்கள் இரண்டாவது நூலில் தரப்பட்டுள்ளன.

மனித வாழ்க்கை அர்த்தமுடையதாக விளங்குவதற்கு சமய தத்துவங்களைப் புரிந்துகொள்ளல் அவசியமானதாகும். இல்வாழ்வில் பாவம் செய்வது தவிர்க்கப்படல் வேண்டும் அதற்கான காரணத்தைக் கர்ம தத்துவம், விதி, மறுபிறப்பு என்னும் கோட்பாடுகளால் விளங்கிக் கொள்ளலாம். இந்தத் தத்துவ விசாரத்தை மூன்றாவதான இந்நூல் பதினொரு அத்தியாயங்களில் ஒழுங்குபடுத்தித் தருகிறது.

இந்நூலில் அடங்கிய விடயங்கள் யாவும் இந்து சமயிகள் யாபேரும் அறிந்திருக்க வேண்டியவை.

திருமதி ஞானம் ஞானசேகரஐயரின் இந்நூற் தொடரை வெளிடுவதன்மூலம் மனிதரின் ஆன்மிக மேம்பாட்டுக்கான ஒரு பணியை ஆற்றிய மனநிறவைப் பெறுகிறோம்.

இந்நூல்சமயவாதிகள்யாபேருக்கும்பயன்மிக்கதாக அமையும் என்பதில் பெரு மகிழ்வடைகிறோம்.

**பதிப்பாசிரியர்**
ஞானம் பதிப்பகம்

3-பி, 46 ஆவது ஒழுங்கை,
கொழும்பு -06
15-08-2015
editor@gnanam.info

# உள்ளே....


| | |
|---|---|
| இந்து சமயத்தின் அடிப்படை | 01 |
| மனிதனின் பிறப்பு | 26 |
| முக்குணங்களின் இயல்புகள் | 39 |
| மனம் எனும் கருவி | 45 |
| எண்ணத்தின் வலிமை | 59 |
| அறிவே உயர்வானது | 68 |
| பகுத்தறிவு என்றால் என்ன? | 77 |
| வாழ்வு | 92 |
| பாவம் என்ற பதம் குறிப்பது யாது? | 106 |
| கர்ம தத்துவம் | 114 |
| விதி (ஊழ்) | 126 |
| மறுபிறப்புக் கோட்பாட்டின் வலிமை | 133 |
| நிறைவுரை | 147 |
| உசாத்துணை நூல்கள் | 149 |

1

# இந்து சமயத்தின் அடிப்படை

## இந்துமதம் காட்டும் வாழ்வியல் நோக்கு

இன்றைய உலகம் விஞ்ஞான யுகம். உலகையே சுருக்கி உள்ளங் கைக்குள் அடக்கி வைத்திருக்கும் நிலையில்இயந்திரவியல், கணினியியல்ஆகிய துறைகள் அதிவேகமாக முன்னேறிவிட்டன. இங்ஙனமாக அறிவியல் ஆராய்ச்சித் துறைகளில் பெரும் அசுரப் பாய்ச்சலை எட்டியிருந்த போதிலும், உலகில் அண்மைக் காலங்களில் எந்தத் தேசத்து மக்களும் அமைதியாக, மனச்சாந்தி தரும்படியான வாழ்க்கையை வாழும் நிலை காணப்படவில்லை. மக்களின் இந்த அமைதிக்காக, பல வழிகளில் அரசு சார்ந்த அமைப்புக்களும், சமூக நிலையங்களும் தமது பணிகளை நடைமுறைப்படுத்திய வண்ணம் இருக்கின்றன. இவ்வகையான சூழல்கள் ஏற்படுத்தப்பட்ட பொழுதும், உலகெங்கும், அநீதியும், அதர்மச் செயல்களும், கொடுமைகளும் நாளுக்குநாள் அதிகமாகிக் கொண்டே போகின்றன.

இதனால் மனித சமுதாயம் அச்சமுடனும், பீதியுடனும் வாழும் நிலைதான் உருவாகியுள்ளது. இந்நிலை ஏற்படுவதற்கான அடிப்படைக் காரணம் யாது? இச் சூழலிருந்து விடுபட்டு மனிதன் மனித நேயத்துடன் மானிடப் பண்புடன் வாழ வழிதான் யாது? இதுதான் இன்றைய உலக மக்களின் முன்னுள்ள பிரச்சினை யாகும்.

எத்தகைய விஞ்ஞானத் தொழில் நுட்பரீதியான சுகபோகங்கள் கிடைக்கப் பெற்றாலும் எவரும், மனச்சாந்தி, சமாதானம், அன்பு, தயை, அமைதி ஆகிய வற்றுடனான வாழ்க்கையைத்தான் வாழ விரும்புவர். அந்த வாழ்க்கையை வாழ வேண்டுமேயானால், ஒவ்வொருவரும் தத்தமது மதத்திற் கூறப்பெற்ற நீதிகளையும், அறத் தர்மங்களையும் வாழ்க்கையிற் கடைப்பிடிப்பதுடன் தமது வருங்காலச் சந்ததியினருக்கு முன்மாதிரியாகவும், வழிகாட்டியாகவும் திகழ வேண்டும்.

பழைமை பொருந்திய இந்துமதம் வாழ்விய லுக்குகந்த உயர்ந்த கோட்பாடுகளையும், பரந்த சமரசப் போக்கினையும், இயற்கைவாத உட்கருத்துக்களையும் உள்ளடக்கியுள்ளது. சமயச் சார்புடைய தொன்மை சான்ற வரலாறுகள், கல்வெட்டுகள் சாசனங்கள் வழிபாட்டுச் சின்னங்கள் யாவும் இந்து மதத்தில் உள்ளன. இவற்றை வெறும் கட்டுக்கதைகள் என்று கூறி ஒதுக்குகின்ற பகுத்தறிவற்ற நிலை மாறவேண்டும்.

இந்துமதத்தில் உள்ள தெய்வீக மகிமை பொருந்திய கருத்துக்களில் ஒருசிலவற்றையாவது நாம் தெரிந்து கொள்ளுதல் வாழ்க்கையைப் பயன்மிக்கதாக வாழ் வதற்கு உறுதுணையாக இருக்கும். அடிப்படையான சமய அறிவு ஒவ்வொருவருக்கும் இன்றியமையாதது.

இந்துமதம் ஒன்றிலேதன் அதிக தத்துவக் கருத்துக்களை உள்ளடக்கிய நூல்கள் உள்ளன. அதுதான் இந்துமதத்தின் சிறப்பாகும். அந்த நூல்கள் இவ்வளவுதான் என ஒரு தொகையைச் சொல்ல முடியாத அளவில் உள்ளன. வேதங்கள், உபநிடதங்கள், பகவத்கீதை, பிரம்ம சூத்திரம், ஆகமங்கள், தர்ம சாத்திரங்கள், இதிகாசபுராணங்கள், காப்பியங்கள், தேவார திருவாசகங்கள், உலாக்கள், மெய்கண்டசாத்திரங்கள், திருமந்திரம், பிரபந்தங்கள், தமிழ்ப்புராணங்கள் என நாம் வரிசைப்படுத்திக் கொண்டே போகலாம். இவையாவும் இந்து சமயத்தின் அடிப்படை ஆதார சுருதியாகவுள்ளன. எனினும் நாம் வாழ்க்கையில் எல்லா நூல்களையும் படிக்காதுவிட்டாலும் மூன்று நூல்களையாவது படித்துப் பயன் பெறவேண்டும். அவையாவன, இறைவனால் மனிதனுக்கு வழங்கப்பெற்ற வாழ்வியல் உபதேசமாகத் திகழும் பகவத் கீதை, மனிதன் எங்ஙனம் வாழவேண்டும் என்பதனை, மனிதனால் மனிதனுக்குச் சொல்லப்பட்ட திருக்குறள், மனிதனால் இறைவனுக்குச் சொல்லப்பெற்ற நெஞ்சுருக்கும் வாசகமான திருவாசகம் என்பனவே.

ஒவ்வொருவரும் சிந்தனைச் சுதந்திரம் கொண்டவர்களாக இருத்தல் வேண்டும். அத்தகைய சிந்தனை ஆராய்ச்சி, வளர்ச்சி காரணமாகத்தான் இந்து சமயத்தில் உயர்மட்ட அறிவுடைய மக்களுக்கும், சாதாரண அறிவு பெற்றவர்களுக்கும், சற்றேனும் கல்வி அறிவினைப் பெறாத பாமர மக்களுக்கும் சமய நூல்கள் உள்ளன. எந்த நிலையில் உள்ளவர்களும் சமய அறிவினை, சமய உணர்வினைப் பெற இந்நூல்கள் வழிவகுக்கின்றதெனலாம்.

இந்துமத தத்துவம் ஒருவரின் சிந்தனையைத் தூண்டுகிறது. எந்தக் கேள்வியையும் கேட்க வேண்டும், அவ்வாறு கேட்டறிந்தபின் அறிவு பூர்வமாகச் சிந்தித்து ஆராய்ச்சி செய்தல் அவசியம். அதன் பிற்பாடுதான் ஏற்றுக் கொள்ளவேண்டும் எனக் கூறுகிறது.

மகாபாரதப் போர்க்களத்தில் அர்ச்சுனன் ஒரு சத்திரியன் என்ற நிலையில் தனக்குரிய கடமையைச் செய்யாது, பாசப்பிணைப்புகளுக்கு அடிமையாகித் தடுமாறுகின்றான். அவ்வேளையில் கிருஷ்ணபகவான் அர்ச்சுனனுக்குப் பகவக்கீதையை உபதேசிக்கின்றார். உபதேச இறுதியில், "அர்ச்சுனா! நான் இவற்றையெல்லாம் சொன்னேன் என்பதற்காக நீ இவற்றையெல்லாம் ஏற்றுக் கொள்ள வேண்டாம். நீ யாவற்றையும் பகுத்தறிவு கொண்டு ஆராய்ச்சியைச் செய். அதன் பிற்பாடு ஏற்றுக்கொள்". "யதேச் சஸி ததாகுரு" உனக்கு எது சரியென்று நினைக்கிறாயோ அவற்றையே செய்" எனக் கூறுகிறார்.

இந்துமதத்தில் பகுத்தறியும் பண்புபற்றிக் கூறப்படுவதால் எப்பொருள், எத்தன்மையாயினும், எப்பொருள்யார்யார்வாய்க்கேட்பினும்அப்பொருளில் மெய்ப்பொருள் காண்பது வேண்டப்படுகிறது.

இதனையே வள்ளுவரும்,

**“எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருள்**

**மெய்ப்பொருள் காண்பது அறிவு”** எனச் சிறப்பித்துக் கூறியுள்ளார்.

இந்துமதம் எல்லோரையும் தாயன்புடன் அரவணைக்கிறது. அது எதையும், எவரையும், எக்காலத்திலும் வெறுப்பதில்லை. அதுவே இந்துமதத்தின் வலிமையும் வளமுமாகும்.

## வேதங்களில் இந்துமத தத்துவங்கள்

இந்துமதத்தின் அடிப்படைத் தத்துவங்களை வேதம் கூறுகிறது. வேதங்களை இறைவனின் மூச்சு என்பர். வேத சுலோகங்ளை மந்திரங்கள் என்பர். சுலோகங்கள் யாவும் அர்த்தம் உள்ளமையினால் அவற்றை அட்சர சுத்தியுடன் ஒலி பிறழாது ஓதினால் அதன் கருத்துக்கள் தெளிவான விளக்கம் பெறும். வேதம் ஓதப்பெற்று மனனம் செய்யப் பெற்றமையினால் வேதம் ஓதுவதை வேதாத்தியாயனம் என்பர். வேதத்தைப் பாதுகாத்தல் தருமம். அதைக் காப்பவரை அது காக்கும். வேதத்தின் இறுதிப்பகுதி உபநிடதமாகும். இதுவே இந்திய தத்துவ விசாரணைக்கு வழிவகுத்தது. வேதங்கள் ஒரு குருவிடத்திலிருந்து பரம்பரை பரம்பரையாகச்

செவி வழியாகக் கேட்கப்பட்டு வருவதால் 'சுருதி' என வழங்கப்படுகிறது.

வியாசர் வேதங்களை அதன் கூறப்பட்டுள்ள பொருள் வாயிலாகக்கொண்டு நான்காக வகுத்துள்ளார்.

முதல் வேதமான இருக்கு வேதம் ஞானநூல். வாக்கு வல்லமையுள்ளவன் படைப்பாற்றலைச் செய்கிறான். இது பிரபஞ்சத்திலுள்ள பொருட்கள் அனைத்தையும் விளக்கவல்லது. வாக்கில் ஒளி கொண்டவன் மட்டுமே கனிவாக அன்புடனும் பிறருக்கு நலன் விளைவிக்கும் உண்மையைப் பேசுவான்.

ரிக் என்பது வாக்கு (ரிசம் வாசம் ப்ரபத்யே)

தூய மனம் உள்ளவனால் மட்டுமே நற்கருமங்களை ஆற்றமுடியும். மனதில் நல்ல எண்ணங்கள் கொண்டவனலேதான் நற்செயல்களை ஆற்ற முடியும்.

யசுர்வேதம் செய்வதற்குரிய பிரமாணத்தைச் சொல்வது. யுசுர் என்பது மனம் (மநோய ஜூ: ப்ரபத்யே) இறைவனுக்கு நாமம் சொல்லி அர்ச்சனை செய்யும் வழக்கத்திற்கு யசுர் வேதமே வழிவகுத்தது.

உயிரோட்டத்தை உள்ளும் புறமும் அடக்கிச் சமநிலையில் வைத்து உயிரைப்போலவே எதிலும் ஒட்டாமல் நடுநிலையில் இருந்து உள்ளத்தைக் காப்பவனால் மட்டுமே இன்னிசை பாட முடியும். சமநிலையிலிருந்து வாழ்ந்து உயிர் நட்பைச் சாதிப்ப வன்தான் சாமவேதம் பயின்றவனாவான். ஸாமம் என்பது பிராணம். (ஸாமப்ராணம் ப்ரப்த்யே) தெய்வ வழிபாட்டிற்கு இசை மூலம் வழிபடும் முறையினை வழிவகுத்தது சாமவேதமே. சம்மந்தர், அப்பர்

போன்றோர் தமிழ்ப் பாடல்களால் இறைவனை வழிபாடு செய்த முறைமை சாமவேதமே.

தர்வம் என்றால் நடுக்கம். அதர்வம் நடுக்கமின்மை. கண்ணாலும் காதாலும் நற்செயல்களையே கண்டும் கேட்டும் வாழ்பவனுக்கு எங்கும் எதிலும் பதகளிப்பு ஏற்படமாட்டாது.

நல்ல மாசற்ற கண்ணும் காதும் அதர்வணத்திற்கு இருப்பிடம். எனவே வாக்கு வலிமை மனத்திட்பம், உயர்நட்பு கண்காதுகளின் தூய்மை ஆகிய நான்கும் நால் வேதம் ஓதப்பெற்றவர்க்குக் கிடைக்கும். வேதவாக்கு மனித வாழ்வினை உயர்த்தும்.

கடவுளரைத் துதிக்கின்ற மந்திரங்களை அடக்கி யுள்ளது முதல் வேதமான இருக்கு வேதம்.

யசுர்வேதம், யாகங்கள் எங்ஙனம் இயற்றப்பட வேண்டும் என்பதனை விளக்கிச் சொல்வது. இது கர்ம காண்டமாகும். யசுர்வேதமானது கிருஷ்ண யசுர் மற்றும் சுக்கில யசுர் ஆகிய இரு பகுதிகளைக் கொண்டுள்ளது.

இருக்குவேத மந்திரங்களை இசையுடன் கூடிய பாடல்களாகக் கொண்டது சாமவேதம் ஆகும். ‘சாம வேதம் பெரிதும் உகப்பானை’ என்பது அப்பர் வாக்கு. ‘விண்ணுக் கொரு மருந்தை வேத விழுப்பொருளை கண்ணுக்கினியானை’ என்பது மணிவாசகர் வாக்கு. இராவணன் சாம கானத்தை இசைத்து இறைவனிடம் வரங்களைப் பெற்றான். இறைவியை ‘சாமகானப் பிரியே’ என வழங்குவர்.

நான்காவது வேதமான அதர்வண வேதத்தில் உபதேசங்களும், மந்திர வாதமுறைகளும், வசியம்

தொடர்பான மந்திரங்களும் கூறப் பெற்றுள்ளன. இன்றைய கணினி, இன்டர்நெட் யுகத்தில்கூட பில்லி, சூன்யம், ஏவல் என்பனயாவும் இருக்கின்றதா? அது எந்த அளவிற்கு உண்மை என்ற வினா எல்லோரது உள்ளங்களிலும் எழுந்த வண்ணமாகியுள்ளன.

இருக்கு, யசுர், சாமம் எனும் மூன்று வேதங்களையும் விட அதர்வ வேதத்தில் மாயம், மருந்து வசியம், போன்றவற்றிற்கு முதன்மை அளிக்கப்பட்டுள்ளது. விஞ்ஞானத்தில் ஆக்கும் சக்தியும் அழிக்கும் சக்தியும் உண்டல்லவா. அதைப்போன்றே மெஞ்ஞானத்தில் உள்ள அழிவுச் சக்திதான் பில்லி, சூன்யம், ஏவல் என்பவை. இவை நாட்டு மக்களைத் தீய சக்திகளிடமிருந்து காப்பாற்ற நமது ரிஷிகளால் உயர்ந்த சமூக நோக்குடன் உருவாக்கப்பட்டவை. அது இன்றைய காலகட்டத்தில் சுயநல நோக்கம் கொண்ட சிலரின் கைகளில் கிடைக்கப் பெற்றதனால் தவறான வழியில் பாவிக்கப்பட்டுப் பிறரின் வாழ்க்கையைச் சீரழித்து வேதனைக்குள்ளாக்கி விடுகிறது.

மந்திரம்என்பதுஉச்சரிப்பவனைக்காப்பாற்றுவதாக இருக்க வேண்டும். ஒவ்வொருவரது மனதிலும் அன்பும், இறைபக்தியும், தயவு தாட்சண்யமும் என்றைக்கு ஏற்படுத்தப்படுகின்றதோ அன்றுதான் பில்லி சூன்யம் என்பவற்றிற்கு முற்றுப்புள்ளி உண்டாகும். அந்நாளை விரைவில் எமக்கெல்லாம் அளிக்க வேண்டுமென இறைவனைப் பிரார்த்திப்போம்.

ஒவ்வொரு வேதங்களுக்கும் உட்பிரிவுகளாகத் திகழ்பவை மந்திரங்கள், பிராமணங்கள், ஆரணியங்கள், உபநிடதங்களாகும். இதில் பிராமணங்கள் யாகங் களைச் செய்வதற்கு வேண்டிய சடங்குகளைப் பற்றிக் கூறுபவை. ஆரணியங்கள் வேத தத்துவங்களை உருவாக்கிக் கதைகளாகச் சொல்பவை. உபநிடதங்கள் தத்துவங்களின் ஆராய்ச்சிகளைக் கொண்ட பிரிவாகும்.

வேதகால மக்கள் இயற்கைச் சக்திகளுக்கெல்லாம் இறைமையை ஏற்படுத்தி அவற்றுக்கெல்லாம் வேள்வி யாத்து வழிபட்டனர். வேள்வித் தீயில் அக்கினி பகவானை எல்லா அதிதிகளுக்கும் தூதுவனாகக் கொண்டனர். யாகக் கிரியையில் ஆகுதியாக நிவேதிக்கும் திரவியங்களை உரிய தெய்வங்களிடம் சமர்ப்பிக்கும்படி அக்கினித் தூதுவனை வேண்டினர்.

ஏனைய மதநெறிகள் மனிதர்களையோ, தேவதை களையோ, இறை தூதர்களையோ காட்டி அந்த மதத்தை நிறுவியதாகக் கூறுகின்றன. ஆனால் வேதங்கள் யாவும் மனிதர்களால் சொல்லப்பட்டவையோ, எழுதப்பட்டவையோ அல்ல. வேத காலத்தை நிர்ணயிக்கப்படவும் முடியாது. வேதங்கள் என்றும் உள்ளவை.

வேதங்கள் என்றென்றும் நிலையான இறை ஞானத்தைக் கூறுவதால் அவை அழிவற்றவை. அதனால் வேதங்களுக்கு வேதங்களே அத்தாட்சி. எங்ஙனம் படைப்புத் தொழில் தோற்றமும் முடிவுமில்லாததுமாக எல்லையற்றதாக நிரந்தரமாயுளதோ அவ்வாறே

இறையறிவும் தொடக்கமும் முடிவுமில்லாமல் என்றும் உளது. இந்த அறிவுதான் வேதங்கள்; வித் - அறிதல் என்று அழைக்கப்படுகிறது. வேதங்கள் எனும் அறிவுக் களஞ்சியம் ரிஷிகளால் கண்டுபிடிக்கப்பட்டவை. இவை மந்திர 'ஷத்ரஷ்டா' என்று கூறப்படுகின்றன. மந்திரத்தை நேரே கண்டவர்கள் ரிஷிகள். அவர்கள் சிந்தனையைக் கண்டவர்களே தவிர, அந்தச் சிந்தனைகள் அவர்களுடையவை அல்ல. ஏற்கனவே பிரபஞ்சத்தில் எப்போதும் இருக்கின்ற சிந்தனைகளை அவர்கள் கண்டுபிடித்தனர்.

வேதங்களில் மந்திரப் பகுதி மாணவப் பருவத்தினருக்கும், பிராமணங்கள் இல்லற நிலையினருக்கும், ஆரணியங்கள் இல்லறத்தினின்று துறவு நிலைக்கு ஆயத்தப்படியான வானப்பிரஸ்தினருக்கும், முழுத்துறவுநிலையினை அடையவுள்ள சந்நியாச நிலையினருக்கு உபநிடதங்கள் உரியன எனவும் கொள்ளப்படுகின்றன.

வாழ்வியலுக்குரியகர்மஅனுட்டானக்கிரியைகளை வேதங்களின் மந்திரப் பகுதி பிராம்மணப்பகுதி ஆகியவை விளக்க, ஞானத்திற்குரிய துறவுநிலைக்குரிய மெய்யறிவான ஞான நிலையினை ஆரணியகமும் உபநிடதமும் விளக்கிச் செல்கின்றன.


உபநிடத காலத்தில் மக்களுக்குத் தங்களைப் பற்றியும், யாவற்றையும் இயக்கும் சக்திகளைப் பற்றியும் பல சந்தேகங்கள் எழுந்தன. இந்த உலகையும்,

உலகப் பொருட்களையும் நேர்த்தியான முறையில் இயக்குபவன் யார்? எம்மையெல்லாம் இயக்கும் சக்தியின் பெயரென்ன? உலகப் பொருட்கள் யாவும் எச்சக்தியினால் இயற்றப்பட்டன? என்பன தொடர் பான ஐயங்கள் எழுந்தன. இங்கே எழுப்பப்பட்ட வினாக்களை நோக்குமிடத்து அவை இறைவன், உயிர், உலகு தொடர்பான விசாரணைகள்தான் எனக் காணமுடிகிறது.

இத்தகைய சந்தேகங்களைத் தெளிவுபடுத்தியோர் குருவாயினர். சந்தேகங்களைக் கிளப்பியோர் சீடராயினர். உபநிடதம் என்பதன் பொருள் உண்மைத் தத்துவப் பொருட்கோட்பாடுகளைத் தெளிவுபடுத்தும் ஓர் ஆசிரியர் அருகிலிருந்து தெளிவு பெறல் என்பதாகும். வேதத்தின் அந்தமாக நிகழ்வதால் வேதாந்தம் எனவும், வேதத்தின் கனியாக சாரமாக உள்ளதால் வேதசிரசு எனவும் இதனை வழங்குவர்.

உபநிடதங்களில் விசாரணைக்குக் கொள்ளப்பட்ட உண்மைத் தத்துவங்களை அடிப்படையாகக் கொண்டு எழுப்பப்பட்ட சிந்தனைச் சிகரமாகத் திகழ்பவை இந்திய தத்துவ நூல்களாகும். இவற்றில் கூறப்பெற்ற அஹம் ப்ரம்மாஸ்மி (நான் பிரம்மம் ஆகிறேன்) தத்துவமஸி (அது நீ ஆகிறாய்) ஆகிய மகா வாக்கியங்களுக்குக் கோட்பாட்டு ரீதியில் விளக்கம் கூறியவைதான் வேதாந்த நூல்களாகும்.

முதன் முதலில் உபநிடத தத்துவத்திற்கு விளக்கம்




கூறியவர் சங்கரர். இவரைத் தொடர்ந்து இராமானுஜர், மத்துவர் ஆகியோர் தத்தமது கோட்பாடுகளை முன் வைத்தனர். இவர்களால் கூறப்பெற்ற தத்துவங்களுக்கு பூரணத்துவமாகத் தெளிவான முறையில் விளக்கம் தருபவை சைவ சித்தாந்த சாத்திரங்களாகும். அதனால் தான் 'வேதாந்தத் தெளிவாம் சைவசித்தாந்தத் திறன்' என ஆன்றோர் வழங்குவர். மெய்கண்டார் சைவ சித்தாந்த புறச்சந்தான பரம்பரைக்கு முதல் குருவானவர். உபநிடதத்தின் சாரமாகப் பகவக்கீதை திகழ்வதால் மகாபாரதத்தை ஐந்தாம் வேதமாகக் கொள்வர்.

சைவசித்தாந்தம் இறைவன், உயிர், உலகு மூன்று பொருட்களும் உண்மையானவை, நித்தியமானவை, அநாதியானவை, என்றும் உள்ளவை எனக்கூறுகின்றது. இது இயற்கை வாதமாக உள்ளமையினால் யாவராலும் பெருமையுடன் ஏற்றுக் கொள்ளப் பெற்றது.

பல்கலைக்கழகத்திலே படிப்பு முடிந்ததும் பட்டமளிப்பு விழாவின்பொழுது நீண்ட விரிவுரை ஒன்று நிகழ்வது வழக்கம். அதுபோன்று உபநிடத காலத்தில் குருகுலக்கல்வி கற்ற மாணவனை வீட்டிற்கு அனுப்பும் பொழுது பெரும் உபதேச மொழிகள் வழங்கப்படும். உண்மை பேசு, அறம் செய், கொடுப்பனவற்றைத் தயையுடன் கொடு, அன்புடன் கொடு, வாழ்க்கையில் சிக்கலான பிரச்சினைகள் ஏற்படும்பொழுது முன்னோர் எங்ஙனம் அவ்விடயங்களில் நடந்து கொண்டார்கள் என்பதனை ஆராய்ந்து அதன்படி நட, தர்மம் கொல்லப்பட்டால், கொன்றவனை அது கொல்லும். தர்மம் காக்கப்பட்டால், காத்தவனை அது காக்கும், இறைவனே நித்தியமானவர். மாதாவை, பிதாவை குருவை, அதிதியைத் தெய்வமெனப் போற்றுக. இங்ஙனமான உபதேசங்கள் வழங்கப்படும். இவை யாவும் இன்றைய கல்வியுலகில் அருகிக் கொண்டே வருகின்றன.

கல்வி கற்பித்தல் முறையில் மாணவர்களின் சிந்தனை வளர்ச்சிக்கு முக்கியத்துவம் அளிக்கபடல் வேண்டும்.

மாணவர்களிடம் வினாக்களை எழுப்பி, அவர்களிடம் இயல்பாகப் பொதிந்துள்ள அறிவு ஆற்றலை வளர்க்க வேண்டும். இங்ஙனமாக கற்பித்தல் - கற்றல் செயற்பாடு நிகழுமிடத்து மாணவர்களின் மனத்தில் ஆழமான கருத்துக்கள் பதிவு செய்யப்படும். கற்பித்தற் செயற்பாட்டினால் கற்றற் செயன்முறைகளாக அறிவில், திறன்களில், மனப்பாங்குகளில் (நடத்தையில்) மாற்றம் ஏற்பட வேண்டும். தாம் பெற்ற அறிவின் திறன்களை நடைமுறை வாழ்க்கையிலும் பிரயோகித்தல் அவசியம்.

கடவுள் உண்டா? ஆன்மா உண்டா? உலகு என்பது உண்மைதானா? என்பன போன்ற வினாக்கள் தொன்மைக் காலத்திலிருந்தே கேட்கப்பட்டு வந்திருக் கின்றன; விவாதிக்கப்பட்டுள்ளன. இவற்றை இன்னமும் முடிவின்றி விவாதித்துக் கொண்டு வருகிறார்கள். மனிதப் புலன்களுக்கும் அறிவுக்கும் எட்டாத சக்தி எதுவும் கிடையாது எனச் சாதிக்கிறவர்களும் நம்மத்தியில் இருக்கிறார்கள். உண்மையைச் சொல்லப் போனால் மனிதனுடைய புலன்களுக்கும் அறிவுக்கும் எட்டாத சக்தி ஒன்று உண்டு. அந்தச் சக்தியே ஏதோ ஒரு ஒழுங்கின்படி, ஒரு நியதிப்படி, இந்த உலகத்தையும் இதில் நடைபெறும் சகல காரியங்களையும் நடத்தி வருகிறது. மூலப் பழம் பொருளின் நாட்டம் - இந்த மூன்று புவியும் அதன் ஆட்டம் என்கின்றார் பாரதியார்.

**"எத்தனை கோடி இன்பம் வைத்தாய் – எங்கள்**
**இறைவா! இறைவா! இறைவா!**
**சித்தினை அசித்துடன் இணைத்தாய் – அங்கு**
**சேருமைம் பூதத்து வியனுல கமைத்தாய்,**
**அத்தனை உலகமும் வர்ணக் களஞ்சிய**
**மாகப் பலபலநல் லழகுகள் சமைத்தாய்**
**முத்தியென் றொருநிலை சமைத்தாய் – அங்கு**
**முழுதினையு முணரும் உணர் வமைத்தாய்,**
**பத்தியென்றொரு நிலை வகுத்தாய் – எங்கள்**
**பரமா! பரமா! பரமா!."**

## சமய அறிவினை வழங்கும் தத்துவங்கள், புராணங்கள், சடங்குகள் :-

இந்து சமயத்தில் சமய அறிவினைத் தகுந்த முறையில் புரிய வைப்பதற்காக, மூன்று முக்கிய பகுதிகள் உள்ளன. அவை தத்துவங்கள், புராணங்கள், சடங்குகள் என்பனவாம். இவற்றில் தத்துவம் அறிவியல் சார்ந்தது, நுட்பமானது. அதை விளக்குவதற்காகக் கதைகள் அமைப்பில் தத்துவங்களைக் கூற எழுந்தவை தான் புராணங்கள். தத்துவங்கள் யாவருக்கும் புரியாமல் இருக்கலாம். புராணங்களைப் படிப்பதற்கும் கேட்பதற்கும் பலருக்கு வாய்ப்பு இல்லாமல் போகலாம். ஆனால் சடங்குகள் என்பது நடைமுறையில் கடைப்பிடிக்கப்படுபவை. இதில் ஒவ்வொருவரும் நேரிலே சம்மந்தப்படுகின்றனர். அவர்களே சடங்கு

களுக்கான கிரியைகள் அனுட்டானங்களைச் செய்கின்றனர்.

செய்கை முறையில் சடங்குகள் ஆற்றப் பெறுவதனால் அதன் அழுத்தம், விளக்கம், பெருமை யாவும் இலகுவாக ஒருவரது மனதில் பதியப் பெறுகின்றன. தவிர அவை தொடர்பான விளக்கங்களைத் தெரியாதவர்க்குக்கூட விளக்கம்பெற வாய்ப்பாகின்றது. இதனால் பாமரமக்கள்கூட சமயப் பற்று, சமய உணர்வு, சமயப் புனிதங்களைப் பெற வாய்ப்புண்டாகிறது. சடங்குகள், அனுட்டானங்கள் மக்களின் சமய ரீதியான ஆரம்பநிலை. தத்துவம் சமயரீதியான இறுதிப் படியாகும். இத்தகைய மகத்துவம் இந்துமதத்திற்கே உரிய தனித்துவமாகும்.

மதங்கள்பல ஒருமித்து இயங்கவும், ஏனைய மதங்கள் புகட்டும் உட்கருத்துக்களை ஏற்றும், பரந்து விரிந்து இயங்குவது இந்துமதம் காட்டும் நெறியாகும். அது உலகில் ஏனைய மதங்களிற் கூறப்பெற்ற நெறிகளின் சிறந்த அம்சங்களைத் தன்னுள் அடக்கியுள்ளது. பலவாறு விரிந்து காணப்படும் பல வழிபாட்டு முறைகளாயினும் அவற்றிற் பன்மை காணாத ஒருமை காணும் பண்பாடு இந்திய தத்துவ நூல்களிலெல்லாம் காணப்படும் உயர்ந்த கருத்தாகும். இக்கருத்து வேதத்திலேயே உளது. இதனை ஒவ்வொருவரும் தமது விருப்பிற்கமையப் பல திருநாமமிட்டு வழங்கு கிறார்கள்.

பகலில் காணமுடியவில்லை என்பதனை

ஆதாரமாகக் கொண்டு வானில் நட்சத்திரங்கள் இல்லையென்ற முடிவுக்கு வரமுடியாது. சூரியனின் கதிர்கள் எம்மைப் பகலில் நட்சத்திரங்களைப் பார்க்க விடாது தடுத்து விடுகின்றன. அறியாமை என்ற அஞ்ஞானத்தின் திரையினால் நாமெல்லாம் கடவுளைக் கண்டு தரிசிக்க முடியாமல் தவிக்கின்றோம். அறியாமை என்கின்ற மாயை என்ற திரை நீங்கப் பெற்று உண்மை ஞானம் கைவரப் பெற்றால் இறைவனைத் தரிசிக்க முடியும் என்பது அனுபூதிமான்களின் முடிவாகும். இவர்களின் உள்ளத்தின் உள்நின்று இறைவன் உணர்த்தி அருளியவைதான் ஆப்தவாக்கியங்களாகும். முனிவர் ரிஷிகளால் கூறப்பெற்ற ஆப்த வாக்கியங்களே தத்துவ நூல்களாகத் திகழ்கின்றன. தொடர்ந்து வந்த மகான்கள் அவற்றைப் போற்றிப் பாதுகாத்துத் தோத்திர நூல்களாகவும், சாத்திர நூல்களாகவும் எமக்கு அளித்துள்ளனர்.

பல யுகங்களாகக் கிரகங்கள் யாவும் வானில் தமக்குரிய குறிக்கப்பெற்ற பாதைகளில் குறித்த வேகத்தில் வலம் வருகின்றன. அவை தமக்குரிய பாதை நியதிகளை மாற்றுவதும் இல்லை. உரிய பாதையைத் தவற விடுவதும் இல்லை. அவை ஒவ்வொன்றும் ஒரு கணமேயாயினும் பாதைதவறி வேகத்தையும் மாற்றிக் கொள்ளுமாயின் ஒன்றுடன் ஒன்று மோதிவிடும். அவ்விதம் எதுவும் நேராமல் ஒழுங்கான முறையில் உலகு முழுவதையும் இயக்குவதுதான் இறைசக்தி.

‘அவனன்றி ஓர் அணுவும் அசையாது’ என்பது பழமொழி. இத்தகைய அரிய பெரிய செயற்கரிய செயல்கள் யாவற்றுக்கும் மூலகாரணராக இருப்பவர் இறைவனே.

கேன உபநிடதத்தில் அவனன்றி ஓரணுவும் அசையாது என்ற உண்மை விளக்கப்பட்டுள்ளது.

தேவர்களுக்கும் அசுரர்களுக்கும் ஒரு முறை யுத்தம் இடம்பெற்றது. தேவர்கள் வெற்றியடைந்தார்கள். தம்முடைய வெற்றிக்கு பரம்பொருளின் துணைதான் காரணம் என்பதனை மறந்து தாமேதான் தமது வெற்றிக்குக் காரணமென இறுமாப்புக் கொண்டனர். அவர்களுக்கு நல்லறிவு புகட்ட பிரம்மம் (உபநிடதங்களில் பரம்பொருளை பிரம்மம் என்ற பதத்தினால்தான் குறிக்கப் பெறுகிறது) சோதி வடிவில் தோன்றிற்று.

இது என்ன தோற்றம் எனத் தேவர்கள் திகைத்தார்கள்.

‘அக்கினியே, போய் உண்மையை அறிந்து வா’ என அக்கினியை அனுப்பினார்கள்.

அக்கினித் தேவனை சோதி வடிவம், ‘நீ யார்’ என்று கேட்டது.

“நான் அக்கினித் தேவன், பூமியில் இருக்கும் எதனையும் என்னால் எரித்து அழிக்க முடியும்” எனக் கூறிய பொழுது, “அப்படியானால் இதோ இந்தக் காய்ந்த புல்லை எரி பார்க்கலாம்” எனச் சோதி கூறியது.

அக்கினி பகவான் காய்ந்த புல்லை எரிக்கமுடியாது

தேவர்களிடம் திரும்பினார்.

அடுத்து வாயு பகவானைத் தேவர்கள் அனுப்பி னார்கள்.

வாயு பகவான் சோதியிடம், “பூமியில் உள்ள எதனையும் நான் தகர்த்து விடுவேன்” என்றது.

“அப்படியானால் இந்தச் சிறிய புல்லை தகர்த்து எறி பார்க்கலாம்” என்றது சோதிவடிவம்.

ஆனால் வாயுபகவான் அந்தச் சிறிய புல்லைத் தகர்க்க முடியாமல் தேவர்களிடம் திரும்பினார்.

இறுதியாக இந்திரன் தானே அச்சோதியை அறிய வந்தான். சோதி வடிவமானது இமவான் புத்திரியாக உமாதேவியாகக் காட்சி அளித்தது.

அந்தச் சோதி வடிவந்தான் பிரம்மம். அந்தப் பிரமத்தினால் தான் வெற்றி பெற்றீர்களென பிரம்மத்தின் பெருமைகளை இந்திரனுக்கு உமை உபதேசித்தருளினாள்.

இந்திரன், வாயு, அக்கினி மூவரும் பிரமத்தை அண்மித்த காரணத்தினாலும் அதனைப் பிரம்மம் என்று தெரிந்து கொண்டதாலும் ஏனைய தேவர்களிலும் சிறந்தவர்களாயினர்.

தவம், தன்னடக்கம், கர்ம அனுட்டானம் என்பன பிரம்ம ஞானத்தின் உடல். வேதங்கள் அதன் உறுப்புகள், சத்தியம் அதன் உறைவிடம்.

யாரொருவர் இந்த உண்மையினைத் தெளிவுடன் உணர்கின்றார்களோ, அவர் தீமைகளினின்றும் விடு பட்டு எல்லையற்ற உயர்நிலையை அடைவர்.

கடவுள் எங்கும் உள்ளவர், எதிலும் நிறைந்தவர்,

யாவற்றிலும் வியாபித்துள்ளார். இறைவன் உலகெலாமாகி எம்முடன் வேறாயும் உடனாயும் இருப்பார். இறைவனின் வியாபகத்தை 'அந்தர் யாமித்துவம்' (ஆன்மாவுடன் கலந்திருத்தல்) என்பர். இறைவன் ஆன்மாவிலும் உறைவதனால் ஆன்மாவும் தெய்வத்தன்மையுளது.

**'ஈறாய் முதல் ஒன்றாயிரு பெண்ணோன் குண மூன்றாய்**
**மாறா மறை நான்காய் வருபூதம் அவை ஐந்தாய்**
**ஆறார் சுவை ஏழோசையொ டெட்டுத் திசை தானாய்**
**வேறாய் உடன் ஆனான் இடம் விழிம்மிழ லையே'**

தொடக்க முடிவுமின்றியுள்ளவனும் எமக்கு அருள் புரிவதற்காக சக்தியுடனும், எம்முடைய உள்ளங்களை ஆட்சிபுரிகின்ற சத்துவம், இராசதம், தாமதம் ஆகிய மூன்று குணங்களிலும், வேதம் நான்கினுள்ளும், பஞ்ச பூதங்களிலும், அறுசுவை இனிப்பு, கசப்பு, உறைப்பு, புளிப்பு, உவர்ப்பு, தித்திப்பு ஆகியவற்றினுள்ளும், இசை பதங்களான ஸரிகமபதநி என ஏழு சுரங்களிலும் எட்டுத் திசைகளுள்ளும் இறைவன் அறிவுள்ளதும், அறிவில்லாதனவுமாகிய எல்லாப் பொருள்களிலும் வேறறக் கலந்து ஒன்றாயும் அவற்றின் வேறாயும் உடனாயும் இருக்கின்றான்.

இதனை உமாபதிசிவாசாரியார் திருவருட்பயனில் முதல் அதிகாரமான பதிமுது நிலையில் கூறியுள்ளார்.

**அகர உயிர்போல் அறிவாகி எங்கும்**
**நிகரில் இறை நிற்கும் நிறைந்து.**

*அகரமாகிய உயிரெழுத்து ஏனைய எழுத்துக்களுக் கெல்லாம் முதலாயும் அவற்றில் வேறறக் கலந்து மிருப்பது போல, இறைவன் அறிவே வடிவமாகி உயிர் உலகம் யாவற்றிலும் வேறறக் கலந்து நிலை பெற்றுள்ளான்.*

*இறைவனின் வியாபகத்தினுள் உயிர்களும் உலகமும் போகப் பொருட்களும் அடங்கி இருப்ப தோடு, இப்பொருட்கள் யாவற்றிலும் ஊடுருவி நீக்கமற நிறைந்துள்ளார். இதனைத் திருவருட்பயன் விளக்கியுள்ளது.*

**எங்கும் எவையும் எரியுறுநீர் போல் ஏகம்**
**தங்கும் அவன் தானே தனி.**

*எல்லா உலகங்களிலும், எல்லா உயிர்களிலும் வெந்நீரில் வெப்பம் போல வேறறக் கலந்து நிற்கும் இறைவன், அவற்றின் தன்மை சாராமல் அவற்றைக் கடந்து வேறாயும் நிற்பான்.*

*உபநிடதங்கள் பிரம்மத்தைப் பற்றி விளக்குமிடத்து, எமது ஊனக்கண்களினால் இறைவனைத் தரிசிக்க நினைப்பது, ஒருவன் தானே தன் தோளின் மீது ஏறி நிற்க முயல்வதைப் போன்றதாகும். இன்னுமொரு உவமையைக் கூறினால், 'வண்டி ஓடுவது சக்கரம்*

உருளுவதால், வண்டி தானே தன் சக்கரத்தை உருட்டிப் பார்ப்பது போலாகும்'. இறைவன் எங்கும் நிறைந்து பரவி நிற்கும் மிக நுண்ணிய பொருளாகும். அது அழிவற்றது. அனைத்துக்கும் பிறப்பிடமும் அதுவே. தன்னிலிருந்து நூலை உண்டாக்கி அதைப் பற்றி நிற்கும் சிலந்தியைப் போல பூமியிலிருந்து செடிகள் உண்டாவது போலவும், தலையிலும் உடலிலும் மயிர் முளைப்பது போலவும், உலகம் யாவும் இறைவனிலிருந்து உண்டானவையே .

நுட்பமான ஒரு பொருள் எனக் கூறும் பொழுது அதில் பல பொருட்கள் எங்ஙனம் உருவாகலாம் என்ற வினா எழமுடியும். அதற்கும் உபநிடதம் விளக்கம் அளித்துள்ளது. ஆலம் வித்திலிருந்து கிளைகளும், இலைகளும் விழுதுகளும் கொண்ட பிரமாண்டமான விருட்சம் உண்டாவது போலவும் மறைந்துள்ள தன்மையை விளக்க தண்ணீருள் கரைத்த உப்பின் உருவம் கண்ணுக்குப் புலப்படாத போதும் அதன் இயல்பு தண்ணீர் முழுவதும் செறிந்திருப்பது போலவும், இவ்வுலகெல்லாம் பிரமம் மறைந்து காணப்படுகிறது என விளக்கம் அளிக்கிறது.

இவை யாவும் இறைவனின்றும் தோன்றியிருந்தாலும் அவர் பூரணமாகவேயுள்ளார்.

**ஓம் பூரணமத பூர்ணமிதம் பூர்ணாத் பூர்ண முதச்யதே**
**பூர்ணஸ்ய பூர்ண மாதாய பூர்ண மேவா வசிஷ்யதே!**
**ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!**

மனதுக்கு எட்டாமல் இருப்பதும் பிரமம். மனத்தால் அறியும் இவ்வுலகும் பிரமம். இவ்வுலகம் அந்தப் பிரமத்திலிருந்து தோன்றியுளது. அப்படிப் பிரமத்திலிருந்து உலகம் தோன்றினாலும் அந்தப் பிரமம் ஒரு குறைவுமின்றி பூரணமாகவே இருக்கிறது.

ஓம் சாந்தி என மூன்று தடவை சொல்வதற்கான காரணம் மூவகைத் துன்பங்களிலிருந்தும் ஆன்ம ஈடேற்றம் கிடைக்கட்டும் என்பதனாலாகும்.

மூவகைத் துன்பம்:

1. ஆதியாத்மிகம் -
   நமது உடம்பின் நோய்கள் கவலைகள்
2. ஆதிபௌதிகம் -
   மற்ற உயிர்களால் வரும் துன்பங்கள்
3. ஆதிதெய்விகம் -
   பஞ்சபூதங்கள், பூகம்பம்
   ஆகியவற்றினால் நேரும் துன்பங்கள்.

இதுவரை இந்துசமயம் இறைவனின் பெருமைகளை எங்ஙனம் கூறியுள்ளது தொடர்பான சில விளக்கங் களைப் பெற்றீர்கள். அடுத்து இந்துசமயம் உயிர்கள் அதாவது ஆன்மாக்கள் தொடர்பான விளக்கங்களை எங்ஙனம் கூறியுள்ளது என்பது தொடர்பான விளக்கங்களை அறியப் பெறுவீர்கள்.

## ஆன்ம ஈடேற்ற வழிமுறைகள்

இந்து சமயம் ஆன்மாக்களைப் பற்றிக் குறிப்பிடும்பொழுது ஆன்மாக்கள் எண்ணிறந்தவை. ஆன்மஈடேற்றம் பெற்ற உயிர்களின் தொகையையும், ஆன்மஈடேற்றம் பெறவுள்ள உயிர்களையும் கணக்கிடு வதனால், அது உலகம் தொடங்கிய காலந்தொட்டு இதுவரை உயிர்கள் பிறந்த நாட்களின் தொகையையும், இனிப் பிறக்கும் நாட்களின் தொகையையும் எண்ணிக் கணக்கிடுவது போலாகும். அதாவது எண்ணில்லாதவை என்பதாகும்.

இந்த ஆன்மாக்கள் மும்மலங்களான ஆணவம், கன்மம், மாயை ஆகிய பாசங்களினால் கட்டுண்டு இருக்கின்றன. இதில் மும்மலங்களின் பிடியிலுள் ளோரை சகலர் என்றும், மாயையை விட்டு இருமலத்தையும் உடையோரை பிரளயாகலரென்றும், ஆணவமல முடையோரை விஞ்ஞானகலரெனவும் வகைப்படுத்தியுள்ளனர்.

மாயை என்ற திரையினால் கவரப்பட்டு செயல் களைப் புரியுமிடத்து கர்வம், மமதை யாவும் உண்டாகும். இவ் இயல்பினையுடைய சகலர் தாம் பாசவலையினுள் இருக்கின்றோமென உணரமாட்டார்.

ஆணவ மலம் இருளைவிடக் கொடியது. இருள் தனது உருவத்தைக் காட்டும். ஆணவம் தனது செயற்பாட்டைத்தான் காட்டும். அது நான், எனது என்ற மமதை அகங்காரத்தை ஏற்படுத்தி செயல்களைச் செய்யத் தூண்டுகின்றது.

உயிர்கள் ஒவ்வொன்றும் வெவ்வேறுவகையான இன்ப துன்பங்களை அனுபவிப்பதற்கு மூலகாரணமே அவர்கள் ஆற்றிய நல்வினை தீவினைகளாகும். இந்துசமயம் முற்பிறவி, இப்பிறவி, மறுபிறவி எனக் கர்ம மறுபிறப்புக் கோட்பாட்டில் அதீத நம்பிக்கை வைத்துள்ளது. இதனை அறிவு பூர்வமாகவும் விளக்குகிறது.

மனித உயிர்களில் சிலர் ஏன் குருடராக, செவிடராக, ஊனக்குறைபாடுகளுடன் இருக்கின்றனர்? செல்வன், பணக்காரன், ஏழை எனவும் ஏன் இருக்கின்றனர். சிலர் தமது வாழ்க்கையில் உரிய கடமைகள், தர்மநெறிகள் ஒன்றையும் தவறாது கடைப்பிடித்தபோதும் அவர்கள் இன்பத்தை அனுபவிக்காமல், அவர்களைத் துன்பந்தான் நிழலைப் போல ஓட ஓட விரட்டிக் கொண்டிருக்கிறது. அவர்கள் காட்டில் திசை தெரியாதவர் போன்று வாழ்ந்து கொண்டிருப்பதற்கான காரணம் யாது? இவை யாவும் ஏன் நடைபெறுகின்றன என எம்மிடையே சிந்தனை எழுவதுண்டு. இதற்கு இந்துசமயம் கூறும் விளக்கம், அவனவன் ஆற்றும் நல்வினை தீவினைகளுக்கொப்ப அவனவன் அதற்கான பலனை அனுபவிக்க வேண்டுமென்பதே. இந்தக் கன்மக் கோட்பாட்டில் மிக அழுத்தம் கொடுப்பது இந்து சமயமே. எவனும் தானே தனக்கு நண்பனும், தானே தனக்குப் பகைவனும் ஆவான் என்ற அசையாத நம்பிக்கை கொண்டது இந்து மதம்.

கர்மத்தின் பளுவின் அழுத்தத்தைக் குறைக்கவே

ஆன்மீகச் செயல்கள் துணைபுரிகின்றன. எனினும் விளையத் தொடங்கிய வினையிலிருந்து எவரும் தப்பவே முடியாது. மனிதனின் நிழலைப் போன்று அது தொடரும். அதனை அனுபவித்தே ஆகவேண்டுமென இந்துசமயம் எடுத்தியம்புகின்றது.

கோவலன் உண்மையாகக் கள்வன் அல்லன். ஆனால் கள்வன் என்று கொலை செய்யப்பட்டான்.

இறைவனைச் சிரத்தையுடன் வணங்கினால் வினையினின்றும் தப்பிவிடலாமென மார்க் கண்டேயரின் வரலாறு எடுத்துக் காட்டுகிறது. மார்க்கண்டேயரின் ஆயுட்காலம் பதினாறு வயது வரைதான். உரிய காலம் வந்ததும் யமன் அவனது உயிரைக்கவர வந்தபொழுது மார்க்கண்டேயன் சிவ பெருமானிடம் அடைகலம் புகுந்தான். சிவலிங்கத்தைக் கட்டிப் பிடித்துக் கொண்டான். மார்க்கண்டேயர் உயிர் பிழைத்து என்றும் பதினாறு வயதுடையவராக வாழ்ந்தார். இறைசிந்தனை உடையவன் மரணத்தினைக் கண்டு பயப்படத் தேவையில்லை என்பதனை இக்கதை உணர்த்துகிறது.

'தெய்வம் நின்று கொல்லும், அரசன் அன்று கொல்வான் என்பது பழமொழி. இதன் பொருளானது அரசன் சாட்சிகளை வைத்துக் கொண்டு தீர்ப்பினை உடனேயே அளித்து விடுவான். ஆனால் அரிதிலும் அரிதாகிய மானிடப் பிறவியெடுத்த உயிர்கள் பிழைகள் செய்தாலும் அவர்கள் பக்குவமடைவதற்கு இறைவன் அவகாசம் அளிப்பார் என்பதே இதன் பொருளாகும்.

உயிர்களின் இயல்பூக்கங்களில் ஆசையும் ஒன்று. ஆசைஅளவுகடந்தால்அல்லலுண்டாகும். எனவேதான் 'ஆசை அறுமின், ஆசை அறுமின், ஈசனோடாயினும் ஆசை அறுமின்' என அருளியுள்ளார்கள். ஆசையை அடக்குவதோ, அறுப்பதோ எல்லோராலும் இயலாத ஒன்றாகும். அதனால் கேடுகள் பல உண்டாகின்றன. ஆசையை நீக்கியோ, குறைத்தோ கேடுகள் குற்றங்கள் உண்டாகாமற் செய்வதற்கு இந்துமதம் வலியுறுத்து கிறது. அது பற்றற்ற வாழ்க்கையையே போதிக்கின்றது. பற்றற்ற வாழ்க்கையாவது 'உள்ளது போதும், வருவது வரட்டும், போவது போகட்டும், மிஞ்சுவது மிஞ்சட்டும்' என்பதில் அமைதி காண்பதாகும்.

உள்ளது போகாது, இல்லாதது வாராது என்பது ஒரு பெரிய உண்மை. ஆகவேதான் எல்லாம் எப்போதோ முடிந்த காரியம் எனப் பெரியோர் கூறினர்.

திருவள்ளுவரும் இதனை ஈரடியில் சிறப்பாகப் பாடியுள்ளார்.

**பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றைப்**
**பற்றுக பற்று விடற்கு (350)**

**நிறைவாக**

நிலையில்லாத உலகப் பொருட்களில் பற்று ஒழிவதற்கு நிலையான இறைவனைப் பற்றி நிற்றல் வேண்டும்.

மனிதன் மனவடக்கம், உண்மைத் தத்துவத்தை அறிதல், வழிபாடு, தொண்டு என்பனவற்றில்

நாட்டம் கொள்ளவேண்டும். இதுவே இந்துசமயம் கூறும் அடிப்படையாகும். இந்து சமய வழிபாட்டில் திருக்கோயில், திருவுருவ வழிபாடு கிரியைகள், அனுட்டானங்கள், இவையாவும் காட்டப்பட்டுள்ளன. அதனாலேதான் பிறநாட்டவர் இந்து சமயத்தை அனுபவ சம்பந்தமுள்ளது என்கிறார்கள்.

"அசையும் உலகிலுள்ள ஒவ்வோர் அசையும் பொருளிலும் இறைவன் நிலைத்து நிற்கிறான். இவற்றின் மேலுள்ள பற்றினை விடுவதன் மூலம் நீ பேரின்பத்தைப் பெற இயலும். எவனுடைய செல்வத்திலும் நீ ஆசை வைக்காதே" இவற்றையே இந்து சமயம் அழுத்திக்கூறுகிறது.

இப்பகுதியில் இந்து சமயக் கருத்துக்கள் சிலவற்றினைத் தெரிவுசெய்து அதன் விளக்கங்களைச் சுருக்கமாகத் தந்துள்ளோம். இவற்றில் அநேகமானவை வாழ்வில்நாம்கடைப்பிடிக்கவேண்டியபண்புகளாகும். அவற்றின் தத்துவார்த்த விளக்கங்களைச் சுருக்கமாகவே தந்துள்ளோம். அவை விரிவாகத் தரப்படவில்லை. அதன் ஆழம் அளப்பரியது; கடல்போன்றது. மேலும் இது தொடர்பான விளக்கங்களுக்கான தேடலைப்பெற இந்த விளக்கங்கள் வாய்ப்பளிக்குமென எண்ணு கிறோம்.

ஓர் அறிவுத்தேடலுக்கான நுழைவாயிலே இது. உள்நுழைந்து பயன் பெறுவீர்களாக!

ஓம் சாந்தி, ஓம் சாந்தி, ஓம் சாந்தி.

2

# மனிதனின் சிறப்பு

எமக்கு இன்பநிலை கிடைக்கும்போது நாம் ஞானம் தொடர்பான தேடலைச் செய்வது குறைவு. ஆனால் துன்பநிலை கிடைக்குமிடத்து ஞானம் தொடர்பான தேட்டம் வருகின்றது. கடலில் ஒருவர் தத்தளிக்கும்போது மிதப்புக் கட்டை தேவைப்படுவதுபோல் துன்பத்தில் உழலுமிடத்துத்தான் கடவுள் துணையாகத் தேடப் படுகின்றார்.

எத்தகைய பலசாலிகளும் துன்பம் அடைகின்றனர். எல்லாவிதமான செல்வங்கள் உள்ளவனும் துன்பம் அடைகின்றான். பணச் செழுமையுள்ளவன் அழுகி ன்றான். சகலவிதமான திறமைகள், ஆளுமைகள் கொண்டவன்கூட சில சமயங்களில் தோல்வியையே சந்திக்கின்றான். பலர் தமக்குப் பதவிகள், அதிகாரங்கள் இருந்தும்கூட அஞ்சிப் பதுங்கி வாழ்கின்றனர். இதற்குக் காரணம் இருக்கும் புகழும், செல்வமும், வசதிகளும், அதிகாரங்களும் போதவில்லை

என்பதே. அதனாலேதான் மனம் அமைதியடையாது ஏன்தான் பிறந்தோமென அலுத்துக் கொள்ளுகிறோம் மனிதர்கள யாபேரும் ஓர் எல்லைவரைதான் செல்ல முடிகிறது. இது மனிதர் யாவருக்கும் பொதுவானது. அப்பொழுதுதான் காலத்தை வெல்ல முடியாது என்ற எண்ணம் தோன்றுகிறது. பிறப்பு எடுத்தோர் யாவரும் இறக்கின்றனர் எனச் சிந்திப்பது மட்டுமேயொழிய ஏன் பிறக்கின்றோம் என ஒரு போதும் நாம் சிந்திப்பதில்லை.

இறப்பினின்றும் விடுபட இளமைக்கு வழி தேடுகின்றோம். சந்தோஷமாக எங்ஙனம் வாழ வேண்டுமென எண்ணுகின்றோம். இவையாவும் மனித முயற்சியேயாகும். மனிதன் இறப்பதிலும் பிறப்பதிலும் ஓர் ஆன்மீக தத்துவம் இருக்கிறது. இறப்பிற்குப் பின் என்ன? பிறப்பிற்கு முன் என்ன? இவ் இரண்டையும் தடுத்துக் கொள்வது எப்படி? இதுவே ஆன்மிகச் சிந்தனை ஆகும்.

மனிதன் தான் செய்த முன்வினையால் கர்மாவால் பிறக்கிறான் என்கிறது இந்து தர்மம்.

வினைப்பயனாலேதான் மனிதன் பிறக்கிறான். ஒவ்வொருவரும் செய்த கர்மாக்கள்தான் அவனவன் வாழ்க்கையில் அனைத்தையும் கொண்டு வரும். இதனை,

**'பிறக்கின்னா முற்பகல் செயின், தமக்கின்னா**
**பிற்பகல் தாமே வரும்!'**

மனிதனுக்கு ஏன் பிறப்புகள் ஏற்படுகின்றனதெனில் அவரவர் முன்செய்த கர்மவினைகளை வாழ்ந்து கழிப்பதற்காகவே. உயிர்கள் தமது இன்ப துன்பங்களை அநுபவித்து வாழ்க்கையை நடத்தப் பிரபஞ்சத்தை இறைவன் படைத்துள்ளான். பிரபஞ்சப் படைப்பே உயிர்களுக்கானதுதான். அறிவில்லாதது சடப்பொருள் ஆகும். அறிவுள்ள உயிர்கள் உலகில் வாழ உடலுடன் வருகின்றன. உயிர் உடம்புடன் இணைவது பிறப்பு எனப்படும்.

கர்மச் செயல்கள் உயிர்களின் அறிவினை மூடியிருக்கின்ற நிலையில் அறிவு குறைவடைந்து, பிறக்கும் உயிர்கள் தத்தமது இயல்புகளுக்கமைய வினைகளின் பலன்களை அநுபவிக்கும். இதனால் ஞானம் அதாவது அறிவு தெளிவு பெற்று வரும். அறிவு தெளியப் பண்பு உயருகின்றது. அந்தப் பண்புக்கமைய பல்வேறு நிலைகளில் பிறவி எடுத்துவரும் உயிர்கள் புல், பூண்டு, விலங்குகளாகி, மனிதனாகப் பரிணாமம் பெறுகின்றது. எனவேதான் உயிர்களில் மனிதப் பிறவி என்பது பாரியதொரு வரப்பிரசாதமாகிறது. அதனையே ஔவையார்,

**அரிது அரிது மானிடராதல் அரிது,**
**அதுவும் கூன் குருடன்றி பிறப்பது**
**அரிதிலும் அரிது.** என்கின்றார்.

ஓரறிவு பெற்ற உயிர்கள் ஈரறிவுபெற்ற உயிர்கள் என பரிணமித்து ஆறறிவுடனான மனிதன் பிறக்கிறான் என்பது டார்வின் பரிணாமக் கோட்பாடு.

மனிதரால் இறைவனுக்கு அளிக்கப் பெற்றதான திருவாசகத்தில் மணிவாசகர்,

**'புல்லாகிப் பூடாய் புழுவாய் மரமாகிப்**
**பல்விருகமாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்**
**கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்**
**வல்லசுர ராகிமுனிவராய்த் தேவராய்ச்**
**செல்லா அநின்றஇத் தாவர சங்கமத்துள்**
**எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன் எம்பெருமான்...**

என மனிதப் பிறவியின் பரிணாமத்தினைத் தெளிவுறப் பாடியுள்ளார். இங்கே மெய்ஞானம் விஞ்ஞானம் இரண்டுமே ஒரே பொருள் சார்ந்த விளக்கங்களையே தந்துள்ளன. உயிர்களிடத்தில் பூரண அறிவும் இயல்புகளும் உள்ளன. பிறவிகள் எடுக்குந்தோறும் அவை தத்தம் அறிவுக்கமைய இயக்கம் கொள்கின்றன. அணுமுதல் அண்டம் வரையில் எல்லாம் அசைகின்றன. அதில் பிணிக்கப்பட்டுள்ள உயிர்களுக்குக் கர்மத்தை விடும் சுதந்திரம் உண்டு என்பது கீதா வாக்கியமாகும்.

ஓயாது தினம்தினம் காய் முதிர்வது போன்று கர்மத்தின் செயற்பாட்டால் மனிதன் அறிவு முதிர்வை அடைகின்றான். எனவே ஒவ்வொருவரும் தத்தமது

கர்மங்களை நியமப்படி செய்வதே நிறைநிலையடைய ஏதுவாகும். கர்மங்களை நெறிப்படி ஆற்றுபவன்தான் கர்மயோகி. அவன் யாவற்றையும் சாதிக்கும் வல்லமை கொண்டவன்.

கர்ம வினைகளின் பயனாகவே மனிதன் பிறக்கின்றான். அவனவன் செய்த வினைகள்தான் அவனவன் வாழ்க்கையில் என்ன பிறப்பு எடுக்கப்போகிறான் என்பதைத் தீர்மானிக்கும். ஒவ்வொரு கர்ம வினைகள் கழியும் பொழுதும் அதற்கமைய அறிவையும் அதற்குரிய பண்புகளையும் பெறும். அந்தப் பண்பே என்ன பிறவி, என்ன இனம் என்பதனை நிர்ணயிக்கின்றது. பண்பிலே உயருமிடத்து உயிரானது மனிதப்பிறவியாக ஆறறிவுடன் பிறக்கிறது. ஆறாம் வகுப்பில் படிக்கும் மாணவன் ஒருவனிடத்தில் ஆறு வகுப்புகளிலும் படித்தவை யாவும் அறிவாக அவனிடம் இருப்பது போன்று, அவன் எடுத்த பிறவிகளின் அத்தனை இயல்புகளும் மனப்பதிவுகளுடன் அனுபவமாக அடிமனத்தில் அவனுடன் இருக்கும்.

ஒவ்வொருவரும் தமது மனத்தைத் தூயதாக்கிக் கொள்வதனால் தேவனாகலாம். மனம், மொழி, செயல் மூன்றையும் ஒன்றாக இணைத்துப் பக்தி வழிபாட்டினை இயற்றுமிடத்து அவனிடம் தெய்வீகம் பிரவாகமாகும். அவனைச் சுற்றி ஒரு கதிர் ஒளியும் பிரகாசித்துக் கொண்டிருக்கும்.

உயிர்களின் பிறப்பின் நுணுக்கங்கள் எத்தகையன என்பதனை ஆராயுமிடத்து அதன் தன்மைகள் வியக்க வைக்கின்றன. ஜனகர், அசுவபதி இருவரும் வாழ்க்கையில் கர்ம நியதிகளைக் கடைப்பிடித்தே ஆன்ம ஈடேற்றம் அடைந்தனர். ஓர் அட்டையானது ஒரு புல் நுனியிலிருந்து எங்ஙனம் மறுபுல்லினை அடைவது போலவும், பழைய சட்டைகளைக் களைந்து இயல்புக்கமைய புதிய சட்டைகளைத் தெரிவுசெய்து அணிவது போலவும் உயிர்கள் அவற்றின் அறிவு பண்பிற்கமைய பிறப்புகள் எடுத்துக் கொண்டேயிருக்கின்றன என்பது இந்து தர்மத்தின் கர்ம நியதியாகும்.

இப்பிறப்பிற்குப் பின் என்ன? பிறப்பிற்கு முன் என்ன? இவ் இரண்டையும் எங்ஙனம் தடுத்துக் கொள்வது என்பதனை விளக்குவதே ஆன்மிகத்தத்துவம்.

ஏற்கனவே நியதிப்படி தீர்மானிக்கப்பட்ட வாழ்க்கை எப்படிப்பட்டது எனத் தெரியாததால் நாம் முயற்சி என்ற பெயரில் அலாதிப்பட்டு நிரந்தரமற்ற இன்பத்திற்காகத் தேடி அலைகின்றோம். முடிவினைத் தடுப்பதற்காகப் பல பகீரதப் பிரயத்தனம் செய்கின்றோம். மாறாக நாம் ஏன் பிறக்கின்றோம் பிறவாமலிருக்க என்ன வழி என்பதனையே நாம் சிந்தித்து நன்நெறிகளைக் கடைப்பிடித்தல் வேண்டும்.

மறுபிறவி தொடர்பான திருக்காளத்தி புராணக் கதையொன்றுள்ளது.

மகாபாரதப் போரில் தர்மம் வெற்றிகொள்ள

வேண்டுமென அர்ச்சுனன் சிவனிடம் பாசுபத அஸ்திரம் பெறுவதற்காகத் தவத்தினை மேற்கொண் டான். அத்தருணத்தில் சிவனும் சக்தியும் சமேதரராக வேடன் வேடுவிச்சி வேடத்தில் வருகின்றனர். முகாசுரன் பன்றி வேடத்துடன் வரும் பொழுது சிவபெருமான் அப்பன்றி மீது அம்பினை எய்கிறார். அதேசமயத்தில் அர்ச்சுனனும் அம்பினை எய்கின்றான். பன்றி வேடத்திலிருந்த முகாசுரன் இறந்துவிடுகிறான். “வேடனே நான்தான் பன்றியை எய்து கொன்றேன். எனவே உனக்கு அதில் உரிமையில்லை” என அர்ச்சுனன் வாதிடும்பொழுது சிவபெருமான் தனது அருட்டிருவுருவத்தினை அர்ச்சுனனுக்குக் காட்டி அருளுகின்றார். சிவனது அருட்டிறனைப் பார்த்ததும் அர்ச்சுனன் சிவனிடம் தன்னை அவரது வலது பக்கத்தில் அமர்த்தும்படி இறைஞ்சினான். சிவனோ, “நீ இப்பொழுது மகாபாரதப் போரில் வெற்றி பெறுவதற்கான பாசுபத அஸ்திரத்தைப் பெற்றுக்கொள். மறுபிறவியில் வேடனாகப் பூவுலகில் அவதரித்து என்னை அர்ச்சித்து வலது பக்கத்தில் இருப்பாயாக” என அருளினார். அர்ச்சுனனே மறுபிறவியில் திண்ணராக வேடுவ குலத்தில் பிறந்து ஆறு நாட்களில் சிவனின் வலதுபக்கத்தில் அமர அருளினைப் பெற்றுய்தான் என்பது வரலாறு. ஒவ்வொருவரும் தத்தம் செயல்களுக்கொப்ப பிறவிகளை எடுத்துத் துய்க்க வேண்டுமென்பதே இந்துசமய தத்துவக் கோட்பாடாகும்.

மனிதர்களாகப் பிறந்தோர் எவரும், ஒரு குறிப்பிட்ட காலத்தின் பின் இறக்கத்தான் வேண்டும். உடல் அழியக்கூடியது. எத்தனையோ ஞானிகள், வகைதொகையான யாகக் கிரியைகளைச் செய்தோர், உலகத்தையே கட்டியாண்டவர்கள் யாராவது இன்றுவரை, உயிருடன் இருக்கிறார்களா? இல்லையே. யாவருமே இறந்து பிறவிப் பெருங்கடலில் தத்தளிக்க வேண்டியவர்களே.

சிபிச் சக்கரவர்த்தி ஒரு புறாவிற்காகத் தன்னையே அர்ப்பணித்தார். அவருடைய ஆட்சியில் கோட்டை, மதில், மாளிகை, வாயில் யாவும் தங்கத்தினால் அமைந்தவை. அநேக யாகங்களைச் செய்தவர் அவர். யாகக் கிரியைகளுக்கான பால், தயிர் யாவும் மடுக்களோடு கூடிய நதியாக இருந்தன. அன்னம் குவியல்களாக மலைகளைப் போலக் காட்சியளித்தன. செல்வம், தர்மம், வைராக்கியம், கீர்த்தி, ஞானம் இவற்றில் சிபிச்சக்கரவர்த்தியை விஞ்ச யாருமேயில்லை. ஆனால் அவரது ஆயுளும் ஒருநாள் முடிந்து போனது. அவர்களது புகழ் என்றும் அழியாதது. எனவே மானிடப் பிறப்பானது ஒரு குறிப்பிட்ட காலத்துக்குத்தான் உரியது என்பதனைப் புரிந்து திடத்துடன், நியதிப்படி வாழ்வினைத் துய்த்தல் வேண்டும்.

**ஆற்றங்கரையின் மரமும் அரசறிய**
**வீற்றிருந்த வாழ்வும் விழும் அன்றே** – *நல்வழி*

யாவரும் சொர்க்கத்திற்குப் போகவே விரும்புவர், ஆனால் எவரும் இறப்பதை விரும்புவதே இல்லை. எனவே ஒவ்வொருவரும் இரண்டு விடயங்களை நினைவில் கொள்ளுதல் வேண்டும்.

ஒன்று, ஒவ்வொருவரினதும் ஆயுளின் முடிவும் நிச்சயம். அதனை எப்போதென்பது தீர்மானிக்க முடியாது,

இரண்டாவது, இறப்பிற்குப் பிறகு ஒரு துளி செல்வம்கூட எம்முடன் வரமாட்டாது.

**காதற்ற ஊசியும் வாராது கடை வழிக்கே** – என்றார் பட்டினத்தார்

இறக்கும்பொழுது எதனை நினைக்கிறாயோ
அதையே மறுபிறவியில் அடைவாய் என்பது கீதா வாக்கியம்.

**யம்யம் வாபி ஸ்மரன் பாவம்**
**தய ஐத்யந்தே கலேவரம் !**
**தம் தமே வைதி கௌந்தேய ஸதா**
**தத்பாவ பாவித:** - *கீதை 8.6*

“குந்தியின் மகனே ! இறுதிக் காலத்தில் எந்தப் பொருளை நினைத்தவாறு ஒருவன் உடம்பை

விடுகிறானோ, எப்போதும் அந்தப் பொருளையே நினைக்கின்ற அவன் அந்தப் பொருளையே அடைகிறான்." என்பது இதன் பொருள்.

இந்து தர்ம தத்துவத்தின்படி உயிர்கள் அதனதன் கர்மவினைகளைத் துய்த்து வாழ்ந்து வாழ்வினைக் கழிக்கவே பிறக்கின்றன.

**கூடொன்றும் அழிந்தால்**
**கூடத் தொடருமோ என்றும்**
**இச்சை பிறப்பினை எய்விக்கும் எனவும்,**
**பிறந்தன இறக்கும், இறந்தன பிறக்கும்,**
**தோன்றின மறையும், மறைந்தன தோன்றும்,**

**மண் அதனில் பிறந்து எய்த்து**
**மாண்டு விழக் கடவேனே – திருவாசகம்**

**முன்னை எத்தனை எத்தனை சென்மமோ**
**மூடனாய் அடியேனும் அறிந்திலேன்**
**இருப்பது பொய், போவது மெய்,**
**என்றெண்ணி நெஞ்சே !**
**ஒருத்தருக்கும் தீங்குதனை**
**உண்ணாதே !** - பட்டினத்தார்

இவ்வாறு மனிதனின் பிறப்புத் தொடர்பாக நீதி நூல்களில் கூறப் பெற்றுள்ளன.

மனிதப்பிறவி ஒன்றிலேதான் உயிர்கள் தம்மையும் இறைவனையும் அறிந்து ஆன்ம ஈடேற்றம் பெற வாய்ப்புகள் உள்ளன. நல்வினைப் பயனால் தேவராய்ப்பிறந்து இன்பம் அனுபவிப்போரும் முக்திப் பேறு வேண்டுமாயின் மண்ணுலகிலே மானுடராயப் பிறப்பெடுத்தல் வேண்டுமென நூல்கள் கூறுகின்றன.

"வானிடத்தவரு மண்மேல் வந்தரன் றனை அர்ச்சிப்பர்" என்பது சிவஞான சித்தியாரில் வரும் கூற்று. மானிடப்பிறவி எடுத்த உயிருக்குக் கீழே உயரறிவு குறைந்தும் சடப்பண்பு கூடியும்செல்லும் பிறவிகள் உள்ளன. உயர் அறிவு கூடியும் சடப்பண்பு குறைந்தும் செல்லும் தன்மை முனிவர் தேவர் முதலான உயர்ந்த பிறவிகளிடத்தில் காணப்படும்.

மனிதப்பிறவி எடுத்த உயிரிடம் மட்டுந்தான் விலங்குப்பண்பு பாதியும் தெய்வப்பண்பு பாதியும் கலந்துள்ளன. எமக்குள்ள பகுத்தறிவுக் கண்ணுடன் ஆற்றும் எமது செயல்களினால் கீழ்நிலைக்கும் போகலாம் மேல்நிலைக்கும் போகலாம். எனவே இப்பிறப்பிலே இறைமுத்தி கைகூடாது போயினும் இனிவரும் பிறவியிலேனும் கைகூடும் என்பது தெளிவு.

✡

3

# முக்குணங்களின் இயல்புகள்

இந்த உலகில் ஊர்வன, பறப்பன, விலங்குகள், மனிதர்கள், தாவரங்கள் என விதம்விதமான உயிரினங்கள் உள்ளன. இவற்றில் எத்தனை எத்தனை பாகுபாடுகள்! செடி கொடி மரங்களில் மருத்துவ குணம் கொண்டவை, உணவாகக் கொள்ளக்கூடியவை, மயக்கம் தருபவை, நச்சுவகை, பாதுகாப்புக்காக வளர்க்கப் படுபவவை எனப் பலப்பல.

சிறியவை, பெரியவை, அழகானவை, கோரமானவை, மணம் குணம் பொருந்தியவை, சுவைகொண்டவை சுவையற்றவை, மலர்ச்செடிகள், முட்செடிகள், என ஏனிந்த வேறுபாடு?

இத்தகைய பகுப்புகள் யாவும் எவரால் வகுக்கப்பட்டன?

இறைவன் ஒருவனால் மட்டுமே இத்தகைய பிரிவுகளை வகுக்க முடியும்.

பொருட்கள் ஒவ்வொன்றினதும் இயல்புகளுக்கு எற்றவாறு அவை வகுக்கப்பட்டுள்ளன. இந்த இயல்புக்குணங்கள் மூன்றாகக் கூறப்படுகின்றன. அவை தாமதம், இராசதம், சத்துவம் எனப்படுகின்றன. இந்த முக்குணங்களும் சமநிலையில் இருக்கும் பொழுது இறைவனின் படைப்புத்தொழில் நடப்பதில்லை. இயற்கையில் சலனம் ஏற்பட அலைகள் எழுகின்றன. இந்த அலைகள் ஏற்படுத்தும் அதிர்வின் காரணத்தினால் குணம் மூன்றாகப் பிரிந்து யாவற்றையும் சஞ்சலப்பட வைக்கின்றது.

முக்குண விகிதங்களின் கலப்பினால் பிரபஞ்சம் (உலகு) படைக்கப்படுகிறது. உயிர் உடம்புடன் கூடி வாழ்க்கை ஏற்படுகின்றது. அறிவில்லாத சடப்பொருளும், அறிவு குறைந்த உயிர்களும் இறைவனால் கட்டுப்படுத்தப்பட்டு உலக வாழ்வியலை நடத்துகின்றன. பிரபஞ்சத்தில் எங்கும் எதிலும் முக்குணங்களின் கலவைகள்தான்! முக்குணங்களின் இயல்பே இல்லாத உயிர் இறைவனால் இயற்கையுடன் இணைக்கப்பட்டவுடன் உயிரானது மூன்று குணங்களைத் தனக்கே உரித்தாக்கிக் கொள்கின்றது.

மூன்று குணங்களின் அளவிற்கேற்பவே சுக துக்கங்களின் அளவும் ஏற்படுகின்றன. இயற்கை உயிர்களின் அனுபவப் பொருளாகிறது.

இதில் மிகவும் தாழ்ந்த குணம் தாமத குணமாகும். நடுத்தரமானது இராசத குணமாகும். சத்துவ குணமே மிகவும் உயர்ந்த குணமாகும்.

உயிர்கள் அவற்றின் கன்மவினை காரணமாக அறிவில் குறைந்த தாமதகுண இயல்புகளுடன் உடல் பெற்று உயிர்த்துவம் அடைகின்றன. இயல்புகட்கு ஏற்ப சஞ்சலமின்றி வாழ்ந்து கன்மவினைகள் வலிமை குறைந்தவுடன் அறிவு தெளிவுபெற இராசத குண இயல்புகளுடனான வாழ்க்கையில் அதற்குரிய உயிர்களாகப் பிறக்கின்றன. இதில் இறைபக்தியுடன் இறையுணர்வுடன் வாழுமிடத்து சத்துவக் குணமுடைய உயிரினங்களாகப் பிறக்கின்றன. இங்ஙனமாக மேலான குணமும் ஞானமும் பெற மனிதப் பிறவி வாய்ப்பாகிறது.

"உயிர்களின் செயல்களின் பலன்களுக்கமைய குணமும் அதனால் ஏற்படும் பகுப்பும் உடையவராகப் படைப்புத் தொழிலைச் செய்கிறேன்" எனக் கீதையில் கிருஷ்ண பரமாத்மா கூறுகின்றார். "மூன்று குணங்களைக் கொண்டே நான்கு வர்ண வகுப்புக்களை நானே உண்டாக்கினேன்" என்கின்றார்.

இம்மூன்று குணங்களும் ஒன்றையொன்று சார்ந்தன வாகவே இருக்கும். ஒன்றையொன்று அடுத்தும், அனுசரித்தும், ஒன்றில் மற்றது கலந்தும் இக்குணங்கள் உள்ளன.

தாமத குணத்தின் வலிமை குன்ற இராசத குணம் தலை தூக்கும். இராசத குணத்தின் இயல்பு மெலிவடைய சத்துவ குணம் மேலோங்கும்.

தாமதம் என்பது இருட்டு. தாமதக் குணத்துடன் இராசதம் மோகம் எனப்படும் பேராசை கொண்ட இயல்பாக மாறிவிடுகின்றது. இராசத குணம் மிகுந்தோர்

தத்தமது வளர்ச்சி உயர்வினையே குறிக்கோளாகக் கொள்வர். இக்குணமானது சாதாரணமாகச் சகலதரத் தினரிடமும் காணப்படும் குணப்பண்பாகும். இவர்களின் செயற்பாடுகளினாலேதான் உலகியற் செயற்பாடுகள் யாவும் நடைபெறுகின்றதெனலாம்.

ஞானியர், கர்மயோகியர் போன்றோரிடம் சாத்வீக குணம் மேலோங்கிக் காணப்படும். இக்குணத்தினைச் சார்ந்தோர் முகத்தில் ஒளிப் பிரவாகம் கொண்ட வராகவும், அறிவு பொருந்தியவராகவும், நம்பிக்கை கொண்டவராகவும், காணப்படுவர்.

சூரியன் உதயமாவது சத்துவக் குணமாகும். சூரியனின் வெப்பக் கதிர்களால் தாகமும், தவிப்பும், எரிச்சலும் உண்டாகும் செயல் இராசத குணமாகும். கிரகணத்தால்பீடிக்கப்படுவதுதாமதகுணஇயல்பாகும். இங்ஙனமாக மூன்று குணங்களும் கலந்தே எங்கும் செயற்பாடுகள் இடம்பெறுகின்றன.

தர்மம் - அர்த்தம் - காமம் எனும் மூன்று விவகாரத்தினாலேதான் முக்குணங்கள் இங்ஙனமாகத் தொழிற்படுகின்றன. சத்துவ குணமுடையவர்தான் ஆன்ம ஈடேற்றம் எய்துகின்றனர். ஈடேற்றம் எய்தினாலும் இவர்களுக்குப் பிறவித் தொடருண்டு.

புறச்சந்தான குரவர்களுள் ஒருவரான உமாபதி சிவாச்சாரியார், சிதம்பர நடராசரைத் தரிசிக்கச் செல்லும் வேளைகளில் பலர் புடைசூழ குடைகொடி ஆலவட்டங்களுடன் தீவர்த்தி ஒளியுடன் செல்வார்.

இதனைப் பார்த்த மறைஞான சம்பந்தர் "பட்டகட்டையில் பகற்குருடு போகின்றது" எனக் கூறினார். அதைக்கேட்ட உமாபதி சிவாச்சாரியார் ராட்சத குணமான நான் - எனது என்ற ஆணவ மமதையினின்றும் விடுபட்டு சத்துவ குணம் மேலோங்கப் பெற்றார். அதன்பின்னரே சைவசித்தாந்தங்கள் பதின்நான்கினுள் எட்டு நூல்களான சித்தாந்த அட்டகம் என்னும் நூல்களை அருளினார்.

கிருஷ்ண பரமாத்மா ஏன் பார்த்தனைத் தெரிவு செய்து கீதையை அவனுக்கு உபதேசம் செய்தார்? போர் புரிவதற்குப் பொருத்தமானவன் பீமன். பீமனிடத்தில் முரட்டுத்தனமான குணம் இருக்கும். எதற்கெடுத்தாலும் கோபம் முனைப்பாக இருக்கும். இத்தகைய குணவியல்பு கொண்டவனுக்கு யோக சாத்திரத்தை உபதேசம் செய்வதால் பயனில்லை. அவன் கேட்கவும் மாட்டான். அதனை அனுஷ்டிக்கவோ மற்றவர்க்கு எடுத்துக்கூறவோ பொருத்தமற்றவன். தர்மத்தை எளிதாக உணர்ந்து அதன்படி நடக்கக்கூடியவன் தர்மன். தர்மனோ சாத்வீக குணம் மிகுந்தவன். அத்துடன் அவனுக்கு எத்தகைய யோக சாத்திரமும் புகட்டத் தேவையில்லை. அவன் வாழ்க்கையில் தர்மநியதிப்படி ஒழுகுபவன். அர்ச்சுனன் இவ்விருவருடைய குண இயல்புகளுக்கும் இடைநடுவில் இருந்தான். விலங்குத் தன்மைக்கும் தெய்வத்தன்மைக்கும் இடைநிலையான மானிடத் தன்மை கொண்டவன் அர்ச்சுனன். அவனிடம் இராசதகுணமும் சாத்வீககுணமும் காணப்பட்டன. அர்ச்சுனிடம் அரசர்களுக்குரிய இராசதகுணமும்

யாத்திரை தவம் ஆகியவற்றோடு இறைவனின் வரம் பெற்றமையால் சாத்வீகக் குணமும் பெற்றிருந்தான்.

தீயனவற்றைக் களைந்து நன்மையில் நிலை பெற்றிருப்பது மானுட வாழ்க்கையின் குறிக்கோள் ஆகும். இதனாலேதான் அர்ச்சுனன் சாதாரண மனிதரின் பிரதிநிதியாகிறான். அதுமட்டுமன்றி மக்களின் பிரதிநிதியுமாகின்றான். எனவேதான் கிருஷ்ண பரமாத்மா மானுடப் பண்பினையுடைய அர்ச்சுன னைத் தெரிவுசெய்து கீதாவுபதேசம் செய்தார்.

ஆலய மகோற்சவங்கள் யாவும் இராட்சத குணம் நிறைந்த அமாவாசை தினம் கழிந்து, வளர்பிறை ஆரம்பித்த பின்னரே இடம்பெறும். வளர்பிறைகாலத்தில் இராட்சத குணம் படிப்படியாகக் குறைந்து சத்துவ குணம் மேலோங்கும்

எமது விசேட தினங்கள், பண்டிகைகள், உற்சவங்கள் யாவும் சத்துவ குணம் மேலோங்கிய பௌர்ணமி தினத்திலேதான் இடம் பெறுகின்றன.

மானிடராகிய எம்மிடத்தே பகுத்தறியும் தன்மை இயல்பாகவே உள்ளது. எனவே குணங் களின் இயல்பினைக்கொண்டு நல்ல பண்பான மனப்பாங்குகளை வளர்த்து நல்நடத்தை கொண்டு வாழுமிடத்து மண்ணில் நல்ல வண்ணம் வளம் பெற்று வாழலாம் என்பதனை எமது சமய நெறிகள் வகுத்தும், தொகுத்தும் தந்துள்ளன. அவற்றை நியதியின்படி கடைப்பிடித்து வாழ்வோமாக.

4

# மனம் எனும் கருவி

**மனமெனுந் தோணிபற்றி மதியெனுங் கோலையூன்றிச்**
**சினமெனும் சரக்கை யேற்றிச் செறிகடலோடும் போது**
**மதனெனும் பாறைதாக்க மறியும்போதறிய வொண்ணா**
**துணையுனுமுணர்வை நல்கா யெற்றியூருடையகோவே**

*(அப்பரடிகள் மனம் எனும் கருவியை எங்ஙனம் பாதுகாக்க வேண்டும் என்பதனை திருவொற்றியூர் சிவபிரானிடம் வேண்டும் திருநேரிசைப் பாடல்.)*

உலகிலேயே மிகவும் கடினமான செயலானது அவரவர் தங்களுடைய மனத்தினை அடக்கும் செயல்தான். மனிதன் மானுடதர்மம் கொண்டவனாக வாழ்வதற்கு உதவுவது மனம் என்ற கருவியின் கட்டுப்பாடேயாகும். மனிதனுடைய பண்பே மனித தர்மமாகும். பூனையின் தர்மம் பூச்சிகள் எலிகளைத் தின்பதுபோல் மனிதனுடைய தர்மம் மனம் எனும் கருவியினைக் கட்டுப்படுத்துவதுதான். மனிதன்

இயற்கையாக எழுகின்ற வேகங்களை மனம் என்ற கருவி கொண்டு கட்டுப்படுத்தாவிட்டால் பலவிதமான பாதகமான விளைவுகள் ஏற்படும். பசி, தாகம், உறக்கம், இனவிருத்தி இவையாவும் மாபெரும் சக்திகளாக மனிதனில் எழுச்சி பெற்று அவற்றினைச் செயலாற்ற மனம் தூண்டப்படுகின்றது. மேலும் விருப்பு, வெறுப்பு இவை ஆசைகளாக ஏற்பட மனிதன் தனது உயிரைக் காப்பாற்றிக் கொள்ளப் பீதியடைவதுடன் அல்லற்படுவான். எனவே எவனொருவன் ஆறாவது அறிவானமனத்தினால்சிந்தித்துஏற்படும்எழுச்சிகளைக் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வருகின்றானோ அவனே மானுடப் பண்பாளன் என அழைக்கப்பெறுவான்.

தனக்குக் கிடைக்கப்பெறும் பலாபலன்களை மற்றவர்களுக்காக விட்டுக் கொடுப்பவன் தியாகி ஆவான். தனக்குக் கிடைக்கின்ற எல்லாவிதமான பலாபலன்களையும் தூய மனத்துடன் யாவும் இறைவனுக்கே என்று வாழுகின்ற மனம் கொண்டவன் பக்தன் என அழைக்கப் பெறுவான். எவனொருவன் மனவெழுச்சிகளினால் ஏற்படுகின்றவைகளை மனம் என்ற கருவி கொண்டு அடக்கி ஆண்டு அவற்றினால் அசைக்க முடியாமல் உறுதியாக வாழ்கின்றானோ அவன் யோகி என அழைக்கப்படுவான். இங்ஙனமாக மனிதனை உயர்நிலைப்படுத்துவது ஆன்மீகப் பாதையில் செல்லும் அவனது மனம் ஆகும். மனத்தின் வலிமை உயர்வாக இருக்குமிடத்து மனிதனது தகைமைகளும் உயரும்.

புலன்களைநாடி எப்போதும் புறத்தேசெல்லும் மனத்தின் ஓட்டத்தைத் தடுத்து அதனை அகம்நோக்கித் திருப்ப வேண்டும். புலனுணர்வுகளான சுவை, ஒளி, ஊறு, ஓசை, மணம் இவை ஐந்து அறிவுகளாகச் சொல்லப்படுகின்றன. உயிரானது உடலெடுத்து பிறவிபெறத் தொடங்கியதிலிருந்து அறிவு ஒவ்வொன்றாகக் கூடிக்கொண்டு வரும். விலங்கு இனத்தில் ஐந்து அறிவுகள் அமைந்துள்ளன. மானிடன் என்ற இனத்தில் மனம் என்ற ஆறாவது அறிவும் சேர்ந்து அமைந்துள்ளது. இதனால் மனிதன் மனம் என்ற கருவியின் துணையுடன் எந்தச் செயலையும் நிதானித்து, சிந்தித்து, செயற்பட முடிகின்றது. மனிதனிடம் விவேகம் என்கின்ற புத்தி பூரண அறிவாக, உருப்பெற்றால் அது ஏழாவது அறிவாகும். இதனை நுண்மதி அறிவு எனவும் வழங்குவர்.

மனிதன், மனம் என்ற கருவி உடையவன் ஆதலால் மனிதன் என்ற பெயரைப் பெற்றவனாகிறான். மனிதனின் மனச் செயற்பாடுகளை நியதிப்படி உயர்த்த உதவுவதே மதத் தத்துவமாகும். அவன் விலங்குப் பண்பாளனாக மாறவிடாமல் இருப்பதற்கு மதநெறிகள் உதவுகின்றன. மனிதன் இன்பம் என்ற சூழலினுள் இருக்க வேண்டுமேயானால் அவனுக்கு உதவுவது மதம். எனவே மதத்தின் தத்துவம் என்பது எதுவோ அதுவே மனதின் தத்துவம் எனலாம். தூய்மைப்பட்ட மனமே இறைவனின் இருப்பிடமாகும்.

மதநியதிப்படியான மனது கொண்டவன் தன்னிடமுள்ள பணத்தையோ, பலத்தினயோ, அன்றி அறிவினையே ஆக்கபூர்வமானதாகப் பலருக்கும் பயன்படும் வகையிலும் வகுத்துக் கொள்கின்றான்.

சுயநலம் என்ற மனதினை கைவிடச் செய்வதும் மததர்ம நியதிகளே.

மனத்தில் படருகின்ற அழுக்குகளை அகற்றி ஞானம் என்ற அறிவொளி ஏற்பட வைப்பதும் மதச்சார்பான செயற்பாடுகளே.

மனிதன் கால்நடை என்று வகுக்கப்படாமல் இருப்பதற்கான காரணம் அவனிடம் மனம் என்ற அறிவு உளது. மனிதனிடம் இருக்கவேண்டிய நடை நாநடையும், மனநடையும் ஆகும். மனநடை அதாவது அவனது நடத்தை நன்றாக அமையுமிடத்து நல்ல பண்புகள் அமையும். மன ஒழுக்கம் பிசகத் தொடங்கினால் நாவொழுக்கமும் பிறழத் தொடங்கும். மனது என்ற உயர்ந்த கருவியைக் கொண்ட மனிதனுக்கு ஏற்றம் கொடுப்பது மனநடையும், நாநடையுமாகும். நாநடையினைக் காத்தல் அவசியமானதாகும்.

இவையாவும் தினமும் பழக்கத்தினால் ஏற்பட வேண்டும் என்பதனை ஔவையார்,

**"நித்தம் நடையும் நடைப்பழக்கம்...'** எனக் கூறுகின்றார்.

நாம் எப்பொழுதும் மனதிற்குத் தூய்மையையும் உறுதிப்பாட்டையும் தரக்கூடிய சொற்களைத்தான் கேட்க வேண்டும். கேட்டவற்றை ஆழ்ந்து சிந்திக்க வேண்டும். ஒருமுகப்பட்டுச் சிந்திக்கும் பொழுது

சிந்தனை வலிமைபெறுகிறது. இதன் விளைவு சாத்வீகமான செயல்களையே ஆற்றுவதற்கு மனம் தூண்டப்படுகின்றது. பிறரிடம் வெறுப்புணர்ச்சி பொறாமை உணர்ச்சியின்றிப் பழக வழிவகுக்கிறது. எனவே அமைதியையும் ஆனந்தத்தையும் பெறுவதற்கு முக்கியமாக மனத்தை உள்முகமாகத் திருப்புதல் வேண்டும்.

மதநெறியின் அடிப்படையே பக்தியும் இறைவழிபாடும்தான். இதனை வழிப்படுத்த மனம் தூய்மை பெற வேண்டும். மனம் நிதானமடைய அமைதியும், சாந்தமும் ஏற்படும். சாந்தமான மனமே இறைவன் குடிகொள்ளும் சாதனம். உள்ளம் தூய்மை யடையாமல் இருப்பது மட்டுமன்றி உள்ளத்தை ஆட்சிசெய்து ஆட்டிப்படைப்பது குணங்களேயாம். இதில் ராசதம், தாமத குணத்தினின்று விடுபட்டு சாத்வீகமான குணத்தினை மேலோங்கச் செய்ய வேண்டும். இங்ஙனமாக சாத்வீகமான குணத்தைப் பேணுமிடத்து அவரவர் மனங்களில் இறைவன் நடுநாயமாக வீற்றிருப்பார். மனது எனும் கருவி செம்மையானால் அதனைக் கட்டுப்படுத்த மந்திரம் தேவையில்லை. மூச்சுப் பயிற்சி செய்யத் தேவையில்லை என்பதனை அகத்தியர் விளக்கியுள்ளார்.

**மனமது செம்மை யானால் மந்திரஞ் செபிக்க வேண்டா**
**மனமது செம்மையானால் வாயுவை வுயர்த்த வேண்டா**
**மனமது செம்மை யானால் வாசியை நிறுத்த வேண்டா**
**மனமது செம்மை யானால் மந்திரஞ் செம்மை யாமே.**

ஒருவரைச் சட்ட நியதிகள் மூலமாகவோ அல்லது அளவுகோல்களின் அடிப்படையிலோ மனித தத்துவப் பண்பாளனாக்க முடியாது. ஆனால் எவரிடத்தும் மதநெறிகளை விளக்குவதன்மூலமும், மத நெறியில் வாழ்ந்தோரின் வரலாறுகளை முன்னுதாரணமாக எடுத்துக் காட்டுவதன் வாயிலாகவும் அவனை மனிதப் பண்பாளனாக்க முடியும்.

ஆலயங்களை நிர்மூலமாக்கிய மன்னர்கள் அதனையே புனருத்தாரணம் செய்த வரலாறுகள் உண்டு.

வழிப்பறிக் கொள்ளையடித்து மூர்க்கத்தனமான வாழ்க்கையை வாழ்ந்தவன், நாரதரின் உபதேசத்தினால் மனம் பண்படுத்தப்பட்டதுடன் வால்மீகி என்ற ரிஷி யாகி இராமபிரானின் சரிதத்தினை எழுதவைத்த பெருமை மதநெறிகளையே சாரும்.

பண்பாடு, கலாசாரம், நாகரிகம், நன்நெறிகள் யாவற்றையும்மனிதஇனத்திற்குஅளித்ததுமதநெறிகளே. மனதிற்கு அமைதிப்படுத்தவல்ல அறுபத்திநான்கு கலைகளையும் எமக்கு அளித்ததுமட்டுமன்றி மனத்திற்கு மற்றவர்களின் உணர்விற்கு மதிப்பு வழங்கியதும் மதமே ஆகும்.

மனிதன், தானதர்மம், அகிம்சை, அழுக்காறின்மை, அவாவின்மை, வெகுளி கொள்ளாமை, இன்னாசொல் கூறாமை, மன்னிக்கும் சுபாவம் இத்தகைய விழுமி யங்களால் பயன்மிக்கவனாக மாறுகின்றான். இது நடத்தையிலும் மாற்றத்தை ஏற்படுத்த வாய்ப்பாகிறது.

மதச்சார்பான நெறிகளே மனிதனின் மனத்தை ஆக்கபூர்வமாக்கி சமூகம் பயன்படும்படியான சேவைகளை ஆற்ற வைக்கின்றது. மனிதன் மத நெறிகளின் தர்மங்களுக்கு உள்ளாகும் பொழுது அவனது மனம் மனச்சாட்சிக்குப் பயங்கொள்கிறது. மனித ஏற்றத் தாழ்வினின்று விலகி சமூக சமத்துவம் பேணவைக்கின்றது. இறைவழிபாடு செய்யுமிடத்து மனம் அகத்தைச் சுத்தமாக்க வைக்கிறது. இதனையே 'அகத்தின் அழகு முகத்தில் தெரியும்' என்பர்.

மதநெறிகளின் மூலம் மனம் செயற்படுமிடத்து மனமானது பௌர்ணமி நிலவு போன்று சாத்வீக மடையும்.

மதநெறியுடனான மனிதனால் மட்டுமே பரந்த மனப்பான்மையுடன்கூடிய விசாலமான பார்வையைப் பார்க்க முடிகின்றது.

**'யத்பாவம் தத்பவதி'**

மனிதனின் மனத்தில் யாதொன்று எண்ணு கின்றானோ, அதுவே ஆகிறான் என்றும்,

**'ஆத்மவத் ஸர்வபூதே'**

எல்லா உயிரும் என்னுயிரே என்றும் கூறுகிறது வேதம். மதநெறி சார்ந்த மனம் உள்ளவரால் மட்டுமே மேற்கண்டவாறு வாழலாம். மதநியதிப்படியும், மனக் கட்டுப்பாடுகளுக்கமையவும் வாழ்வியலைத் துய்த்தவர்கள் இன்றும் சிரஞ்சீவியாக முன்வைத்துப் பேசப்படுகின்றனர். மதநெறிசார்ந்த மனத்துடன்

வாழும் ஒவ்வொருவரும் ஆன்மிகம் என்ற செழுமைப் பாதையில் செல்வர். ஒவ்வொருவரது மனதிலும் ஆன்மிகத் தேட்டம் ஏற்படவேண்டும். மனம் பக்குவப்பட்டு ஆன்மிகம் என்ற தோணியில் ஏறினால் மட்டும் ஆன்மஈடேற்றம் பெற்று கரையேறமுடியும்.

ஆன்மிகத் தத்துவம் மனிதன் இறப்பதிலும் மீண்டும் பிறப்பதிலும் இருக்கிறது. இறப்பிற்கு பின் என்ன? பிறப்பிற்கு முன் என்ன? இவ் இரண்டையும் தடுத்துக் கொள்வது எப்படி? இதன் தத்துவமே ஆன்மிகம். உடலியலும் மனவியலும்தான் ஆன்மிகப் பழக்கவழக்கங்களின் உட்பொருளாக உள்ளன. எனவே திட்டமிட்ட வாழ்க்கையை நடத்த வேண்டுமென்கிறது மதநெறிகள்.

நாம் மனம் மொழி செயல் மூன்றினாலும் தகாதவற்றினைச் செய்தால் அது தீயினைக் காட்டிலும் கொடியது ஆகும். மனமானது தகாத செயல்களை ஆற்ற நினைக்கக்கூடாது. அப்படிச் செய்தால் மனத்தினால் நினைப்பவனுக்குத் தீயவற்றினைச் செய்ய அறம் நினைக்கும்.

எப்பொழுதும் இனிய மொழிகளையே மற்றவர் களுடன் பகிர்ந்து கொள்ளுதல் வேண்டும். இனிய மொழிகளைக் கூறாது தகாத மொழிகளைப் பரிமாறுமிடத்து அது மரத்தில் இனிய சுவை மிகுந்த கனிகளைப் பறிப்பதற்குப் பதிலாகக் காயினைப் பால் வடிய வடியப் பிடுங்குவதற்குச் சமானமாகும்.

மனம் கொண்டு பேசப்படும் மொழி செம்மையாக இல்லாவிட்டால் அது தீயினால் சுட்ட வடுவினை விட நாவினால் சுட்ட வடு போன்றதாகிவிடும். அதனாலேதான் எண்ணத்தைக் காப்பாற்ற முடியாது போனாலும் நாவினைக் காத்தல் அவசியம். நற்சிந்தனையுடன் கூடிய வாக்கினை ‘வசிட்டர் வாக்கு’ என்பர். படைப்புத் தொழிலை ஆற்றுகின்ற பிரமா, தான் நியதியுடனான கிருத்தியத்தினை ஆற்ற வேண்டும் என்பதற்காகவே தனது நாவிலே சரஸ்வதியான சக்தியை உறைய வைத்துள்ளார். மனது சாத்வீகம் சமத்துவமாக இருப்பதற்கு எமது மொழியும் செயலும் தூண்களாகும். எனவே நாம் உயிரினை விட மனம் என்ற கருவியை அழுக்கேறாது பாதுகாப்பாகப் பேணுதல் முக்கியமானதாகும்.

மனத்திலிருந்தே நோய்கள் ஏற்படுகின்றன. மத நெறிகள் மனத்தினை அமைதிப்படுத்தி நோயின் உபாதையைக் குறைக்கின்றன. மனநோயினால் பாதிப்புக்கு உள்ளானவர்களை அமைதிப்படுத்தச் சமயம் சார்ந்த நிறுவனங்களும் மற்றும் மனதினை வளப்படுத்துவற்கான பயிற்சி நிலையங்களும் சேவையாற்றுகின்றன. மனதினாலேதான் மனிதன் நல்லவனாகவும் இருக்கிறான், கெட்டவனாகவும் மாறுகின்றான். உயர்ந்தும் தாழ்ந்தும் போகின்றான். சாத்வீகமான மனம் உள்ள மனிதனே விலங்குப் பண்பினின்றும் விடுபடுகின்றான்.

மனம் எனும் கருவியைக் கொண்டு வெகுளியை முற்றாகவே களைந்து நல்வழியில் செலுத்துமிடத்து நான், எனது எனும் ஆணவப் பெரும்பாறை பிளந்து இறையனுபவம் புலனாகும்.

கண்ணப்பர் காளத்திநாதரின் மீது முழுமனதுடன் வழிபாடாற்றியமையால் ஆறுநாளில் முக்தியும் இறைவனின் வலதுபக்கலில் உறையும் பேற்றினையும் பெற்றார் என்பது வரலாறு.

காரைக்கால் அம்மையார் முழுமனதுடன் சிவனடியாரைப் பூசித்தமையால் இறைவனாலே அவருக்கு மாங்கனி கிடைக்கப் பெற்றது. சிவனிடம் காரைக்கால் அம்மையார் தம்மை முழுமனதுடன் அர்ப்பணித்தமையால் 'அம்மையே' எனச் சிவபிரா னால் அழைக்கப் பெற்றார்.

இவையாவும் எம்மையெல்லாம் ஒரு நேர்த்தியான நியதியுடனான வாழ்க்கையை வாழ வழிகாட்டுகிறன.

ஒருவரது மனமே கோயிலாகும் என்பதனை சிவவாக்கியர் பின்வரும் பாடல் மூலம் விளக்கி யுள்ளார்.

**கோயிலாவது ஏதடா குளங்களாவது ஏதடா**
**கோயிலும் குளங்களும் கும்பிடும் குலாமரே**
**கோயிலும் மனத்துளே குளங்களும் மனத்துளே**
**ஆவதும் அழிவதும் இல்லை இல்லையே.**

திருமூலரும்

**உள்ளம் பெருங்கோயில் ஊனுடம் பாலயம்**
**வள்ளற் பிரானார்க்கு வாய்கோ புரவாசல்**
**தெள்ளத் தெளிந்தார்க்குச் சீவன் சிவலிங்கம்**
**கள்ளம் புலனைந்தும் காள மணிவிளக்கே.**

பூசலார் சிவபிரானுக்கு ஆலயம் அமைக்க விரும்பினார். ஆனால் அவரிடம் அதற்கான செல்வம் இருக்கவில்லை. எனவே தனது மனதிலே ஆலயம் அமைத்து அங்கு சிவபிரானைப் பிரதிக்ஷ்டை செய்து முகூர்த்த நிர்ணயமும் செய்தார். அதே முகூர்த்தத்தில் காஞ்சியில் காடவராஜா சிவபிரானுக்குப் பெரும் செலவில் ஆலயம் அமைத்து பிரதிக்ஷ்டை செய்வதற்கான நாளையும் குறித்திருந்தார். ஆனால் சிவபெருமான் காடவராஜாவின் கனவில் தோன்றி நீ கட்டிய கோயிலுக்கு நாளை நான் வரமாட்டேன். பூசலார் மனதில் கட்டியெழுப்பிய கோயிலில் நான் பிரதிக்ஷ்டையாகப் போகிறேன் என்றார். அவ்வண்ணமே இறைவன் பூசலாரின் மனக் கோயிலில் சென்றமர்ந்தார். பூசலாரின் மனதில் இடம்பெற்ற கும்பாபிஷேகத்திலும் கலந்து அருள்பாலித்தார் என்பது பெரியபுராணம் கூறுகிறது.

எமது கிடைத்தற்கரிதாகிய மானிடப் பிறவியினை மனம் என்ற கருவியின் துணைகொண்டு மண்ணில் நல்ல வண்ணம் வாழவேண்டும்.

மனத்தை அடக்கியதன் மூலமாகவே அரும்பெரும் செயல்களைச் சித்தர்கள் சாதித்துள்ளனர். அவர்களின் செயல்கள் யாவும் நுணுக்கமானவை. அணுவைவிடச் சிறிய உருவத்திலே உலவுவதும், மலையினைப் போல் பெரிய உருவம் எடுப்பதும், உடலினை இலகுவாக்கி நீரின் மேலும் நிலத்திலும் கால்படாது காற்றுபோல் விரைந்து செல்வதும், ஐம்புலன்களுடன் எவ்வித தொடர்புமின்றி இருத்தலும், தோற்றப் பொலிவைக் கொண்டு விளங்குவதும், எளிமையான செயல்களன்றி மிகவும் கடினமான செயல்கள் ஆற்றுவதும் இவையனைத்தும் மனதைத் தமது கட்டுப்பாட்டில் வைத்திருந்ததால் பெற்றவையாகும்.

ஒவ்வொருவருக்கும் மிகவும் கடினமான செயல் தங்களுடைய மனத்தை அடக்கும் செயல்தான். இத்தகைய மனத்தை அடக்கி ஆளுமிடத்து அவர்களிடமிருந்து வாழ்வியலுக்கான நல்வழிகள் கிடைக்கப் பெறுகின்றன.

உயிரினங்கள் அனைத்திலும் மனம் எனும் மாபெரும் கருவியைக் கொண்டிருக்கின்ற ஒரேயொரு சீவன்தான் மனிதன். அதனாலேதான் எத்தனை விஞ்ஞான சக்திகள் ஏற்பட்ட பொழுதும் மனம் எனும் மாபெருங்கருவியினால் மனிதன் சிந்தித்து எது உண்மை எது நிஜமற்றது என்பதனை உணர்த்திக் கொண்டே இருக்கிறான்.

மனம் என்னும் கருவிகொண்டு சிந்தித்து

அபாயங்களினின்றும் தப்பித்துக் கொள்கின்றான். மனம் எனும் கருவியினாலேதான் மனிதன் அன்பு, பண்பு, பாசம் போன்ற உணர்வுகளுக்கும், அறிவு, ஆற்றல், ஆனந்தம் போன்ற தேடலுக்கும் உள்ளாகின்றான்.

முதல் தத்துவமான அந்தக் கரணம் நான்கில் அமைவது, மனம், புத்தி, சித்தம், அகங்காரம் என்பனவாம். மனம் என்பது ஒன்றை நினைப்பது. புத்தி என்பது அது தொடர்பான விசாரணை செய்வது. சித்தம் என்பது தான் விசாரணை செய்தவற்றைச் செய்து முடிப்பது. அகங்காரம் என்பது மனம் எண்ணியதை ஒன்றைக் கொண்டே முடிப்பதாகும்.

இவையாவும் இணைந்து அறிவு என்பதற்கு வழிகோலும். அறிவு என்பது உள்ளம் தன்னைக் கண்டு ஆனந்தம் கொள்ளல்.

மனம் என்பது வாயுவின் அம்சம். நினைத்தல் மறத்தல் இவை இரண்டும் இதன் தன்மைகள். மனம் வாயு அம்சமானதால் சதா வாயுவைப் போலவே அலையும். இதன் அதிதேவதை சந்திரபகவான். புத்தி என்பது அக்னியின் அம்சம். நல்லதையும் தீயவற்றையும் இனம் கண்டு தீர்மானம் எடுக்கும். இதன் தேவதை பிரம்மதேவர். சித்தம் என்பது தண்ணீரின் அம்சமாகும். ஐம்புலன்களுக்கும் சலனத்தைத் தூண்டுவது இது. இதன் தேவதை விஷ்ணுபகவான். அகங்காரம், பூமாதேவியின் அம்சம். சடமாகிய உடலைத் தான் என்று எண்ணி, நான், எனது எனும் குணங்களுடன்

தீயவற்றைச் செய்யும். நல்லதையும் செய்யும். இதன் தேவதை உருத்திரன்.

மனம் எனும் கருவி நுட்பமானது. தொடர்ந்து மாறிக் கொண்டிருப்பது. அதன்மீது பல்வேறு அகப்புறச் சக்திகள் தொடர்ந்து செயற்படும். எனவே மனம் எனும் கருவி மனிதனின் அழியாத தூய, அடிப்படை இயல்பாக மாற முடியாது.

மனத்தையும் கடந்த ஓர் உண்மைப் பொருள் உளது. அதுவே அழியாதது, தூய்மையானது, சுயமாக ஒளிரக்கூடியது. அதுவே மனிதரின் உண்மை இயல்பு. மனதின் அடிப்பாகமே அதன் ஆரம்பமாகும் இடம். இதனைத் தாயுமானவர்,

**'மனமே எங்கிருந்து வந்தாயோ**
**அங்கே போய்ச் சேர்'** என்கின்றார்.

மனதின் அடிப்பாகத்தினை ஆழமாக அமைதியாக நோக்க ஆன்மாவின் தரிசனம் கிடைக்கும். மனம் ஒரே சிந்தனையில் இருக்காமையினால் வேதத்தில் மனதினை குரங்கு எனக் கூறப்பட்டுள்ளது. மேலும் மனம் இச்சையை ஏற்படுத்துவது, எனவே மனதினை ஒரு குறித்த சிந்தனையில் நிறுத்திப் பழகுதல் அவசியம். மனதினை அதன் இச்சைப்படி அலையவிடாமல் இந்திரியங்களில் கட்டுப்பாட்டுக்குள் இருப்பவனே உண்மையானவன். அவனே புருஷன் எனப்படுபவன்.

✡

5

# எண்ணத்தின் வலிமை

எண்ணமானது வலிமைமிக்கது. ‘எண்ணத்தில் வலிமை படைத்தவனே வாழ்வுக்குரியவன்’ எனப் பகவக்கீதை கூறுகின்றது. எண்ணத்தின் வலிமைதான் பாரிய செயற்பாடுகளை ஆற்றுவதற்கு ஏதுவாகிறது. ஒருவனது மௌனமான நிலையிலிருக்கும் எண்ணம் வெகு தொலைவிலுள்ள மக்களையும் கதிகலங்க வைக்கும் சக்தி கொண்டது.

இறைவன் எங்கும் எவற்றிலும் நீக்கமற வியாபித்துள்ளார். இறைவனைக் காணும் பொழுது அவர் எமக்குப் பிரபஞ்சமாகக் காட்சியளிக்கின்றார். இதனை நாம் மாயை அல்லது பொய்த்தோற்றம் என்கின்றோம். சூரியபகவான் உதயமாகும் பொழுது அது செம்மை போன்ற பந்தாகவே தோன்றுகிறது. இது சூரியனின் ஒரு குறைவான தோற்றமே. இங்ஙனமாக எமக்கு ஏற்படும் தீமைகளும் இன்னல்களும் எமது பலவீனமான எண்ணங்களின் வெளிப்பாடுகளே.

நாம் ஒரு நேர்த்தியான நேர்கோடு ஒன்றினை எல்லையில்லாமல் நீட்டிக்கொண்டே போகும் பொழுது அக்கோடானது ஒரு வட்டமாக அமைந்துவிடும். எண்ணமும் அத்தகையதுதான். முதல் தோன்றும் எண்ணம் கோணலாக அமைந்தால் முற்றும் கோணலாகிவிடும்.

நல்ல எண்ணங்களுடன் தத்தமக்குரிய கடமை களையும், இறை வழிபாட்டினையும் ஆற்றுமிடத்து யாவும் நிறைவாகவே இடம்பெறம். எமது எண்ணங்கள் எங்ஙனமோ அவ்வண்ணமே எமது மொழியும் நடத்தைகளும் இடம்பெறும். அகப்புற ஒழுக்கத்துடனும், சத்தியத்துடனும் வாழ்க்கையை வாழுமிடத்து எண்ணமானது வலிமைபெறும்.

எண்ணத்திற்கு வளமும், வலிமையும் தருகின்ற நிலை ஒழுக்கம் ஆகும். மனிதனுக்கு மனிதன் ஒழுக்கம் வேறுபடுவதற்கான காரணம் ஒவ்வொருவரும் புலன்களின் இச்சைச் செயல்பாடுகளுக்குக் கட்டுப் பட்டு ஆசை, கோபம், துன்பம் ஆகியவற்றிற்கு அடிமை யாதல் ஆகும்.

எந்த எண்ணத்திலும் இறையுணர்வு இருக்குமிடத்து அதனால் கிடைக்கப்பெறும் பலன்கள் நிறைவானதாக அமையும்.

பிரதிபலன்களை எதிர்பாராமல் கர்மயோகி போன்று வாழ்க்கைச் செயற்பாடுகளை ஆற்றுமிடத்து எமது மனமும் சஞ்சலமின்றி ஆத்ம பலத்துடன் திகழும்.

நன்மை, தீமை, இன்பம், துன்பம் ஆகியவற்றிற்கு அப்பாற்பட்ட நிலை இறைநிலை ஆகும். நாம் தூய் மையான எண்ணங்களை வலிமைப்படுத்தும்போது எம்மிடத்தேயுள்ள 'நான்' எனது என்ற விலங்குப் பண்பின் பலம் வலியிழந்து மானுடப்பண்பு மேலோங்கும். இத்தன்மை பெற்றவர்கள் உயர்ந்தோர் ஆவர். இவர்களே மற்றவர்களுக்கு முன்னுதாரணமாகத் திகழ்வர்.

பாண்டவர்களை எவ்வகையிலும் இன்னல்களுக்கு உள்ளாக்க வேண்டும் என்ற துரியோதனனது எண்ணங்களின் திரட்சியே மகாபாரப் போரிற்குக் கால்கோளிட்டது. அதர்மமான செயல்களை ஏற்படுத்துகின்ற சகுனியினது எண்ணங்களின் வித்தினை துரியோதனனின் மனத்தில் இளமைப் பராயத்திலேயே நன்றாகப் பதியம் போட்டமைதான் துரியோதனன் மட்டுமன்றி அவனது சகோதரர் யாபேருமே போரிலே மடிதற்குக் காரணமாகியது.

ரிஷிகள் யாபேரிலும் மகரிஷி என்ற ஏற்றம் பெற்றவர் வசிட்டர் ஆவார். அவர் வாயினால் ஆசி பெறுதல் பெரும் சிறப்பாகும்.

வசிட்டர் வாயினால் மகரிஷி என்று கேட்க வேண்டும் என்ற எண்ணத்தினால் விஸ்வாமித்திரர் பல இன்னல்கட்கு உள்ளானார்.

சத்திரியனுக்குரிய இராசதகுண இயல்பினின்றும் நீங்கி சத்துவக் குணமான பிரமஞானம் பெற்றதன்

பின்பே மகரிஷியான வசிட்டர் வாயினால் மகரிஷி என்ற ஆசியைப் பெற்று, யாவராலும் ஏற்றம் கொள்ளக் கூடிய காயத்திரி மந்திரத்தை ஓதினார். எல்லா மந்திரங் களுக்குள்ளும் வலிமையும் சக்தியும் கொண்டது காயத்திரி மந்திரமாகும்.

அந்தணர் பிரம்மோபதேசம் செய்யுமிடத்து காயத்திரி மந்திரம் உபதேசிக்கப்படும். பூணூல் தரித்த அந்தணர் காலையும் மாலையும் காயத்திரி மந்திரம் ஜெபித்தே சந்தியாவந்தனம் செய்தல் வேண்டும்.

அரிச்சந்திரன் தனது எண்ணத்தின் வலிமையால் எப்பொழுதும் உண்மை பேசுபவனாகவும், சத்தியத் தினின்றும் வழுவாதவனாகவும் திகழ்ந்தான். விசுவாமித் திரரோ அரிச்சந்திரன் வாயினால் பொய் உரைக்க வைக்க வேண்டுமென அவனுக்கு ஆற்றொணாத் துயரங்களை அளித்தார். ஆனால் அரிச்சந்திரன் இறுதிக் காலம்வரை இன்னல்களைச் சகித்தானேயன்றி சத்திய தினின்றும் வழுவினானல்லன். நிறைவாக அரிச்சந்திரன் சத்தியத்தினின்றும் வழுவமாட்டான் என்ற ஏற்றத்தினையே பெற்றான். சத்தியத்தைக் கடைப் பிடிப்பவர்களை ‘அரிச்சந்திரன்’ என அன்றும் இன்றும் அழைப்பர்.

மகாத்மா காந்தியடிகள் எப்போதும் அகிம்சையைக் கடைப்பிடிக்கும் எண்ணத்துடன் வாழ்ந்தார். அந்த எண்ணத்தின் வலிமையே அவரை மகாத்மா ஆக்கியது.

அரசரான சித்தார்த்தன் தன் கண்முன் கண்ட மூன்று காட்சிகளினாலேதான் துறவறம் பூண்டார். ஞானத்தை எய்த வேண்டும் என்ற எண்ணத்தின் வலிமையினாலேதான் அவர் புத்தபகவான் என்ற நிலையை எய்தி பௌத்த நெறியினை உருவாக்கினார். நிர்வாண நிலையினை எய்துவதற்கான எண்ணந்தான் அவரை லௌகீக அரசியல் வாழ்வினைத் துறக்க வைத்தது.

பீஷ்மர் தமது அஸ்தினாபுர அரியணையைக் காப்பாற்ற வேண்டும் என்ற எண்ணத்தின் பிரக்ஞையினால்தான் நீதியற்ற செயற்பாடுகள் இடம் பெற்ற பொழுதும் தர்ம நியாயங்களைக் கூட வழங்கத் தவறினார்.

அரியணையைக் காப்பாற்றுதல் என்ற பீஷ்மரின் எண்ணத்தின் வலிமைதான் தமக்குரிய கடமைகளை அவர் ஆற்றுவதற்கான சந்தர்ப்பத்தினைத் தவறவிட வைத்தது.

அர்ச்சுனனின் எண்ணம் முழுவதும் வில்வித்தையில் தான் விற்பன்னனாக வேண்டும் என்பதாகவே இருந்தது. ஒருநாள் அவனது குரு துரோணாச்சாரியார் தனது சீடர்களுக்குப் போட்டி ஒன்றை நிகழ்த்தினார். அதற்கமைய ஒரு மரத்திலிருக்கும் குருவியைக் காட்டி அதனை அம்பினால் யார் எய்து வீழ்த்துகிறார்களோ அவரே சிறந்த வீரர் என்றார். அதன்படி தனது சீடர்களிடம் அவர்களுக்கான இலக்கு என்னவென்று

தெரிகிறதா எனக்கேட்டார். சீடர்கள் பலரும் தமக்கு மரம், கொப்பு, கிளை, இலைகள் யாவும் தெரிவதாகக் கூறினர். அர்ச்சுனன் ஒருவன் மட்டுமே, தான் குறிவைக்கப்போகும் குருவியின் கழுத்திலுள்ள ஆரம் மட்டுமே தனக்குத் தெரிகிறதென்றான். எண்ணத்தைக் குவியப்படுத்தி ஒரு முகமாகச் செயலாற்றவேண்டும் என்பதை இது எடுத்துக் காட்டுகிறது.

பட்டினத்தாரின் செல்வம் முழுவதையும் தான் பெற வேண்டுமென்ற எண்ணத்தினால் அவரது சகோதரி பட்டினத்தாருக்கு அளித்த இன்னல்களோ அதிகம். பட்டினத்தாரோ லௌகீகப் பற்றுக்களையெல்லாம் துறந்து துறவற வாழ்க்கை வாழ்ந்து கொண்டிருந்தார். அச்சமயத்தில் அவரது தமக்கையார் தனது இரு பிள்ளைகளிடமும் ஒட்டிலே நஞ்சினை ஊற்றி சூடான அப்பம் இரண்டினைப் பட்டினத்தாருக்குக் கொடுத்தனுப்பினார். அந்த அப்பத்தைப் பட்டி னத்தார் பார்த்தபொழுது அப்பத்தின் நடுவில் சாண உருண்டை நீல நிறத்தில் காட்சி அளித்ததைக் கண்ணுற்றார். அப்பத்தைச் சாப்பிட்டால் சாணம் கரைந்ததும் அந்த எரி நஞ்சு உள்ளே சென்று ஆளைக் கொன்றுவிடும் என்பதை உணர்ந்துகொண்டார். பிள்ளைகள் தமது தாயை மன்னிக்கும்படி வேண்டினர். பட்டினத்தாரோ பரமன் உங்களது தாயை மன்னிப்பார் எனக் கூறினார். பட்டினத்தார் இரவோடு இரவாகத் தமது தமக்கையாரின் வீட்டுக் கூரையின் மேல் அந்த

அப்பத்தைப் போட்டுவிட்டு,

**“தன்வினை தன்னைச் சுடும்**

**ஓட்டப்பம் வீட்டைச் சுடும்”** என்றார்.

மறுநாள் தமக்கையாரின் வீடு எரிவதான செய்தியினைப் பட்டினத்தார் கேள்வியுற்றார். பட்டினத் தாரின் உயிரை மாய்த்து எல்லாச் செல்வத்தினையும் பெறவேண்டும் என்ற தமக்கையாரின் எண்ணத்தின் வலிமையால், இருந்த செல்வமே சாம்பராயிற்று.

நற்செயல்கட்கு தூய்மையான எண்ணம் வித்தாகிறது. சாதுரியம் நற்செயலை வளர்க்கிறது. உறுதிப்பாடு நற்செயல்களை நிலைபெறச் செய்கிறது. பணிவு அதற்கு வரும் தடைகளை அகற்றுகிறது. எத்தகைய சூழ்நிலையிலும் தர்மநெறி வழுவாது பணிவன்புடன் வாழ்பவன் மலையினைவிட உயர்வான வனாவான். எந்த நிலையிலும் மலை அசையாது நிற்பது போல் அவனது எண்ணமானது வலிமை பெற்று மேன்மையுறும்.

நாம் எக்கருமத்தையும் சிறப்புற ஆற்ற வேண்டும் என்ற எண்ணத்தை வலிமைப்படுத்துவதற்கு ஐந்து கருவிகளை ஆராய்ந்து அதன் வழியே செயலாற்ற வேண்டும். பொருள், கருவி, காலம், செயற்படும் முறை, இடம் இவை ஐந்தையும் தெளிவு பெற்ற பின்னர் எண்ணிய செயற்பாட்டினை நெறிப்படுத்தினால் அதன் பாதை நேர்த்தியாக அமையும். மேலும் எண்ணத்தினை வலிமைப்படுத்தினால் மட்டும் போதாது. செய்யப்

பெறும் செயலினால் சிறந்த பயன்பாடு கிடைக்கும் வண்ணம் அச்செயலை ஆற்றுதல் வேண்டும்.

தினமும் கண்ணாடியின் முன்நின்று நான் காணும் பிரதி விம்பமும் நானும் ஒன்றே என்ற எண்ணம் மனதில் வலிமை பெறுமிடத்து மனிதனின் மனமும் சாந்திபெறுகின்றது. பார்க்கும் பொருளை இரண்டாவது என்ற எண்ணம் கொண்டால் ஆசை ஏற்பட்டு மனது நெறியற்ற செயல்களை ஆற்றவதற்குத் தூண்டப்படுகிறது.

எங்கும் நிறைந்து வியாபித்து இருப்பவர் இறைவன் ஒருவனே என்ற எண்ணம் ஏற்படுமிடத்து மனம் சாத்வீகமடைகிறது. நெறியற்ற செயற்பாடுகளுக்கு இடம் இல்லாமல் போகிறது.

எண்ணங்களின் வலிமையை ஆராய்ந்து அதன்வழி செயல்களை ஆற்றுமிடத்து பலன் மிகுந்து வரும். இதனையே வள்ளுவப் பெருந்தகை,

**“எண்ணித் துணிக கருமம், துணிந்தபின்**
**எண்ணுவம் என்பது இழுக்கு”**

எனப் பதிவு செய்துள்ளார்.

அதுமட்டுமன்றி செயல்களை ஆற்றுமிடத்து வலிமையான எண்ணங்களின் மூலம் பொருள், கருவி, காலம், செயல்முறை இடம் ஆகிய ஐந்தையும் தெளி வாக ஆராய்ந்து அதன்படி செயல்களை ஆற்றுவதன் மூலம் பலன்களைப் பெறலாம்.

துரோணாச்சாரியார் தனது முதற்சீடனாக அருச்சுனனே திகழவேண்டும் என்று எண்ணினார். இதன்காரணமாகவே மானசீகமாகத் தன்னைக் குருவாக ஏற்று வில்வித்தையில் விற்பன்னனான ஏகலைவனின் கட்டை விரலைச் சமர்ப்பணமாகக் கேட்டார். ஏகலைவனும் குருவின்மேல் கொண்ட பக்தியினால் கட்டை விரலை அளித்து மகிழ்ந்தான். எண்ணங்களின் வலிமையினால் ஏனையோர் பாதிக்கப்படாது நாம் நடந்து கொள்ளல் வேண்டும்.

காரைக்காலம்மையார் கயிலைக்குத் தலையினால் நடந்து செல்ல வேண்டும் என்ற எண்ணத்தின் வலிமையால் இறைவனின் திருவாயினால் 'அம்மையே' என அழைக்கப் பெற்றார்.

எண்ணம்தான் யாவரையும் உருவாக்கும். மரம் விதையிலிருந்து வந்தாலும் விதையின் சாயலில் இருக்க மாட்டாது. மரத்தின் சாயலிலே மறுபடியும் உருப்பெறும். எண்ணுவது உயர்வு அதாவது எமது எண்ணங்கள் கால வெள்ளத்திற்கமைய புதிய எண்ணங் களாகக் கிளர்ந்தெழாமல் இருக்குமிடத்து வயது முதிர்வு வரும் முன்னமே உளத்தால் கிழப்பருவத்தை எய்தும் நிலை ஏற்படும்.

இன்று புதிதாய்ப் பிறந்தோம் என்ற எண்ணத்தின் திண்ணமுற நாம் இருத்தலே அவசியமானதாகும்.

✡

# 6

# அறிவே உயர்வானது

உலகெங்கிலும் நடைபெறுகின்ற நிகழ்வுகள் யாவற்றையும் ஒலி, ஒளி, கணினி ஊடகங்கள் மூலம் உடனுக்குடன் கேட்கின்றோம், பார்க்கின்றோம், அறிகிறோம். பல்துறைசார்ந்த அறிவினையும் பெறுகின்றோம். யாவற்றையும் நேரில், அந்தக் களத்தில் நின்று பார்த்து உணர்வதான பிரமையைத் தொழில்நுட்பம் தந்துள்ளது. இன்று உலகையே உள்ளங்கை நெல்லிக்கனி போன்று விஞ்ஞான நுட்பத்திறனும் கணினியுகமும் இணைந்து சுருக்கிவிட்டது.

மானிடர்க்கு மட்டும் இயற்கையினால் கிடைக்கப் பெற்ற பொக்கிஷம் சிந்தித்து, பகுத்தறிவு கொண்டு செயற்பட வைக்கும் ஆறாவது அறிவாகும். இன்றைய விஞ்ஞான தொழில் நுட்பத்திறனால் மனிதன் வேற்றுக்கிரக ஆராய்ச்சியில் ஈடுபடத் தொடங்கியுள்ளான். அதாவது நம்முன்னோர்கள்

கிரகங்கள் நம்மை ஆட்டிப்படைக்கின்றன எனச் சாஸ்திரரீதியாகச் சொன்னவற்றை அவையாவும் உண்மைதானா என்று நேரில் சென்று கிரகங்களை ஆராயும் காலத்தில் மனிதன் வாழ்கிறான். செவ்வாயில் மனிதன் வாழ்வதற்குரிய சூழல் உண்டெனக் கண்டுபிடித்துள்ளான்.

இத்தகைய உலகில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கும் பொழுது எமது சமய நெறியில் கூறப்பெற்றுள்ள தத்துவங்கள், சித்தாந்தங்களை இன்றைய இளந்தலை முறைக்குக் கூறுவதில் நாம் சரியான அணுகுமுறையை அவர்கள் ஏற்கும் முறையினைக் கையாள வேண்டும்.

எமது வேதங்கள், புராண இதிகாசங்கள், தர்ம சாத்திரங்கள் கூறும் உண்மைகளை இன்றைய தலைமுறையினர் ஏற்றுக்கொள்ளும்படி நாம் கூற வேண்டியுள்ளது. இன்றைய இளந்தலைமுறையினர் எவற்றிலும் அறிவியல் துணையுடன் ஆராய்ச்சி செய்து வினாக்களை எழுப்பி, விவாதங்களை முன்வைத்தே முடிவுகளை எடுக்கின்றனர். எனவே அவர்கள் கேட்கும் வினாக்கட்கு உரிய நியாயங்களுடன்தான் நாம் அவற்றை விளக்குதல் வேண்டும்.

எவற்றையும் இதுதான் சரி, இங்ஙனமாகவே நடந்தது, இதனை இப்படியே ஏற்றுக் கொண்டுதான் ஆக வேண்டும், இது வேதவாக்கு என்றெல்லாம் கூறித் திணித்தல் ஆகாது. நாம்கூறுபவை அவர்களது சிந்தனைத் திறனுக்குத் தூண்டுகோலாக அமைய வேண்டும். அவர்களிடம் அறிவுச் சுடர் உளது. உரிய

முறையில் தூண்டினால் போதும்.

ஆலயம் வலம் வருதல் வேண்டும் என்று கூறுவதை அவர்களிடம் விஞ்ஞான விளக்கமாகக் கூறலாம். ஆலய வீதி ஒரு வட்டம் என்றால் அதன் மையப்புள்ளியில் அமர்ந்திருப்பவன்தான் இறைவன். வட்டத்தின் மையப் புள்ளியிலிருந்து வட்டத்தின் எந்தத் தூரமும் சமமானதாகும். எனவே ஆலய வழிபாட்டில் இறைவன் மையப்புள்ளியில் இருந்து எம்மை ஆகர்ஷிக்கிறான் என்பதை விஞ்ஞான ரீதியாக எவரும் ஏற்றுக் கொள்வர்.

மாதா பிதா குரு தெய்வம் என்பது ஆன்றோர் வாக்கு. மாதா பிதாவைக் காட்டுகிறார் பிதா, குருவிடம் அண்மிக்கின்றார். குருவானவர் பிள்ளையின் அறிவுக் கண்களைத் திறந்து உலக அறிவுடன் இறை தொடர்பான அறிவையும் அளிக்கின்றார். எனவே இங்கே அறிவே தெய்வமாகின்றது.

வேத உண்மைகள் யாவும் வேதத்தின் இறுதிப்பிரிவான உபநிடதத்தில் வினாவிடை மூலம்தான் அளிக்கப்பட்டுள்ளன. உபநிஷதம் என்றால் மாணவன் குருவிற்கு அண்மையிலிருந்து தனக்கு ஏற்பட்ட சந்தேகங்களை வினாவெழுப்பி குருவிடம் விளக்கம் பெறுவதன்மூலம் தீர்த்துக் கொண்டான் என்பதாகும். இற்றைக்கு 3500 ஆண்டுகட்கு முன்பே உபநிடதத்தில் அறிவியல் தொடர்பான வினாக்களே குருவிடம் கேட்கப்பட்டன. ஆனால் அன்றைய காலத்தில் தன்னை இயக்கிய சக்தியையும், அச்சக்தியை இயக்குவது யார் என்பது போன்ற

வினாக்களுமே இடம்பெற்றுள்ளன. ஆனால் இன்று அறிவு நுண்மதிகொண்டு அவர்களால் எழுப்பப்படும் வினாக்கள் வித்தியாசமானவை; நுட்பமானவை. வேதம் என்ற பதம் 'வித்' என்ற வினையடியினின்றும் தோன்றியது. வித் என்றால் அறிவு எனப் பொருள்படும்.

எமது சமய நெறியின் குறிக்கோளானது நாமெல்லாம் சிவலோகமோ, அல்லது வைகுண்டமோ அடையவேண்டும் என்பதாகும். இதனை ஒவ்வொரு மானிடப்பிறவி எடுத்தவனும் எண்ணியெண்ணி அரிதாகக் கிடைத்த மானிட வாழ்வினைச் சரியான வழியில் வாழவேணடும். பிறப்பு என்பதிலும் எமக்கு சுதந்திரம் இல்லை அங்ஙனமே இறப்பது எப்போது என்பதிலும் எமக்குச் சுதந்திரமில்லை. இதனை அறிவியற் கண்கொண்டு யதார்த்தமாக வாழப் பழகிக் கொள்ளுதல் வேண்டும். எமது பிறப்பு இறப்பு இரண்டையும் தீர்மானிப்பதே இறைசக்தி. அந்தச் சக்திதான் தீர்மானிக்க முடியும். வேதத்திலே கூட அறிவொன்றே தெய்வம் என்று ஓதப்படுகின்றது. இதனைப் பாரதியார்,

**ஆயிரம் தெய்வங்கள் உண்டென்று தேடி**
**அலையும் அறிவிலிகாள் – பல்**
**ஆயிரம் வேதமும் அறிவொன்றே தெய்வம்**
**என்று ஓதல் கேளீரோ?**

இறைவன் எங்கும் எதிலும் இருக்கிறான். எங்கும் இருப்பது அறிவொன்றேதான் அதனாலேதான் அறிவே தெய்வம் எனப் பாரதி அழுத்தமாகப் பாடியுள்ளான்.

எங்கும் எதிலும், எவற்றில், எதனோடும் இணைந்து செயற்படுவது அறிவு ஒன்றுதான்.

எமது சமய வழிபாடுகள், ஆராதனைகள், சடங்குகள் போன்றவற்றின் தாற்பரியத்தினை அறிந்து தெளிவு பெற்றதன்பின் அதனைச் செயற்படுத்துமிடத்து அதன் பலன் அளப்பரியதாகும்.

எமது இளந்தலை முறையினர் எம் மூதாதையரால் சாதிக்க முடியாத சிலவற்றைத் தமது சிந்தனை ஆராய்ச்சி நுண்மதித்திறனுடன் நுணுகிச் சாதித்து வருகின்றனர். சமய விளக்கங்களைத் தெளிவான முறையில் அவர்களுக்கு விளக்குமிடத்து அதனைத் தர்க்க ரீதியாகச் சிந்தித்து அவர்கள் ஏற்றுக்கொள்வர். எனவே எதனையும் அறிவுக் கண்ணுக்கு உட்படும்படி மாற்றிவிட்டால் எதிர்காலச் சந்ததியினர் எமது சான்றோர் கூறிச் சென்ற மூதுரை, நன்னெறி, முதலியவற்றை அறிவியற் பார்வையுடன் அவற்றினை நடைமுறைப்படுத்துபவர். அவர்கள் அகலப்பார்வையுடன் சிந்தனைத் திறனும் கொண்டவர்கள். இதனால் ஒவ்வொருவனும் தனக்குரியவனாகவும், மற்றவர்கட்கு உதவுபவனாகவும், சமூகத்திற்கு தேவைப்படுபவனாகவும் மாறிவிடுவான்.

எந்தத் தெய்வங்களின் திருக்கரங்களைப் பார்த்தாலும் கட்டை விரலும் சுட்டு விரலும் இணைந்து காட்டப்பட்டிருக்கும். இதில் கட்டை விரல் நேராகவிருக்கும் ஆட்காட்டி விரல் வளைந்து கட்டை விரலைத் தொட்டுக் கொண்டிருக்கும். இது தொடர்பாக ஒரு புராணக்கதையுண்டு. சிவபிரான்

கல்லால மரத்தின்கீழ் வீற்றிருந்தார். அவரிடம் நான்கு முனிவர்களான சனகர், சனாதனர், சனந்தனர், சனத்குமாரர் ஆகியோர் 'தாம் யாவற்றையும் கற்றுத் தேர்ந்துள்ளோம் எனினும் ஏன் ஞானம் அதாவது அறிவினைப் பெற முடியவில்லை' என வினவினர். அதற்குச் சிவபிரான் ஞானத்தை நாவினால் பகரமுடியாது. அது அவரவர்களால் மட்டுமே பெறமுடியும் என்பதனைக் கட்டைவிரலுடன் சுட்டுவிரலை இணைத்து சின்முத்திரை என்ற வடிவினைக் காட்டினார். இதில் ஒரு தத்துவமுளது. கட்டைவிரல் இல்லாவிட்டால் எதனையும் செய்ய முடியாது. சுட்டுவிரல் எப்போ கட்டை விரலுடன் இணைகின்றதோ அப்பொழுதுதான் ஞானம் கிடைக்கப்பெறும். எப்பவும் கட்டைவிரல் மற்றைய நான்கு விரல்களுடன் இணையாமல் இருக்கும். அதுவே இறைசக்தியாகும்.

ஞானத்தை எமக்கு அளிப்பவள் சரஸ்வதி, செல்வவளம் அளிப்பவள் மகாலட்சுமி, வீரம் அளிப்பவள் சக்தியாவாள் என்பது எமது சமயநெறி விளக்கமாகும்.

பெண்கள் பின்னலை மூன்றாகப் பிரித்துப் பின்னுவர். இரண்டு இழைகள் மட்டும் தெரியும் மூன்றாவதான இழை தெரியமாட்டாது. அறிவு என்பது அவர்களுக்குள்ளேயே உளது. அவரவர்களால் மட்டுமே வெளிக் கொணரலாம். பிரமாவிற்கு உரியவள் சரஸ்வதி. அவள் பிரமாவின் நாவில்தான்

உறைந்துள்ளாள். இவ் விளக்கங்களை நாம் தெளிய வைக்குமிடத்து கேட்பவர்களிடம் அறிவைத் தேடல் வேண்டும் என்ற சிந்தனை உருவாகும். தேடல் என்ற எண்ணத்தை விதைக்குமிடத்து அறிவானது ஆன்மநேயத்துடனான அறிவினைப் பெறவிழையும்.

எமது சமயத் தத்துவப் பொக்கிஷங்களாகத் திகழும் வேத புராண இதிகாசங்கள், அறிஞர் மகான்களின் வாக்குகள் அவ்வக் காலத்திற்கு இசைந்தவாறு பதிவுகள் ஆகியுள்ளன. இவற்றினை அறிவியற் கண்கொண்டு நோக்குமிடத்து எமது பாரம்பரியமான கலாசாரப் பண்புகளுடன் கூடிய அறிவுச்சுடர்களை உருவாக்க முடியும். எனவே எமது இளந்தலைமுறையினரைச் சரியான நியதியான வழியில் வளமான வாழ்வினை வாழ வழிவகுப்பது எமது பொறுப்பாகும்.

எந்த வழிபாடுகளையும் வினாக்களை எழுப்பி விடை பெற்றதன்பின் தெளிவு பெற்று வழிபட்டால், அது பூரண வழிபாடாக அமையும்.

**அறிவினான் ஆகுவது உண்டோ பிறிதின்நோய்**
**தம்நோய்போல் போற்றாக் கடை.** *(தி. கு.315)*

அறிவுடையோர் மற்றவர்க்கு உண்டாகும் துன்பத்தைத் தமது துன்பமாகக் கருதி அதனை நீக்காவிட்டால் தர்மம் பெற்ற அறிவினால் வரக்கூடிய பலன்கள் எதுவும் இல்லை. மனிதன் பெறுதற்குரிய பேறுகள் எல்லாவற்றிலும் தலையாயது அறிவுப் பேறு

ஒன்றே. அறிவுடையோர் உலகத்தின் நடைமுறை களையும் அறிந்து அதனோடு பொருந்துமாறு நடத்தல் வேண்டும். அறிவு என்பது எப்பொழுதும் அழிவு வராமல் காக்கும் கருவியாகும். அதுமட்டுமன்றிப் பகைவராலும் அழிக்க முடியாத அரணாகும். மேலும் மனத்தை அது போன இடமெல்லாம் போக விடாது தடுத்துத் தீமையினின்றும் நன்மைவழியில் செல்ல விடுவது அறிவேயாகும். எச் செய்திகளை யார் யார் வாய்க் கேட்டாலும் அச்செய்திகளின் உண்மையினை அறிவுக் கண்கொண்டு செயற்படுத்துவதே உண்மை யான அறிவாகும். எங்கும் எதிலும் அறிவுடை யோர் உயர்ந்த கருத்துக்களை தெளிவுபெறக் கூறுவதுடன் ஏனையோர் கூறுபவற்றிலிருந்தும் தெளிவுபெறுவர். சான்றோர்கள் எவ்வழியில் ஒழுகினார்களோ, அவர்களைத் தன்னுடையவர்களாகக் கருதி அவர்களின் வழியில் ஒத்து நடப்பதே அறிவுடைமை. அறிவுடை யோர் அஞ்ச வேண்டியவைகட்கு அஞ்சுவதும், தனக்கு இனி நடக்கவிருப்பதை கண்டறியும் ஆற்றலும் உடையவர்கள். இதனால் அறிவுபெற்றோர் தமக்குப் பெருந்துன்பம் ஏற்படுவதை எதிர்கொள்ளமாட்டார்.

**அறிவுடையார் எல்லாம் உடையார், அறிவு இலார்**
**என்உடைய ரேனும் இலர்.** *(தி. கு. 430)*

அறிவினை முதன்மையாகக் கொள்பவர்கள் எல்லாம் பெற்றவர்களாவர். ஆனால் அறிவினைப்

பெற விரும்பாதோர் எல்லாம் இருந்தும் ஒன்றுமே இல்லாதவர்போல் ஆவர். அறிவுக் கண்ணுடையார் மட்டும் அகவாழ்விலும் வெற்றி பெறமுடியும். இதனை அருணகிரிநாதர் - திருப்புகழில் பின்வருமாறு கூறியுள்ளார்.

**அறிவா லறிந்து னிருதா ளிறைஞ்சும்**
**அடியா ரிடைஞ்சல் களைவோனே;**
**அறிவை யறிபவ ரறியு மின்பந்தனை;**
**அறிவினிற் சென்று செருகுந் தடந் தெளிதர;**

ஆன்மிகம் சார்ந்த அறிவுத் தேடலேதான் வெற்றியைத் தரும் என்பதனை அரசியல், சமயம் சார்ந்த மகான்களின் வரலாறுகள் எடுத்துக் கூறுகின்றன. மகாத்மா காந்தியின் சத்திய சோதனைதான் அவரை மகாத்மா ஆக்கியது. ஹிட்லரின் அரசியல் வெற்றிக்குக் காரணம் அவரது கொடியில் தர்ம தேவதையான சுவஸ்திகாவின் அடையாளம் பொறிக்கப்பட்டிருந்தது. அத்தோடு அவர் ஊன் உண்பதைத் தவிர்க்கும் உணவுக் கட்டுப்பாடு உடையவராகவும் இருந்தார்.

எனவே யாம் ஒவ்வொருவரும் எப்பொழுதும் உணர்வுக்கு முதன்மை அளிக்காது அறிவினைப் பிரயோகம் செய்து சுபிட்சமுடைய வாழ்வினை வாழ்வோமாக.

✡

7

# பகுத்தறிவு என்றால் என்ன?

இந்து சமயி ஒருவரது வாழ்வின் லட்சியம் அல்லது குறிக்கோள் என்ன என்ற வினாவினை எழுப்பினால், அதற்கான பதில் ஆன்ம ஈடேற்றம் அல்லது முத்தியடைதல், அல்லது பிறவிப்பிணியினின்றும் விடுதலை பெறுதல் என்றே சொல்வர். இதனை நிறைவு பெறாத வாழ்க்கையினின்றும் விடுதலை, வாழ்க்கையின் இன்னல்களின்றும் விடுதலை, பிறவி எனும் பிணியி னின்றும் முத்திபெறல் என்றும் கொள்ளலாம். நாம் ஒவ்வொருவரும் இங்ஙனமான எண்ணங்களினால் உழல்வதற்கான அடிப்படைக் காரணமாக இருப்பது லௌகீக உலகினில் அமிழ்ந்தது மட்டுமன்றி தேவைகளைப் பெருக்கி ஆசைகளுக்கு அடிமையாகி நாமே நமக்குத் தளைகளை ஏற்படுத்திக்கொண்டமைதான். எனவே, ஒவ்வொருவரது நிலைமைக்கும் அவரவரேதான் காரணகர்த்தாவேயொழிய இரண்டாமவரின்

சம்பந்தமோ பங்களிப்போ அதில் இல்லை. நம்மைக் கட்டி வைத்திருப்பது எது? நாமே நம்மைக் கட்டிவைத்துக்கொண்டு இயற்கையுடன் பின்னிப் பிணைந்துள்ளோம் என்பதுதான் உண்மை.

பிரபஞ்சமே காரண காரிய விதிகளினால் கட்டப் பட்டிருக்கிறது. எமது அக வாழ்விலோ அன்றிப் புறவாழ்விலோ எந்த உண்மையும் இல்லை. சாவே இல்லாமல் வாழ்வு ஒன்றுதான் என்றால் அது முடியாது எங்ஙனம் இவ்வுலகிற்கு வந்தோமோ அங்ஙனமாக என்றோ ஒருநாள் போயே ஆகவேண்டும். எமக்கு நோய்பிணி வராமல் இருப்பது நல்லது. ஆனால் எம்மால் நோய்பிணி வருவதைத் தடுக்க முடியாது. எமக்கு ஏற்படும் ஆசைகள் தேவைகள் யாவற்றிலும் வெற்றிபெற வேண்டுமென எத்தனிக்குமிடத்துத் தோல்வி அடைந்தால் துன்பச் சுழற்சியினால் இன்னல் அடைந்து சோர்வு அடைந்து எவ்வித எத்தனிப்பையும் செய்யாது விடுகின்றோம்.

எமது அந்தக் கரணங்களான மனம், புத்தி, சித்தம், அகங்காரம் இவற்றினைப் பகுத்தறிவுக் கண்கொண்டு எச் செயலையும் ஆற்றுமிடத்து எமது ஆசைகளை வரையறைக்குள் கொண்டு வரலாம். இதனால் கிடைக்கப்பெற்ற அரிதான மானிடப் பிறவி தன்னைத் துன்பச் சுழற்சிக்குள் அகப்படாமல் சாத்வீகப் பண்புடன் செயற்பாடுகளை ஆற்ற முடியும். எல்லாச் செயல்களுக்கும் அடிப்படையாகத் திகழ்வது ஆசைதான்.

ஆசை மோகமாக மாறக்கூடாது.

அசுவத்தாமன் அதர்ம நிலைநின்ற துரியோதனனை நண்பனாகக் கொண்டமையை தந்தையான துரோணாச்சாரியார் ஏற்றுக்கொண்டார். மகன் அசுவத்தாமன் மீதுகொண்ட பாசம் மோகமாக மாறியமையே அதற்கான காரணமாக அமைந்தது. அசுவத்தாமன்மீது அவர் கொண்ட மோகமே அவர் பாரதப் போரினின்றும் விலகவும் நேரிட்டது. அதுவே அவரது இறுதி முடிவாகவும் அமைந்தது.

**இம்மை செய்தது மறுமைக்கு ஆம் எனும்**
**நல்லது செய்தல் ஆற்றீர் ஆயினும்**
**அல்லது செய்தல் ஓம்புமின்**

என்கிறது புறநானூறு.

இங்ஙனமாக வாழவேண்டுமெனில் பகுத்தறிவுடன் வாழும் முறையினைக் கடைப்பிடித்தேயாதல் வேண்டும்.

பகுத்தறிவு என்றால் என்ன? இதன் அடிப்படையாக அமைபவை யாவை? அவற்றினை எங்ஙனம் நாம் பின்பற்ற வேண்டும்? என்பது தொடர்பான விளக்கங்கள் இப்பகுதியில் கூறப்பெறுகின்றன.

பகுத்தறிவு ஆனது இயற்கையை வெற்றி கொள்ள உதவுகிறது. மனிதனின் நம்பிக்கையை அடிப்படையாகக் கொள்ளாது அறிவை அடிப்ப டையாக்கக்கொண்ட சிந்தனை முறைதான் பகுத்தறிவு முறையாகும்.

பகுத்தறிவு என்ற பதம் கூறும் விளக்கமானது ஆறாவது அறிவினைக் கொண்ட மானிடப் பிறவியினரான யாம் எல்லோரும் இவ் அறிவினை உரியமுறையில் பிரயோகித்தல் வேண்டும் என்பதாகும். ஒரு சிசுவானது பூவுலகில் வரும்பொழுது எந்த வகை யான செயற்பாடுகளுமின்றி, எதுவிதமான கருவிகளு மின்றி, அரையில் ஒரு சிறுதுண்டு துகில்கூட இல்லாத நிலையில் வருகிறது. அது தாயின் கருவறையினின்றும் வெளியே வரும்பொழுது அழுகை ஒலியினைத்தான் தருகின்றது. இந்தச் சிசு எவ்வித செயல்களையும் ஆற்றவில்லை. ஆனால் அந்தச் சிசுவின் முதல் ஒலி அழுகைதான். இந்த அழுகை ஒலிக்கு ஏதோ ஒரு காரணமுள்ளது. இதன் காரணத்திற்கு அடிப்படை முன் செய்த வினையின் விளைவேயாகும். இதனை ஆய்ந்து நோக்கும்போது நாம் முன்பு எங்கோ என்றோ இருந்திருக்கின்றோம், செயற்பாடுகளையும் ஆற்றியுள்ளோம் என்பது தெளிவாகும். ஒவ்வொருவரது வாழ்க்கைக்கும் அடிப்படையாக அமைவது அவர்களால் ஆற்றப்பட்ட கர்மாக்களே. இதனை நாம் விதி என்றோ அல்லது ஊழ் என்றோ கூறுவது பொருத்தப்பாடாகாது. ஒவ்வொருவரது வாழ்க்கையும் முன் வினைகளின் பயன், அவரவர்களின் கர்மாக்களின் விளைவு என்றே கருத வேண்டும்.

இராமாயணத்தில் இராமன் என்ற பாத்திரம் வாயிலாக விஷ்ணுபகவான் இதனை எடுத்துக்

காட்டியுள்ளார். இராமன் சீதையைத் திருமணம் செய்து சீரும் சிறப்புடன் அயோத்தி அரசினை ஆளாது பதினான்கு வருடகாலம் வனவாசத்தில் கழிக்கின்றான். அதாவது மனிதனின் இரண்டாவது படிநிலையான கிருகஸ்தன் நிலையினை வனவாசத்தில் கழிக்கின்றான். முன் வினையின் பயன் காரணமாகத்தான் இராமனுக்கு இந்நிலை ஏற்பட்டது.

கிருஷ்ணபகவான் தேவகி வயிற்றில் உதித்தாலும் அவரால் தமது சொந்தப் பெற்றோரிடம் வாழக் கொடுத்து வைக்கவில்லை. இவற்றையெல்லாம் காத்தற் கடவுளரான விஷ்ணுபகவான் தனது அவதார நிலைநின்று எமக்குக் காட்டியுள்ளார்.

இதனையே பழந்தமிழ் இலக்கியங்களிலும் காண முடிகின்றது.

**தினை விதைத்தவன் தினை அறுப்பான்**
**வினை விதைத்தவன் வினை அறுப்பான்**
**தீதும் நன்றும் பிறர் வாரா**
**விளையத் தொடங்கிய வினையினின்றும் தப்ப முடியாது.**

நாம் எங்ஙனம் பிறவிப்பிணி என்ற பெருங்கடல் சங்கிலித் தொடரினின்றும் விடுபடுவது என்பதனைப் பகுத்தறிவுக்கண்கொண்டு ஆராயவேண்டும். அதற்கான விடையும் எமக்குள்ளேதான் இருக்கிறது. அளவுக்கு மிஞ்சினால் அமிர்தம் நஞ்சாக மாறிவிடும். ஆசை இருக்கலாம். அது மோகமாக மாறிவிடக்கூடாது.

நாம் பிறிவித்துயரினின்றும் விடுபடச் செயற்பாடுகள் அவசியமானது. ஆகாமியக் கர்மாக்களை அறத்தினின்று ஆற்றவேண்டும்.

'நாம் வந்தவாறு எங்ஙனோ போவாமாதென் அங்ஙனமே' என்பதனை நினைவில் கொள்ள வேண்டும். நாம்நடமாடும்இம்மாயாவுலகுஒருதரிப்பிடமே. இங்கு நாம் எமது தளைகளின் பளுவினைக் குறைப்பதற்கான செயற்பாடுகளில் ஈடுபடுதல் அவசியம். அதற்காக எந்நிலையிலும், பகுப்பாய்வு கொண்டு உண்மை என்ற தாற்பரியத்தைக் கடைப்பிடித்தல் அவசியமாகும்.

பகுத்தறிவு கொண்டு நாம் புலன்களுக்கு அடிமையாக மாறக்கூடாது. இதனைக் கூறுவதனால் யாவற்றையும் வெறுத்துத் தள்ளுதல் என்பதல்ல. நாம் பார்த்தவை, பார்க்காமல் இருப்பவை, நடந்தவை, நடக்க இருப்பவை, கேட்டவை, கேட்க இருப்பவை, வசித்தவை, வசிக்கப் போவவை, இவை யாவற்றையும் புலன்களுக்கு அடிமையாகி இவை பற்றிப் பேசுவது, நடப்பது என்பவற்றிலேயே எமது வாழ்நாட் பகுதி களைக் கழித்து விடுகின்றோம். இந்த நடைமுறைப் பழக்கத்தினின்றும் நாம் விடுபடுமிடத்து எமது மனம் விருப்பு, வெறுப்பு, இன்பம், துன்பம் இவற்றினின்றும் விடுபட்டு சாத்வீகமான மனநிலையினை எய்தும் பொழுது பகுத்தறிவான அடுத்தபடியினை எய்தக் கூடியதாக அமையும். எனவே எவற்றிலும் அதீத பற்றினை வைப்பதனைக் குறைப்பதன் மூலம் அதாவது பகுத்தறிவுக் கண்கொண்டு எதனையும் நோக்குமிடத்து

மனச் சஞ்சலத்தினை, பதகளிப்பினைக் குறைக்க வாய்ப்புண்டாகும்.

பகுத்தறிவின் முதலாவது நிலையாதெனில் எதனையும் உணர்வுபூர்வமாக நோக்காது அறிவு பூர்வமாகச் சிந்தித்துச் செயற்படுதல் ஆகும். எப்போதும் எந்தச் சந்தர்ப்பத்திலும் உண்மை நேர்மை தவறாது செயற்படுதல் ஆகும்.

ஒரு சிலர் நடைமுறையில் தாம் எப்போதும் அறிவு பூர்வமாகவே செயற்படுகின்றோம், நடக்கின்றோம் எனக் கூறுவார்கள். ஆனால் இங்ஙனம் சொல்பவர்கள் பலவிதமான இடர்களை எதிர்கொள்கின்றனர்.

**அறிரதாக் காக்கும் அறிவினார்க்கு இல்லை**
**அதிர வருவது ஓர் நோய் (429)**

வருகின்ற இன்னல்களை முன்னரே அறிந்து அதனின்றும் காத்துக் கொள்ளக் கூடிய அறிவை உடையவர்க்கு, அவர் நடுங்கக் கூடிய வகையில் வரக்கூடிய துன்பம் என்று ஒன்றும் இல்லை.

எனவே உண்மை நிலையறிந்து நடத்தல் முக்கியம். குருவை அண்டி மாணவன் வாழ்க்கைக்குரிய உபதேசங்களைக் கேட்டுப்பெற்றவையே உபநிடத மாகும். அதில் முக்கியமான கடோபநிடதம் உண்மை யைப் பேசு என்கிறது.

**பொய்யினின்றும் நட**

**சத்தியமாக நட**

**அறவழி நட**

**தர்மம் செய்**

உண்மைதான் பகுப்பறிவின் அடிநாதமாகும். உண்மை எப்பொழுதும் எம்மை நாடிவரும் என்று எண்ணாமல் மனம், மொழி, மெய் இவற்றினால் செய்யப்பெறும் எந்தச் செயற்பாட்டையும் உண்மை யுடனும், நேர்மையுயுடனும் ஆற்றுதல் வேண்டும். உலகியலுள் மூழ்கியுள்ள எவருக்கும் இது ஒரு கடினமான செயற்பாடாகும்.

அரிச்சந்திரன் எந்தச் சூழ்நிலையிலும் உண்மை யினின்றும் வழுவவில்லை.

பகுத்தறிவின் அடுத்த நிலையானது புலன்களுக்கு உபாதை அளிக்கவல்ல விடயங்களை மீளமீள அசைபோடாது இருத்தல். இதனால் மனவெழுச்சி ஏற்படமாட்டாது.

மனத்தின் கண் பகுத்தறிவிற்கான நிலையினைப் பேண வேண்டுமெனில் கோபம், வெறுப்பு எனும் மனவெழுச்சியினை வளர்க்காமல் இருத்தல் அவசியம். ஒருவர் எம்மைத் துயரத்திற்கு உள்ளாக்கலாம். வலியினை ஏற்படுத்தலாம். சீற்றம் கொள்ள வைக்கலாம். அடுத்தடுத்து எமக்குத் துன்பங்களை இழைக்கலாம். இன்னா செய்தாரை ஒறுக்காது இனியவை செய்தல் என்ற எண்ணத்தினை வலிமைப் படுத்தி, மனத்தினைப்

பகுத்தறிவுடன், அமைதியைப் பேணவேண்டும்.

"நீ சும்மா இரு" என்ற நிலைநின்று இயங்க வேண்டும். இந்நிலை விருப்பு வெறுப்பற்ற நிலை ஆகும். அழுக்காறு, அவா, வெகுளி, இன்னாசொல் இவை நான்கினையும் தவிர்க்கவேணடும்.

இதனை திருமூலர் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்.

**வெல்லும் அளவில் விடுமின் வெகுளியைச்**
**செல்லும் அளவும் செலுத்துமின் சிந்தையை**

எதனையும் சிரத்தையுடன் அணுகுதல், பிரயோகித்தல் இவை பகுத்தறிவின் கூறுகளாகும். மதநெறிகள் யாவும் ஒவ்வொருவரும் மனிதநேயம் கொண்டவராகஇயற்கைநியதியுடனானவாழ்க்கையை வாழவேண்டுமென்பதனையே வலியுறுத்துகின்றன. மதச் சார்பான விடயங்கள், வாழ்வியல் தொடர்பான நடத்தைசார் விடயங்கள் எதுவாக இருப்பினும் சிரத்தையுடன் கேட்டல் அதனால் பெற்ற அறிவினைப் பிரயோகித்தல் இவை இரண்டின் மூலம் நல்ல மனப்பாங்குடனான விழுமியங்களைப் பின்பற்றல் வேண்டும். ஒவ்வொரு மதச்சார்பானவர்களினதும் குறிக்கோள் அவரவர் மதநெறியினின்றும் இறைவனை அடைதலேயாகும். எம்மை இயக்கும் சக்தி எம்முள்ளே இருப்பது போன்று இந்த உலகின் யாவற்றையும் இயக்கவல்ல ஒரு மாபெரும் சக்தியுளது என்ற

நம்பிக்கையை ஏற்க வேண்டும். அந்தச் சக்தியின் அருளைப் பெற்று அதனை நோக்கி எய்துவதே எமது பகுத்தறிவின் அடிப்படையாக இருக்கவேண்டும். மதச் சார்பான நெறிகளை நியமத்துடனும் நியதியுடனும் கடைப்பிடிக்க வேண்டும். சமயநெறி என்பது வாழ்க்கை நெறியாகும்.

அந்த மாபெரும் சக்தி

**புரையற்ற பாலினுள் நெய் கலந்தாற் போலவும்,**
**எங்கும் எரியுறு நீர் போலவும்,**

கடல் நீரில் உப்பு செறிவாயிருப்பது போல எங்கும் எவற்றிலும் நிறைந்துள்ளது.

மதசார்பான சக்திகள் வெவ்வேறானவை. ஆனால் ஒரே சக்திதான் என்பதனை,

**காணும் பலபல தெய்வங்கள் வெவ்வேறு**
**பூணும் பலபல பொன்போலத்தோற்றிடும்.**

மேல்வரும் பாடல் விளக்குகிறது.

இந்நிலையினை எய்த உள உடல்ரீதியான பயிற்சிகளை மேற்கொள்ள வேண்டும். இந்தப் பயிற்சியானது யோக நிலைக்குரியதாகும். யோகத்திற் குரிய அட்டாங்க நியமங்களை முறையாகப் பயிற்சி பெறுவதன் மூலம் மனத்தினை ஒருநிலைப் படுத்தி தியானம் என்ற நிலையினை எய்த முடியும்.

மனத்தை உள உடல் ரீதியான கட்டுப்பாட்டிற்குக் கொண்டுவருவதன் மூலம் ஆன்மா தனது குறிக்கோளான வாழ்வினைத் துய்ப்பதற்கு மனத்தினை இறைசக்தியுடன் இணைப்பதே பகுத்தறிவின் அடுத்த படிநிலையாகும். இது ஆன்மாவைச் சாத்வீகபடுத்தலாகும். இந்நிலையானது ஒருவரது நான்கு நிலைகளில் (பிரமச்சரியம், இல்லறநிலை, வானப்பிரஸ்தம், சந்நியாசம்) மூன்றாவதானதாகும். உடலை சாத்வீகப்படுத்தலுக்கான உணவு வகைகளை உண்ணுதல், கோபம், வெகுளி இவற்றினை முற்றாகவே நீக்குதல், தலயாத்திரை, ஆன்மீகப் பயிற்சிகள் ஆன்மீகத் தேடல் இவை யாவற்றையும் பகுத்தறிவுக்கண் கொண்டு செயற்படுதல் வேண்டும். மனத்தினை ஆன்மீக நிலையினை அடைவதற்கான மன வளத்தினை நியமமாகக் கடைப்பிடித்தாலொழிய திடீரென ஆன்மாவை இறைசக்தியிடம் நிலைநிறுத்தமுடியாது.

நாம் ஒவ்வொருவரும் பகுத்தறிவின் மூலம் வாழ்க் கையை வாழப் பழகினோமானால் எம்முள்ளே துன்பம் என்ற அழல் எழ வாய்ப்பில்லை. எம்மில் இரண்டு விதமான பக்கங்கள் உள்ளன. ஒன்று இன்பநிலைகளின் உச்சக்கட்டம். அடுத்தது துன்பத்தினை ஏற்காநிலை. இந்த இரண்டு நிலைகளையும் பகுத்தறிவுக்கண் நோக்கியதாக அமைக்க வேண்டும்.

பகலும் இரவும், அமாவாசையும் பூரண நிலவும் மாறிமாறி வருவது போன்றே இன்பமும் துன்பமும்

மாறிமாறி வரும் எனப் பகுத்தறிவுக் கண்கொண்டு தரிசிக்கப் பழக வேண்டும். உதாரணமாக எமக்குத் துன்பம் ஏற்படுமிடத்து ஏதாவதொரு வெகுமதி கிடைத்தவுடன் அத்துன்பத்தையே மறந்துவிடுகின்றோம். திரும்பவும் துன்பம் எழுமிடத்து அழுகின்றோம். அதற்கும் ஒரு வெகுமதி கிடைத்துவிட்டால் மறக்கின்றோம். ஆனால் பகுத்தறிவுப் பகுப்பாய்வின் மூலம் செயற்படுபவர் எது வந்தாலும் அவர்களது அந்தக்கரணங்களான மனம், மொழி, சித்தம், அகங்காரத்தில் மாற்றம் இருக்க மாட்டாது.

எம்மில் சிலர் ஐந்தறிவு கொண்ட ஆட்டு மந்தை போன்று செயற்படுவர். ஆட்டுமந்தைக் கூட்டத்தின் முன்னால் ஒரு தடியைப் பிடித்துக் கொண்டால் முதல் ஆடு தடியைத் தாவிப்பாயும். சற்று நேரத்தின் பின் தடியினை எடுத்துவிட்டாலும் தொடர்ந்து வரும் ஆடுகளும் தாவிப்பாயும். முன்னால் சென்ற ஆடு பாய்ந்ததினால் பின்வருபவையும் அதனையே பின்பற்றும். இதேபோன்றே பகுத்தறிவுக் கண்கொண்டு இயங்காதோர் சமுதாயத்தில் ஏனையவர் செய்யும் செயற்பாடுகளையே பார்த்து அவர்களும் செய்ய முற்பட்டுத் துன்பச் சிக்கலுக்குள் உழல்வர்.

நாம் ஒவ்வொருவரும் ஏதாவதொரு செயற்பாட்டினுள் அடிமைப்பட்டுக் கொண்டே வாழ்கின்றோம். இந்த அடிமைத்தனத்தினின்றும்

விடுபடப் பகுத்தறிவு கொண்டு மனத்தை நிலையான சக்தியான இறைமீது செலுத்தவேண்டும். அதாவது நித்தியமானது நித்தியமற்றது, உண்மையானது உண்மையற்றது, அழிவுள்ளது அழிவற்றது இவை யாவற்றையும் பகுத்தறிவுடன் ஆராய்ந்து நடப்பதே ஒவ்வொருவரினதும் வாழ்வியல் சாதனையாகும்.

இறைவன் மட்டுமே அழியாதவர். மற்றவையாவுமே அழிகின்றன. யாவுமே தொடர்ச்சியாக மாறிக் கொண்டே இருக்கின்றன. இன்று நாம் பார்க்கும் மலைகள் யாவும் கடல்களாக இருந்தன. இம்மலைகள் கூட நாளை கடலாக மாறக்கூடும். இந்தப் பிரபஞ்சமும் மாற்றமடைந்து கொண்டே இருக்கும். இறைசக்தியை நாம் நெருங்க நெருங்க இயற்கைச் சக்திகள் யாவும் எம்மீது செலுத்தும் ஆதிக்கம் குறைவடையும். இயற்கையை அடக்கியாளும் பகுத்தறிவும் எம்முள் ஆதிக்கம் பெறும். எம்மீது அறிவும் உணர்ச்சியும் ஆதிக்கம் கொள்ளுமிடத்து பகுத்தறிவுக் கண்கொண்டு எதனையும் நோக்குமிடத்து உணர்ச்சியென்பது பஞ்சாகப் பறந்து விடும். எனினும் அறிவு உள்ளு ணர்வினை அடைய உதவுவதில்லை. அந்த உள்ளுணர் வினைத் தட்டியெழுப்ப உதவுவதே ஆன்மிகப் பயிற்சியும் அதனால் எழும் சாதனையுமாகும்.

பகுத்தறிவுக் கண்கொண்டு உலகியலுள் மூழ்காது வாழ்ந்தோர்களால் வழங்கப்பட்டவையே

இறை அனுபவப் பாமாலைகளும் ஏனைய அருளுரைகளுமாம்.

அறிவுக்கண் கொண்டு உண்மையான ஆன்மிகத் தேடலை எய்தமுடியாது. உண்மையான ஆன்மிகம் என்பது எமது புலன்களால் பெறப்படும் அறிவினைக் கடந்து நிற்பதாகும். நாம் யாபேரும் நேர் கோட்டிலேயே செல்வதில்லை. ஒவ்வொருவரும் வாழ்க்கை என்ற வட்டப்பாதை வழியேதான் நகர்கின்றனர். என்றோ ஒருநாள் ஒவ்வொருவரும் இவ்வட்டப் பாதையை முடித்தே தீரவேண்டும்.

நாம் ஒவ்வொருவரும் இறைவன் என்ற மையப் புள்ளியினின்றும் தோன்றியவர்கள். எம்முள் ஏற்றம், இறக்கம், உயர்வு தாழ்வு இருந்தாலும் எமது தந்தையான இறைவனை அடைந்துதான் தீரவேண்டும். இதுதான் இயற்கை நீதி, நியதி.

என்றோ ஒருநாள் எந்தச் சக்தியினின்றும் யாவும் தோன்றியதோ, எந்தச் சக்தியினால் யாபேரும் வாழ்கின்றோமோ, இறுதியில் எவையெல்லாம் எவற்றில் அடங்கப் பெறுகின்றனவோ அதுதான் இறை என்ற சக்தி. நாமெல்லாம் இந்தச் சக்தியுடன் சரணாகதி ஆவதற்குரிய வழிவகைதான் பகுத்தறிவின் அடிப்படையான மூலக் கூறுகளாகும்.

வாழ்க்கையில் எமக்கெல்லாம் ஏற்படும் பிரச்சினைகளில் பல எம்மால் மட்டுமே ஏற்பட்டவை. ஒரு

சில விடயங்கள் மட்டுந்தான் எம்மைச் சுற்றியிருப் போர்களினால் ஏற்படுகின்றன. இதனால் பிறர்மீது குற்றங்கூறி உழல்வதன்மூலம் பிரச்சினைகள் தீர்ந்து விடாது. பகுப்பதறிவுச் சிந்தனை கொண்டு எம்மை நாம் மாற்றிக் கொள்வதன்மூலம் பல சிக்கல்களினின்றும் விலகி விடுதலைப் பெறமுடியும்.

பகுப்பாய்வின் துணைகொண்டு வாழும் வாழ்க்கையில் பிரச்சினை, குழப்பம், போராட்டம் என்ற பேச்சிற்கே இடமில்லை. நான் என்பதனைப் பகுத்தறிவுக் கண்கொண்டு மாற்றப் பழகவேண்டும். எம்மை நாம் சுய ஆராய்ச்சி செய்து நாம் கடந்து வந்த காலம், நிகழ்காலம் இரண்டையும் பகுப்பாய்வு செய்வதன் மூலம் எமது தொடர் வாழ்க்கையை நியமத்துடன் சிக்கலின்றி வாழ்வினைத் திட்டமிட வாய்ப்புண்டாகிறது. சுய ஆராய்ச்சி சுய நிர்ணயத்தினை ஏற்படுத்துகிறது. ஒவ்வொருவரும் தம்மை நோக்கித் தாமாகவே பகுத்தறிவுடன், நியம வழியில் செல்வது மிகவும் முக்கியமானதொன்றாகும்.

உலகியலுள் மூழ்கிவிடாது பகுத்தறிவுக் கண் கொண்டு வாழ்ந்த பல மகான்கள், அறிஞர்கள் எமக்கு வழிகாட்டியுள்ளனர்.

✡

8

# வாழ்வு

பெறுதற்கரிதாகிய மானிடப் பிறவியைப் பெற்றுள்ள நாம் அதன் பெறுமதியினை உணர்ந்து பயன்மிக்க வாழ்க்கையினை வாழவேண்டும். வாழ்வு சிறப்புற அமைய வேண்டுமானால் நாம் சில கோட்பாடுகளையும் அளவுகோல்களையும் கடைப்பிடித்தல் வேண்டும்.

முதலில் எமது நெஞ்சு நிறைவானதாகவும், சந்தோஷமானதாகவும் இருப்பதற்கு எமக்கு ஏற்படும் இன்னல்களை நினைத்து உருகுதல் என்ற அறியாமையைப் போக்குதல் வேண்டும். நடந்தவைகளை நினைத்துப் புழுங்கியவாறு இருப்பதனை அறிவுக் கண்கொண்டு நீக்குதல் வேண்டும்.

எம்மிடம் இருக்கும் அறியாமையைப் போக்க மூன்றாவது கண்ணான அறிவுக் கண்கொண்டு நோக்க வேண்டும், சிந்திக்க வேண்டும். அதனை நேரிய வழிகளில் செயலாக்க எத்தனித்தல் வேண்டும். தர்ம

நியதிகளின் வழிசெல்லவேண்டும்.

எம்மிடத்து இயல்பாகவே அமைந்திருப்பது 'நான், எனது' என்ற எண்ணமும் அதன்பொருட்டு ஏற்படும் அகம்பாவமும் ஆகும். இத்தகைய பண்பினை வளர்க்குமிடத்து பகுத்தறிவற்ற விலங்குப்பண்புதான் மேலோங்கும். இதனால் நாம் எமது மானத்தினையும் இழக்க நேரிடலாம்.

ஐந்தறிவுடைய விலங்கினையொத்த வாழ்வு வளமான வாழ்வாகாது. எனவே நாம் மானிடப் பண்பினை எம்முள் வளர்த்தல் முக்கியமானதாகும்.

வாழ்வு என்பது வீணையில் எழும் நாதம் போன்றதாகும். எமது வாழ்வு வீணையின் நாதம்போல் அமையவேண்டுமானால் வாழ்வின் ஏற்றம் இறக்கம் இரண்டினையும் சமநிலையில் பேணவேண்டும். இறக்கத்திற்குரிய காரணங்களை ஆராய்ந்து வலிமை பொருந்திய எண்ணங்களால் ஏற்றத்தினைப் பெறும் வாழ்வினை அமைக்க முயலவேண்டும்.

எமது வாழ்வை, தாழ்வு மனப்பாங்குடன் அணுகி எமது எண்ணத்தில் தாழ்வுச் சிக்கலை வளர்க்கக் கூடாது.

நாம் எப்பொழுதும் இன்று புதிதாயப் பிறந்தோம் என்ற எண்ணத்தின் திண்மை கொண்டு வாழ்ந்திடல் வேண்டும். இதனால் எமது சிந்தையில் தெளிவு ஏற்படும். எம்மால் செயற்படுத்தப்படும் சகல நடவடிக்கைகளும் செம்மை பொருந்தியதாக அமையும். எனவேதான்

எமது முன்னோர்களான அறிஞர்கள், மகான்கள் தமது வாழ்வில் தாழ்வு மனப்பான்மையை என்றுமே வளர்க்கவில்லை. அதனாலேதான் அவர்களது செயற்பாடுகள் யாவும் தோல்வியின்றி வெற்றி பெற்றன. அவர்கள் மெய்ம்மையைத்தான் நோக்கினார்கள் - அதனால் விழிப்புற்றார்கள். நாம் பொய்மையை மெய்ம்மையென ஏற்றுக்கொள்ளும்போது எம்மிடம் மடைமைதான் முன்னிற்கும். வாழ்வு பயனுள்ளதாக அமையமாட்டாது. பலன்களையும் தராது.

எமக்கு ஏற்பட்ட தீமைகள் யாவும் அழிந்து போகுமேயொழிய அவையாவும் திரும்பிவருவதில்லை. 'இதுவும் கடந்துபோம்' என்ற எண்ணத்தினை மனதில் ஏற்படுத்தி மனம் நலிவடைதலைக் குறைக்க வேண்டும். ஒருவருக்கு ஏற்படுகின்ற நன்மை, தீமை, இன்பம், துன்பம் யாவும் அவர்களாலேதான் ஏற்படுகின்றது. அவரவர் செயற்பாடுகளே அவரவர் துன்பங்களுக்கும் காரணமாகின்றது.

ஒவ்வொருவரது நிலைக்கும் அவரவரே காரணம் ஆகின்றனர். மற்றவர்கள் அல்லர். தருமனின் வனவாசத்திற்கு அவனது சூதாட்டமும், பணயம் வைத்ததுமே காரணமாகின.

இராவணன் வீரன், கலைஞன் சகல சௌபாக்கி யங்களையும் பெற்றவனாக இருந்தபொழுதும் அவனது பெண்ணாசைதான் அவனது வீழ்ச்சிக்குக் காரண மாகியது.

இந்திரனுக்கு முனிவரால் கிடைத்த சாபமும் பெண் ஆசையினால் ஏற்பட்ட மோகம்.

ஒவ்வொருவரும் தாம் செய்ய வேண்டிய தர்மங்களைச் செய்தே ஆகவேண்டும். இவற்றை வைத்துக் கொண்டே சமுதாயம் அவனுக்கு ஓர் உயர்ந்த இடத்தினை அளித்து அடையாளப்படுத்துகிறது.

வாழ்வு வளமாக இருப்பதற்கு நல்லொழுக்கம் முக்கியமானதாகும். நல்லொழுக்கமின்றிப் போகங்களை அனுபவிப்பதற்கோ அன்றி செல்வம் சேர்ப்பதற்கோ எடுக்கும் முயற்சிகள் யாவும் பிரச்சினைகளை ஏற்படுத்தும். முடிவில் அவன் மானமிழந்து சமுதாயத்தினின்றும் தூக்கி வீசப்படுவான்.

வாழ்வில் வளம் பெற வலிமை, தன்னம்பிக்கை ஆகியவற்றை உரிய வகையில் பயன்படுத்துதல் வேண்டும். ஒவ்வொருவரிடத்தும் இயல்பாகவே திறமைகள் புதைந்துள்ளன. அவையாவும் தளராத ஊக்கம் மூலம் வெளிக் கொணரப்படுமிடத்து மனிதன் முழு வளர்ச்சி காண்கிறான்.

மனிதன் என்பவன் ஒரு தனித்தீவு அல்ல. அவன் ஒரு சமூகப்பிராணி, சமூகத்தைச் சார்ந்தே வாழ்கிறான். எனவே சமுதாய வாழ்வில் தன்னைப் பகிர்வு செய்வதன் மூலம் தன்னை அடையாளப்படுத்தி சமூகத்திற்கு வேண்டியவனாகிறான்.

ஒவ்வொரு மனிதனின் வாழ்விலும் இரண்டு பக்கங்கள் உள்ளன. முதலில் அவன் தனக்குத்தானே

நேர்மையானவனாகவும் எவராலும் நல்லவன் என ஏற்றுக் கொள்ளப்படுபவனாகவும் வாழ வேண்டும். யாவற்றிலும் உகந்த அறிவினைப் பெறுதல் வேண்டும், வாழ்வினை அனுபவிக்கவும் வேண்டும். லௌகீகவாழ்வில் உண்மை, ஒழுக்கம், பண்பு இவற்றினைப் பின்பற்றுபவனாக அவன் இருத்தல் வேண்டும். வாழ்வின் முதிர்வு ஏற்பட அவனது அறிவு அகம் நோக்கியதான வாழ்வாக அமையும்.

ஒவ்வொருவரும் என்ன செய்தார்கள் என்பதனை விட அவர்கள் எங்ஙனம் வாழ்ந்தார்கள் என்பதே கணிப்பீட்டிற்கு வருகின்றது.

எமது சமய நெறியில் கூறப்பெற்றுள்ள நியதிகளைத் தவறாது கடைப்பிடித்தல் வேண்டும். நீதி, உண்மை, நல்லொழுக்கம், தர்மம் செய்தல் இவையாவும் எமது வேதங்களில் இதிகாச புராணங்களில் கூறப் பெற்றுள்ளன.

எந்த மனிதனும் தான் விரும்புவது போல் வாழமுடியாது, எதை வேண்டுமானாலும் எந்தச் சமயத்திலும் செய்ய முடியாது. எந்தச் செயலை நாம் ஆற்றினாலும் அதற்குரிய எதிர்வினைகளை அனுபவித்தே ஆகவேண்டும். தவறு செய்பவன் எப்போதோ ஒருநாள் திருந்துவான். அவன் தர்மவழியில் செல்வானானால் தர்மமானது அறமாக நின்று அவனைக் காக்கும் என்பதனை இராமாயண, மகாபாரதப் பாத்திரங்கள் எடுத்துரைக்கின்றன.

இன்று நாம் வாழ்வது அதி உன்னத விஞ்ஞான வளர்ச்சி வாயிலாக வளர்ந்த தொழில்நுட்பக்கால மாகும். விஞ்ஞான ஆராய்ச்சியுடன் பகுத்தறிவுக்கொண்டு எந்த எல்லைவரை போக முடியுமென்பதனை நாம் அறிய முடிகின்றது. மனிதனின் ஆளுமைப் பண்புக் கூறுகள் உயர்நிலைப் பரிமாணங்களைக் கொண்டதெனவும் மனிதன் அறிந்துகொண்டான். இவையெல்லாவற்றையும் கருத்தில் கொண்டு வாழ்வினைப் புதிய கண்ணோட்டம் கொண்டு பார்க்கின்றான். இத்தகைய நிலையில் ஒவ்வொரு நாட்டினதும் சமுதாய அமைப்பில் செயற்பாட்டு முறையில் பல மாற்றங்கள் ஏற்பட்டுவருகின்றன. அதனால் மனித உணர்வினை மனிதனே சிதைத்து மற்றவரை நோகவைக்கும் நிலை ஏற்பட்டுள்ளது. இவையெல்லாம் நீங்க வேண்டுமேயானால் ஒவ்வொருவரும் மானிடநேயம் கொண்ட பண்புடன் அமைந்த வாழ்வினை வாழ முனையவேண்டும். தன்னைப் போன்று பிறரையும் நேசிப்பதுடன் இறை சிந்தனை கொண்டு நியதிப்படி வாழ வேண்டும். வாழ்வினை மெய்ம்மையாக வாழவேண்டும் என்ற உணர்வினை நெஞ்சினில் பாய்ச்சுதல் வேண்டும்.

நாம் வாழ்வியலில் கவலைகளை வளர்க்குமிடத்து அது எமது வாழ்வைக் கறையான் அரிப்பது போல் அரித்துவிடும். எந்தச் செயலையும் பயம் கலந்து ஆற்றினால் எமது நெஞ்சிலே பாம்பை வளர்ப்பது போலாகிவிடும். ஒருவன் விஷப்பிராணிகள் கடிப்ப தாலோ நோயாலோ துன்பப்பட மாட்டான். அவனைக் கொல்வது அவற்றினால் ஏற்படும் பயம் என்பதே.

எந்தச் செயல்களை ஆற்றும் பொழுதும் புத்தி கூர்மை மட்டும் போதாது. விடாமுயற்சியுடன், சோம்பலின்மையின்றி செயற்படவேண்டும்.

வாழ்வு சிறப்புற அமைய வேண்டுமேயானால் மனமும், இந்திரியங்களும் உடம்பும் அறிவுக்கு அடங்கி வாழப்பழக வேண்டும்.

வாழ்வில் எமக்கு கிடைக்கப் பெறாதவைகளை மற்றவர்க்கு கிடைக்குமிடத்து மகிழ்வுகொள்ள வேண்டும். இதனை நாம்பகுத்தறிவுக்கண்கொண்டு நோக்க வேண்டும். மனத்தில் வஞ்சனை, சூது ஆகிய பண்புகளை வளர்த்தால் அவையாவும் எமது வாழ்வையே அழித்துவிடும்.

எமது உழைப்பின் பொழுது நான், எனது என்ற பளுவை நீக்கினால் யாவும் பிழையின்றி வெற்றியாக நிகழும். வாழ்வில் நம்பிக்கை என்பதனை கெட்டியாகப் பிடித்தால் எத்தனை பெரிய ஆபத்துக்கள் குறுக்காக வந்தாலும் வெற்றி பெற்று விடலாம்.

விடாமுயற்சி, தளராதமனம், சோம்பலின்மை, வாழ்வில் நாம் செய்யப்பட வேண்டிய முக்கிய நடவடிக்கைகளைத் தள்ளிப் போடதிருத்தல் என்பன வெற்றியின் அடிப்படைகளாகும்.

வாழ்வில் தாழ்வுநிலை ஏற்படுவதற்கு காரணமாக இருப்பது மற்றவர்களை ஏமாற்றி வாழும் வாழ்க்கை யாகும். ஏமாற்றும் பொழுது மனதில் குற்ற உணர்வு ஏற்பட அவனது அகமே இருள் சூழ்ந்து எதிலும் அவன் வெற்றிபெறமுடியாத நிலை ஏற்படும்.

நாம் செய்யும் நன்மை தீமைகள் எம்முள் விளைவு களை ஏற்படுத்துகின்றன. இது சமஸ்காரம் எனப்படும். ஒவ்வொரு சமஸ்காரம் செய்யப்படும் பொழுதும் அதன் வாயிலாக இன்னுமொரு சமஸ்காரம் செய்யத் தூண்டப்படுகின்றது. எனவே நாம் வாழ்வியலைத் துய்க்குமிடத்துகூட எமது சம்ஸ்காரங்கள் அழிவ தில்லை. அவையாவும் மற்றுமொரு பிறவிப்பயனுக்கு எடுத்துச் செல்லப்படுகின்றன. ஒவ்வொருவரும் தம்மால் செய்யப்பெற்ற செயல்களின் விளைவினை சுமக்கின்றார்களொழிய பிறிதொருவரின் பாவங்களைச் சுமப்பதில்லை. எமது வாழ்வில் ஏற்படும் இன்பதுன் பங்கள் யாவும் எம்மால் செய்யப்பெற்ற செயல்களின் விளைவே என்ற அறிவினை நாம் பெறுதல் முக்கியம்.

ஒருவர் தமது வாழ்வில் எத்தனை நன்மைபொருந்திய செயல்களை ஆற்றாவிட்டாலும் அவருக்கு வெற்றிகள் கிட்டுவதை நாம் காண்கிறோம். ஆனால் மற்றுமொருவர் எத்தகைய நன்மை பொருந்திய செயல்கள் செய்தாலும் அவர்வாழ்வில்சந்திப்பது தோல்விகளும்இன்னல்களுமே. எமது முன்னைய வினைகள் செயற்படுவதே இவற்றிற்கான காரணமாக அமைகிறது. எனவே செயற்பாடுகளின் விளைவுகளை நாம் தடுக்கமுடியாது. அதன் அநுபவத் தினைப் பெற்றே ஆகவேண்டும்.

ஒவ்வொருவருக்கும் அரிதாகக் கிடைக்கப் பெற்ற மானிட வாழ்வினை அறிவுக்கண் கொண்டு ஆராய்ந்து

உணர்வுகளுக்கு முன்னுரிமை கொடுக்காது மானிட நேயத்துடன் உகந்த தர்மநியதிகளுடன் வாழ்வினை வாழுமிடத்துநாமும்சந்தோஷமாகவும்ஏனையோருக்கு மகிழ்வினை அளிப்பவராகவும் வாழ ஏதுவாகிறது.

வளம்மிக்கதான வாழ்வினை வாழ வேண்டுமெனில் வளமான மனநிலை வேண்டும். ஒருவன் தனது இழப்பையும் இழந்து வருவதையும் தினம் தினம் நினைப்பானேயானால் அவன் இருப்பதையும் இழப்பான். உளமும் உடலும் நலிவுபெறுமிடத்து அவனது வாழ்வு சோபை பெறாது. எனவே நேற்று இன்று என்பதனை நிகழ்காலத்துடன் சமரசம் செய்து கொண்டு வாழப் பழக வேண்டும்.

ஐம்பொறிகளையும் எவரும் தமது ஆட்சிக்குக் கொண்டு வருமிடத்து வாழ்வில் ஏற்படும் இடர்கள் குறைவானதாகும்.

மேலைநாடுகளில் மனிதன் தனது வாழ்வினை வாழ்வதற்காக மூன்று விடயங்களைத் தமது இலட்சியங்களாகக் கொள்வர். அவை அழகு, உண்மை, நன்மை என்பனவாம்.

கலையின் வாயிலாகவே அழகைத் தேடவேண்டும். அதனால் மேலைத்தேயத்தவர் கலையினைச் சுகிப் பதற்காகவே எமது நாடுகளுக்கெல்லாம் சுற்றுலா வருகின்றனர். தவிர மேலைத்தேயத்தவர்கள் எவரைச் சந்தித்தாலும் “எப்படி?, இன்று நல்லநாளாக

இருக்கட்டும், உன்னில் கவனமாயிரு” என்றெல்லாம் பரிமாறிக் கொள்ளுவர். அதுமட்டுமன்றி எங்கு அழகு மிளிர்கின்றதோ அதனை இரசிப்பர். அவர்கள் உணவு, உடையில் கூட கலையினை இணைப்பர்.

அடுத்து, விஞ்ஞானம் அறிவு மூலமாக எதனையும் ஆராய்ந்து அதன் வாயிலான உண்மையைக் கண்டு பிடித்துத் தமது பொருளாதாரத்தினை வளர்ப்பர்.

அடுத்து சமுதாய வாழ்க்கையின் மூலமாக நன்மையைத் தேடுவர். இந்த மூன்றும் வாழ்க்கையை வளமுடன் வாழவைக்கின்றன. கலை மகிழ்ச்சியைத் தருகின்றது. விஞ்ஞானம் வாழ்க்கைக்குரிய செல்வத்தை தருகின்றது. நல்ல சமுதாய வாழ்க்கை ஆற்றலையும், அமைதியையும், திருப்தியையும் தந்து வாழ்வில் வளம் பெறுவைக்கின்றது.

எமது வாழ்வு துய்கும் பொழுது எந்தச் செல்வமும் எம்மைத் தொடர்ந்து வரமாட்டாது என்பதனை ஔவையார் கூறுகின்றார். எனவே, நாம் செய்யும் அறமே மறபிறவியிலும் உதவி செய்யும்.

**பாடுபட்டுத் தேடிப் பணத்தைப் புதைத்து வைத்துக்**
**கேடுகெட்ட மானிடரே கேளுங்கள்**
**தீதற்ற செல்வமென் தேடிப் புதைத்த திரவிய மென்**

- பட்டினத்தார்

**தேடிப் புதைத்துத் திருட்டிக் கொடுத்துத் திகைத்திளைத்து**
**வாடிக் கிலேசித்து வாழ்நாளை வீணுக்கு மாய்ப்பவரே**

*- அருணகிரி*

வாழ்க்கையில் செல்வத்தைப் புதைத்து வைக்காது தருமமே செய்தல் வேண்டும்.

**யாவர்க்குமாம் உண்ணும் போது ஒரு கைப்பிடி**

*- திருமூலர்*

**எமக்கென்னென் றிட்டுண்டிரும்** *- ஔவையார்.*

ஏழைகள் வயிற்றில் விழும் ஒவ்வொரு சோறும் ஒவ்வொரு பொன்னாகத் தனக்கு மறுபிறப்பில் வந்து உதவும்.

**'எங்காயினும் வரும் ஏற்பவர்க் கிட்டது'**

*(50-க.அ)*

**கைத்துண்டாம் போதே கரவாது**
**அறஞ் செய்மின்**

உழவன் வயலிற் கொண்டுபோய் இட்ட நெல் ஒன்றுக்கு நூறாகப் பெருகி வீட்டிற்கு வரும். பசித்தவர்க்கு உணவு இட்டால் அன்புடன் இட்டவனையே திரும்ப வந்துசேரும்.

ஒவ்வொருவரும் தாம் தாம் ஆற்றிய செயல்களி னின்றும் தப்பமுடியாது.

**கோழிக் கொடிய னடிபணி யாமற் குவயலத்தே**
**வாழக் கருது மதியிலி காளுங்கள் வல்வினை நோய்**
**ஊழிற் பெருவலி யுண்ணவொட் டாதுங்களத்து மெல்லாம்**
**ஆழப் புதைத்துவைத் தால்வரு மோதும் மடிப்பிறகே**

*- கந்தரலங்காரம் 20*

வலிமை பொருந்திய தீவினையால் உண்டாகும் ஊழின் பெரிய வலியானது எந்தச் செல்வத்தையும் அனுபவிக்கவிடாது. அத்துடன் உடலை விட்டு உயிர் நீங்குமிடத்து எதுவும் பின் தொடராது தருமமே துணைவரும்.

கிடைத்தற்கரிய வாழ்வினை நீண்ட ஆயுளாக வாழ வேண்டுமென வள்ளலான அதியமான் எனும் அரசன் விரும்பினான். எனவே அறிவாளி ஒருவரிடம் இதுபற்றிக் கேட்ட பொழுது அவர் மலையின் உச்சியில் ஒரு நெல்லி மரம் உளது. அம்மரம் ஒரேயொரு நெல்லிக்கனியினை மட்டும்தான் தரும். ஆனால் அது எப்ப காய்க்குமென்று தெரியாது. நீ தினமும் அம்மரத்தை அவதானிக்கவேண்டும். நீ அந்த நெல்லிக்கனியினை உண்பாயானால் நினது ஆயுளும் நீடிக்கும் என்றார். அதன்படி அதியமான் அரசனும் அந் நெல்லிக்கனியினைப் பறித்துத் தனது அரண்மனைக்குத் திரும்பினார். ஔவையார் அதியமானைப் பார்ப்பதற்காக அரண்மனைக்கு வந்திருந்தார். அவர் நீண்ட தூரம் பயணம் செய்து

மிகவும் களைப்புடனும் பசியுடனும் காணப்பட்டார். எனவே நீண்டநாள் ஆயுளை விரும்பிய அதியமான், தான் பறித்த நெல்லிக்கனியினை ஔவையாரிடம் அளித்து இதனைச் சாப்பிட்டுக் களையாறும்படி வேண்டினார். ஔவையாரும் அந்த நெல்லிக்கனியினை புசித்து அக்கனியின் சுவையினையும் எடுத்துரைத்து கனியின் வரலாற்றினையும் தெரிந்து கொண்டார்.

"என்போன்றோர்க்கு அறிவுரை கூறி அறத்தின் வழி ஒழுகவும், அநேக மக்களுக்கும் நல்வழி காட்டவும் நான் வாழும் வாழ்வினை விட உங்களது வாழ்வு நீடியதாக வேணும்" என அதியமான் கூறி மகிழ்ந்தான்.

ஒவ்வொருவரும் மாற்றங்களுக்கு உள்ளாக வேண்டும் என்பது இயற்கை நியதி. கருவறையில் உள்ள குழந்தை வெளியே வந்து பலவித மாற்றங்களுக்கு உள்ளாகிறது. சிறுவன், வாலிபனாகவும் நடுத்தர வயதினனாகவும் கிழப்பருவம் எய்தியும் படிப்படியாக நலிவடையத் தொடங்குவான். காணும் திறனை விழிகள் இழக்கும் கேட்கும் சக்தியை காதுகள் இழக்க கைகால்களும் தனது செயற்றிறனைக் குறைக்கும். அத்துடன் ஞாபகச்சக்தி குறைவடையும் இதுவே ஒவ்வொரு மானிடனின் வாழ்க்கையாகும். ஆனாலும் எந்த மனிதனும் மரணத்தினை விரும்புவதில்லை. உலகிலேயே எதனையும்விட மனிதன் வெறுப்பது மரணத்தினையே. எனினும் பிறந்த ஒவ்வொருவரும்

*என்றோ ஒருநாள் ஐம்புலன்களின் செயல்கள் குன்றுமிடத்து அவனது உடல் எவ்விதமான இயக்க மில்லாதாகிறது. எனவே வாழ்க்கையை புலன் இயக்கங்களின் மூலம் நியதிப்படி வாழ்வினை துய்த்து பயன் கொள்வோமாக!*

*திருவள்ளுவர் உலகியலுள் வாழ்ந்து பெற்ற அனுபவத்தைக்கொண்டு வாழ்விற்கு எவை தேவை, எவ்வண்ணம் வாழவேண்டும், உரிய முறையில் வாழாவிட்டால் கிடைப்பவை யாவை, உகந்த நெறி வாழ்வு எத்தன்மையுடையது போன்றவற்றைச் சிறப்புற வகுத்தும் தொகுத்தும் அளித்துள்ளார்.*

**கேட்ப தென்னவோ**
**அனைவரும் சாகாவரம்**
**கிடைப்ப தென்னவோ**
**அனைவர்க்கும் சாகும்வரம்**
**நிதம் கட்டுப் பாட்டு நெறியுடன் வாழ்ந்தால்**
**இதமாகும் வாழ்க்கை இனித்து**
**செல்வம் என்பது சிந்தனையின் நிறைவே.**

✡

9

# ‘பாவம்’ என்ற பதம் குறிப்பது யாது ?

மனிதனின் வாழ்வில் பாவம் என்ற பதம் சிறியோர் முதல் பெரியோர்வரை பேசப்பட்டு வருகிறது. இது நல்லொழுக்கத்துடன் இணைந்ததொன்றாகும். ஒழுக்க நெறியினின்றும் விலகிச் செய்யப்படும் செயல்கள் பாபச் செயல்கள் எனவும் இத்தகைய செயல்களைச் செய்வதன் மூலம் அவன் பாவி ஆவான் எனவும் கூறுவர்.

பாவம், கத்தோலிக்க மதத்திலும் மிகவும் முக்கிய மானதாகக் கருதப்படுகிறது. கத்தோலிக்கர் தாம் செய்த பாவத்திற்கு மன்னிப்புக் கேட்பர். அவர்களது குருவானவர் பாவ மன்னிப்பை வழங்குவார். எமது மதநெறியிலும் பாவக் கோட்பாடு உளது. வடமொழியில் ‘பாப’ என்ற வார்த்தை உளது. மேலை நாட்டவரின் கருத்துக்கும் எமது இந்து நெறிப் பாரம்பரியத்திற்கும் வேறுபாடு உள்ளது. இதனைச் சரியான முறையில் புரிந்து கொள்ளுதல்வேண்டும்.

பாவம் எனும் சொல் ஆங்கிலத்தில் 'Sin' என வழங்கப்பெறுகிறது. அதாவது கடவுளின் கட்டளையை மீறுவது என்று கூறுவர். ஆனால் இந்து நெறியைச் சார்ந்தோர் இக்கூற்றினை ஏற்றுக் கொள்ளமாட்டாாகள். நாம் தவறு அல்லது தீய வழியில் சென்றால் நம்மீது பழியினைச் சுமத்துவோம். சிலவேளை கடவுள் மீதும் பழி சொல்வோம். ஆனால், கடவுளின் கட்டளையை மீறியுள்ளோம் எனக் கருதமாட்டோம். இந்து நெறிச் சிந்தனையின்படி இயற்கையானது பிரபஞ்சத்தின் நியதிப்படி செயற்படுகிறது. இந்த நியதியில் ஒன்றுதான் கர்மநியதி அல்லது வினைப்பயன். நாம் எச்செயலைச் செய்தாலும் அது ஒரு விளைவினை ஏற்படுத்துகிறது. இந்த விளைவு உரிய காலத்தில் வினைசெய்தவனையே வந்து சேரும். நாம் செய்யும் ஒவ்வொரு செயலும் பல மாற்றங்களுக்காகி செய்தவனிடமே திரும்பி வருகிறது.

எவரும் தான் செய்யாத செயல்களுக்குரிய பலனை அநுபவிக்கமாட்டான். எப்போதும் செயல்கள்தான் பலனைத் தருகின்றன. இன்பம், துன்பம், சுகபோகங்கள் யாவுமே இந்த உலகில் செய்யும் செயல்களின் பலனாகக் கிடைக்கின்றன. இந்து நெறியின் தாற்பரியமானது தெய்வீக நியதியை யாரும் மீறமுடியாது என்பதாகும். பாவம் என்பது தானே தனக்குச் செய்யக்கூடிய குற்றம், அவனாகத் தேடிப் பெற்ற நஷ்டம். எமது அறிவினை அறியாமைகொண்டு செய்வதுதான் பாவம். அறியாமை

நீங்கிவிட்டால் எவரும் தகாத செயல்களைச் செய்ய மாட்டார்கள். உலகியல் தழுவிய நியதி ஒன்று உளது. அது நன்மை - தீமை, இன்பம் - துன்பம் இரண்டையும் சமப்படுத்துகிறது. அதுதான் உலகின் இயக்கங்களுக்கெல்லாம் அடிப்படையாகும். நன்மை செய்யும் செயல்களை தர்மம் என அழைக்கின்றனர்.

வேள்வி யாகங்களின் நியதிதான் தர்மம் என வேதம் கூறுகிறது. அவரவர் செய்யும் செயல்களின் விளைவுகள் - கர்ம நியதிதான் தர்மமாகும்.

நல்லொழுக்கம்தான் அடிப்படையானது என்றால் ஏன் எல்லோரும் அதனைக் கடைப்பிடிப்பதில்லை? ஏன் தர்மவழியில் நடப்பதில்லை? மனிதன் சுதந்திரமானவன் என்றால் அவன் ஏன் அதர்மவழிகளை நாடவேண்டும். இதற்கு உளவியலாளர் அறியாமைதான் காரணம் என்கின்றனர். இக்கருத்துத்தான் மேலை நாட்டில் கிறிஸ்தவமதம் வரும்வரை இருந்தது. ஆனால் கிறிஸ்தவமதம் தொடங்கியபொழுது ஒரு புதிய கருத்தினை ஆதிபாவம் என்ற கோட்பாட்டை முன் வைத்தார் செயின் பால் என்பவர். பாவம் தொடர்பான கதையொன்று பைபிளில் உளது ஆதாமும் ஏவாளும் ஆதிமனிதர்கள். ஆதிமனிதர்கள் தமது கட்டளைக்குச் செவிசாய்க்காதபடியினால் அவர்கள் ஏடன் தோட்டத்திலிருந்து வெளியேறிப் பூமிக்குச் செல்லும்படி சபிக்கப்பட்டனர். ஆதி மனிதர் செய்த பாவம் ‘ஆதி பாவமா’யிற்று. ஆதாம்

ஏவாளின் சந்ததியினரே மனிதகுலம். பாவம் செய்வதும் தீமை செய்வதும் மனிதனின் இயல்பான சுபாவமாகும். இதன் அடிப்படையிலேயே கிறிஸ்தவ மதம் தமது கோட்பாடுகளை எழுப்பியுள்ளது. எனினும் கத்தோலிக்கர் ஆதிபாவம் ஆன்மாவைக் களங்கப்படுத்துவது மட்டுமே என்பர். ஆனால் புரொட்டஸ்தாந்தினரோ ஆதிபாவம் ஆன்மாவைச் சிதைத்தே விடுகின்ற என்கின்றனர். கிறிஸ்தவ மதமும் ஏதோ ஓர் உயரிய சக்தியுளது எனவும் அதுவே கடவுள் எனவும் குறிப்பிடுகின்றது.

இந்து நெறியினைப் பொறுத்தவரை நல்ல எண்ணமும் தீய எண்ணமும் மனத்தின் இயல்பாகும். எந்தச் செயலினைச் செய்தாலும் அது விளைவை ஏற்படுத்துகிறது. இதனையே இந்துநெறி சமஸ்காரம் என்கின்றது. ஒவ்வொருவரின் மனத்திலும் செயல்கட்குரிய விதைகள் உள்ளன. ஒவ்வொரு செயலும் செய்யத் தூண்டப்படுமிடத்து அது உருவாவதற்குக் காரணமான செயல் மீண்டும் செய்யத் தூண்டப்படுகிறது. ஒருவர் செய்யும் செயல்கள் என்றும் அழிவதில்லை அவை யாவும் இன்னுமொரு பிறவிக்கு எடுத்துச் செல்லப்படுகினறன. இங்ஙனமாக ஒவ்வொருவரும் தத்தமது பாவச் செயல்களைச் சுமக்கின்றார்களே தவிர இன்னுமொருவரின் பாவத்தைச் சுமப்பதில்லை.

குருரங்கள், வால்மீகியாக ஆவதற்கு முன்னர் பாபச் செயல்களையே செய்துவந்தான். நாரதர்

குருரங்களிடம் சென்று "இத்தகைய பாபச் செயல்களைச் செய்து வருகின்றாயே, உனது வீட்டிலுள்ளவர்களிடம் கேட்டுப்பார், நீ இங்ஙனம் செய்யும் பாபச் செயல்களின் பலனை அவர்கள் சுமப்பார்களா என்று". அவ்வண்ணமே குருரங்கன் தன் வீட்டிலுள்ளவரிடம் சென்று "நான் உங்களுக்காகவே பாபச் செயல்களைச் செய்தேன். என்னுடைய பாபச் செயல்களின் பலனை நீங்களும்தான் சுமக்க வேண்டும்" என்கின்றான். ஆனால் அவர்கள் "நீ தானே செயலைச் செய்தாய். அதன் வினையை நாம் ஏன் சுமக்க வேண்டும். நீதான் செய்த செயல்களுக்குரிய விளைவினைப் பெறவேண்டும்" என்றனர். குருரங்கள், தான் செய்த பாபச் செயல்களின் பலனை அநுபவித்தான். அதன் பின்னரே அவனால் வால்மீகி இராமாயணம் எழுதப்பட்டது. எனவே இந்த சமஸ்காரங்களும்சரி எமது மனமும் சரி பிரகிருதியிலிருந்து உண்டானவை என்பது தெளிவாகிறது.

இந்துநெறி ஏனைய நெறிகளை விடப் பாபச் செயல்களில் மிகுந்த அக்கறை கொண்டது. இந்தப் பிறவியில் கொண்ட பாவத்திற்கு ஒருவன் அதற்குரிய பரிகாரத்தினைத் தேடத் தொடங்கிவிடுவான். இந்தப் பரிகாரங்கள் யாவும் கண்ணுக்கு வருவது புருவத்துடன் போவது போன்றது. அதாவது அவன் செயலுக்கான விளைவின் அநுபவத்தினைப் பெற்றே ஆகவேண்டும்.

வினை விதைத்தவன்தான் வினையின் விளை வினையும் அறுக்கவேண்டும்.

*இதனையே பட்டினத்தார்*

**தாமே தமக்குச் சுற்றமும்**

**தாமே தமக்கு விதிவகையும்....**

*எனவும்,*

**இந்த ஊனெடுத்த**

**பின் செய்த தீவினை யாதொன்றும் இல்லை பிறப்பதற்கு**

**முன்செய்த தீவினையோ இங்ஙனமே வந்து முண்டதுவே**

*எனப் பாடியுள்ளார்.*

**அறம்பல் எவ்வண்ணம்அவ்வண்ணம் இன்பம்.**

**மறம்பல எவ்வணணம் பாவம்** *(திருமூலர்)*

**நல்லவை செய்யின் இயல்பு ஆகும் தீயவை**

**பல்லவை தூற்றும்பழியாகும்**

இதற்கமையவே நீதி நூல்கள் புண்ணியத்தைத் தேடுங்கள், பாவங்களைச் செய்யாதீர்கள் என்கின்றது. ஆனால் ஒருவருக்குப் பாவமாக இருப்பது இன் னொருவருக்குப் பாவமாக இருப்பதில்லை. நாம் வேட்டையாடினால் அது பாவம். அது வேடனுக்குப் பாவமில்லை. சூதாடுவதும் போர் தொடுப்பதும் அரசரின் தருமம். எனினும் தருமர் திரௌபதியைச் சூதாட்டத்தில் பணயம் வைத்ததுதான் பாபச் செயல்.

அதனாலேதான் அவரவருக்குத் தர்மமாகத் தெரிந்தவற்றை அவரவரே செய்ய வேண்டும்.

சாதரண நிலையில் பாவமாகக் கருதப்படுவது சங்கடமான நிலையில் பாவமாகக் கருதப்படுவதில்லை என்பதை நாம் காணக்கூடியதாக இருக்கிறது. 'ஆயிரம் பொய்சொல்லி ஒரு கலியாணத்தை நிறைவேற்றலாம்' என்பார்கள். இங்கே பொய்சொல்லுதல் பாவமாகக் கருதப்படவில்லை. அதாவது ஒரு நன்மையின் பொருட்டுப் பொய்சொல்லல் அனுமதிக்கப்படுகிறது.

பொய் சொல்வது பாவம் எனினும் பிறர்க்கு அதனால் நன்மை கிடைக்குமாயின் அது பாவமில்லை.

**பொய்மையும் வாய்மை இடத்து புரைதீர்ந்த**
**நன்மை பயக்கு மெனின்**

தன்னைக் கொல்லவரும் பசுவையும் கொல்லலாம் என்கிறது மனுதர்ம நீதி. அதைச் சார்ந்துதான் தற்பாதுகாப்புக்காகக் கொலை செய்தல் தண்டனைக் குரியதல்ல என்கிறது தற்காலச் சட்டம்.

ஆகவே பாவம் புண்ணியம் என்பதைத் அறிந்து கொள்ள எமது முன்னோர்கள் வழியைப் பின் பற்றுவதே சாலவும் சிறந்தது.

அமுதம் கூட அளவுக்கு மிஞ்சினால் நஞ்சாகிவிடும்.

யட்சன் தருமரிடம் தாங்கள் எவ்வழியினைப் பின்பற்றி நற்செயல்களை ஆற்றுகின்றீர் எனக் கேட்டான். தருமர் யக்ஷ்னிடம் கூறியது, "வேதமோ

கடல், அதனை முழுவதும் படித்துத் தெரிந்து கொள்ளமுடியாது. சாத்திரங்களோ பல. ரிஷிகளோ பலர். ஒருவரைவிட்டு ஒருவர் கூறியவற்றினைப் பின்பற்றினால் மற்றவர் வழி முரண்படும். சுயமாகத் தர்மத்தை எவராலும் புரிந்துகொள்ள முடியாது. பெரியவர்கள் என்ன செய்தார்களோ அதைச் செய்கிறேன். எங்ஙனம் நடந்து கொண்டார்களோ அப்படியே நடந்து கொள்கிறேன்" என்றார்.

ஆகவே பாவம் புண்ணியம் என்பதனை எங்ஙனம் அறிந்து புண்ணியத்தைத் தேடலாம் என்றால் நமது சான்றோரான முன்னோர் வழி செல்வதே சிறப்பு. எவ்வாறாயினும் பாவமோ புண்ணியமோ அதனதன் பலன்களை அனுபவிப்பதில் எவரும் தப்பவில்லை என்பது வரலாறு.

எது எவ்வாறு இருப்பினும் இந்து நெறியின் தாற்பரியம் பிரபஞ்சத்துடன் இணைந்தது. கடலில் விளையும் சிப்பிக்கு எத்தகைய மதிப்பும் கிடையாது. ஆனால் கிடைத்தற்கு அரிதான விலையுயர்ந்த முத்தின் வளர்ச்சிக்கு சிப்பி அவசியம். எனவே எமது வாழ்வினை வாழ்வாங்கு துய்ப்பதற்கு நமது செயல்கள் அதாவது சமஸ்காரங்கள் கிரியைகள் முக்கியம். அறியாமையை அறிவுக்கண்நோக்கி நீக்குவதன்மூலம் பாபச்செயல்களுக்கான அதர்ம நெறியினின்றும் நீங்கி நல்வாழ்வினை வாழ்வோமாக!

✡

10

# கர்ம தத்துவம்

எந்த ஒரு செயலோ, எண்ணமோ பலனை விளைவிக்குமானால் அதனைக் கர்மா என்பர். கர்மாவின் காரணம் விதி என்பர். காரணம் எங்கு உளதோ அங்கு பலனும் பிறக்கும். நாம் பிறக்கும் பொழுதிலிருந்தே கையையும் காலையும் அசைத்து, கண்களையும் நாலா பக்கங்களிலும் சுழற்றிக் கர்மம் ஆற்றத் தொடங்கி விடுகின்றோம்.

'கிறு' என்ற வடமொழி வினையடியிலிருந்தே கர்மம் என்ற சொல் வந்ததாகக் கூறுவர். இற்றைக்கு 3500 ஆண்டுகளுக்கு முன்பான வேத காலந்தொட்டே கர்மம் பற்றிய கருத்துக்கள் இருந்துள்ளன. வருணக் கடவுளர் அறக்கடவுளராகவும் அவர்தான் ஒழுக்கக் கடவுளராகவும் போற்றப்படுகிறார். அவரது இடது கண் சந்திரச் சுடராகவும் வலது கண் சூரியச் சுடராகவும் கொண்டுள்ளமையால் தகாத செயல்களை ஆற்றினால் வருணன் சுட்டெரித்து விடுவான் எனப் பயந்து மக்கள்

ஒழுக்க நெறிப்படி செயல்களை ஆற்றினர். ஆயிரம் யாகங்கள் செய்வதன் மூலம திலீபன் சக்கரவர்த்தி இந்திரப்பதவி பெற்றான் என்பது வரலாறு. எந்தக் கர்மச் செயல்களை ஆற்று மிடத்தும் மோதிர விரலில் தர்ப்பையை அணிவது வழக்கம். இது வர்ண பகவானைக் குறிப்பதாகும்.

இந்துநெறி புண்ணியம், பாவம், ஊழ்வினை, பிறப்பு, இறப்பு, மறுபிறவி, சுவர்க்கம், நரகம் என்ற நம்பிக்கையில் வேரூன்றி விளங்குகின்றது. ஒவ்வொருவரும் தத்தம் இயல்பில் மூன்று தன்மைகளினால் கர்மம் செய்யத் தூண்டப்படுகின்றனர். ஆசை, ஞானம், செயல் இவை மூன்றும் ஒன்றாக இணையுமிடத்து நற்செயல்களைப் புரிந்தால் புண்ணியமான பலனும், தகாத செயல்களை ஆற்றினால் பாவங்களும் பெறப்படும். எனவே நாம் முற்பிறவிகளில் செய்த நன்மை தீமைகளினால் பூவுலகில் பிறந்து இன்ப துன்பங்களை அனுபவிக்கிறோம். ஒருவர் செய்த கர்மாக்களை அவரவரே அநுபவித்தல் வேண்டும். இன்னொருவர் மீது அவற்றைச் சுமத்தமுடியாது. இதனை ஔவையர்,

**புண்ணியமாம் பாவம் போம் போனநாட் செய்தவவை**
**மண்ணிற் பிறந்தார்க்கு வைத்த பொருள் எண்ணுங்கால்**
**ஈதொழிய வேறில்லை யெச்சமயத் தோர் சொல்லுந்**
**தீ தொழிய நன்மை செயல்.**

பாவம் புண்ணியம் ஆகிய இரண்டிலும் முதலில் பாவமே அநுபவிக்கப்படுகிறது. அதன் பின்னர்தான் புண்ணியத்தின் பலன் எம்மை வந்தடைகிறது. பாலைக் காய்ச்சும் பொழுது முதலில் பாலைவிட்டு நீர் நீங்கி விடுவதுபோல் பாவம் முன்னே ஓட பாலைப்போன்ற புண்ணியபலன் பின்னேதான் கிடைக்கப்பெறும்.

கர்மத்தைப் பற்றிய பல்வேறு கருத்துகள் உள்ளன. கர்மத்தைப் பற்றிய கருத்துக்களைக் கொண்டு உலகளாவிய ரீதியில் மக்களை மூன்று வகையினருக்குள் வகுக்கலாம். முதலாவது வகுப்பினர் "ஒவ்வொருவரும் தாம் வாழ்ந்து கொண்டிருக்கும் வாழ்வே உண்மை யானது. முன்செய் வினையோ முற்பிறப்போ என்பது கிடையாது". இவர்கள் பழவினைகளை மறுப்பர்.

அடுத்த பிரிவினர், "பழைய வினைகளை ஏற்றுக் கொள்வதுடன், அவற்றிற்கு வல்லமையும் உண்டு" என நம்பிக்கையுடையவர்கள்.

மூன்றாவது வகையினர், "பழவினை மட்டுமே உண்டு" என வாதிப்பர்.

இவர்களுள் முதல் வகுப்பினர் மேல் நாட்டினராவர். இரண்டாவது வகையினர் இந்து சமயத்தைச் சார்ந்தோர். பௌத்த சமண சமயத்தவர் மூன்றாவது வகுப்பினர்.

இக்கொள்கைகளின் விளக்கங்களைக் கொண்டு பழைய வினையே இல்லை என்பதையும், பழவினை மட்டுமே உண்மை என்பதையும் ஏற்றுக்

கொள்ளமுடியாது. பழைய வினைகள் உண்மை இல்லை என்றால் ஏன் ஓர் உயிர் அளவில்லாத இன்னலையும் இன்னுமோர் உயிர் ஏன் சந்தோஷமான வாழ்வையும் பெறவேண்டும்? மூன்றாவது வகுப்பினர் கூறும் வினை தானாகவே தன்னைச் செய்தானைச் சென்று அடையும் என்ற கொள்கையும் பொருந்தாது. ஒரு உயிரே வினைகளைத் தெரிவு செய்யுமாயின் அவ்வுயிர் தீய கன்மங்களின் பயன்களை நீக்கி எல்லாவற்றையும் நல்ல பயன்களைத் தெரிவுசெய்யும் அல்லவா. எந்த உயிரும் தானாகவே தனக்குத் துன்பத்தைத் தேடிக்கொள்ள விரும்பமாட்டாது.

இந்து தர்மம் கர்மச் செயல்களில் மூன்று வினைகளைப் பற்றி மிகவும் அழுத்தமாகக் கூறுகின்றது. ஒரு செயலை ஆற்றுமிடத்து அது அடுத்த செயலுக்கும் காரணமாகின்றது. இங்ஙனமாக செய்யப்படும் வினை ஆகாமியம் எனப்படும். இங்ஙனமாகச் செய்யப்பட்ட பல செயல்களின் உருவாக்கமே சஞ்சிதகர்மம் ஆகும்.

இங்ஙனமாக நின்றவற்றில் ஒரே மாதிரிப் பயன்களைத் தருகின்றவை, பக்குவப்பட்டவை ஒரு தொகுதியாகி, ஒருபிறவியைத்தருகின்றது. இதனைஉயிர் அனுபவித்தே யாகவேண்டும். இதில் இப்பிறவியில் நாம் ஆற்றும் ஆகாமிய கர்மங்களில்மட்டும் சுதந்திரம் உண்டு. புதிய கர்மங்களை ஆற்றாமல் இருப்பதற்காக இறைவனைத் துதித்து, தூயமனத்துடன் சிந்தித்தபடி வாழ்ந்தால் புதிய கர்மங்கள் சேரமாட்டாது.

பிறவிகளைத்தருகின்றகர்மங்கள்குறைந்துவிடும். இதில் சஞ்சிதவினைகள் இறைவனுக்குச் செய்யப்பெறும் பூசை வழிபாடுகளில் அதாவது கிரியை வழிபாட்டினால் வலிமை ஒடுக்கப்படும். இப்பிறவியில் அநுபவிக்கின்ற பிராரத்துவத வினைகளை அநுபவித்தே தீர்த்தல் வேண்டும்.

ஒருவன் செய்யும் பாவ புண்ணியங்கள் மட்டும்தான் அவனைப் பின்தொடரும். வேறு எதுவும் பின்செல்லாது; எவருமே பின் செல்லார். எனவே ஒவ்வொருவரும் சுயநலன் கருதிச் செயல்களை ஆற்றுமிடத்து அது மறுபிறவிக்குக் காரணமாகிறது. அத்துடன் பழையன கழியும் பொழுதே புதிய கர்மச் செயற்பாடுகளும் உற்பத்தியாகின்றன. நாம் மறுபிறப்பான இன்னல்களினின்றும் விடுபடக் கர்மங்களைத் தன்னலம் கருதாது ஆற்றும் பொழுது உள்ளம் தூய்மை பெற்று தெய்வீக ஒளியும் திருவருளும் எம்மை வந்தடையும். எனவே கர்ம விதிக்குரிய சட்டத்தையும் காரணகாரிய நியதிகளையும் நன்றாகப் புரிந்து கொள்ள வேண்டும். எண்ணங்களை நேர்த்திப் படுத்துவதுடன் கண்ணியத்துடனும் நடந்துகொள்ள வேண்டும். மேலும் நாம் மேற்கொள்ள வேண்டிய நியதிகளாவன, அகப்பூசை, புறப்பூசை, மந்திர பாராயணம், ஆலயவழிபாடு, அடியார் வழிபாடு, சமூகத்தொண்டு என்பனவாம். எப்பணிகளை ஆற்றும் பொழுதும், இறைவன் அளித்த பொருளைக்

கொண்டுதான் நாம் சமூகத்தொண்டுகளை ஆற்று கின்றோம் என்ற மனப்பான்மை கொள்ளவேண்டும். இங்ஙனமாக நடந்து கொள்ளுமிடத்து இறைவனின் திருவருள் எம்மீது படிந்து இறைவனின் திருவடியினை இணையும் பேறினைப் பெறலாம்.

நன்னெறி நூல்கள் கர்மம் தொடர்பாகச் சில சட்டகங்கள் கூறியுள்ளன.

1. **தானே புரிவினையால் சாரும் இருபயனும்**
   **தானே அனுபவித்தல் தப்பாது**

2. **ஊழ்வினை உருத்துவந் தூட்டு மென்பதூஉம்**
   எனச் சிலப்பதிகாரமும்

3. **பிறத்தலும் மூத்தலும் பிணிபட்டு இரங்கலும்**
   **இறத்தலும் உடையது இடும்பைக் கொள்கலம்**
   **மக்கள் யாக்கை இதுவென உணர்ந்து**
   **மிக்க நல்லறம் விரும்புதல் புரிந்தேன்,**
   என்றும்

4. **இளமையும் நில்லா, யாக்கையும் நில்லா**
   **வளவிய வான்பெருஞ் செல்வமும் நில்லா**
   **மிக்க அறமே விழுத்துணையாவது'**

என அறத்தின் மேன்மையினை மணிமேகலையும் சிறப்புற எடுத்துரைக்கின்றன.

ஒவ்வொருவரது வாழ்விலும் ஏற்படும் இன்பங்களும் துன்பங்களும் முன்பே அமைந்து உள்ளவையாகும். எனவே எத்தகைய சூழ்நிலை ஏற்பட்டாலும் சரியான நிலையினின்றும் தவறிவிடக்கூடாது என்பதனை வள்ளுவர்,

**கேடும் பெருக்கமும் இல் அல்ல நெஞ்சத்துக்**
**கோடாமை சான்றோர்க்கு அணி. (115)**

பேராசிரியர் ராதாகிருஷ்ணன் ஒவ்வொருவரும் வாழ்கின்ற வாழ்வியலை ஒரு சீட்டு ஆட்டத்திற்கு ஒப்பிட்டுள்ளார். இவ்விளையாட்டின் பொழுது ஒவ்வொருவருக்கும் பகிர்ந்து வழங்கப் பெறும் சீட்டுக்கள் யாவும் பழைய வினைகள் என வைத்துக் கொள்ளலாம். பகிர்ந்து வழங்கப்பெற்ற சீட்டுக்களில் எந்தவிதமான தெரிவிற்கும் எமக்குச் சுதந்திரம் இல்லை. எனினும் கிடைக்கப்பெற்ற சீட்டுக்களின் அடிப்படையில் கவனமாக ஆட்டத்தினை ஆடுமிடத்து வெற்றியோ அன்றித் தோல்வியை அடையும் வாய்ப்பு நமக்கு உண்டு. எனவே பழைய வினைகளைத் தெரிவு செய்யும் அதிகாரம் இல்லாவிட்டாலும் அதனை வைத்துக் கொண்டு மேலே ஆக்குவதோ அழிப்பதோ யாவும் அவரவர் செயற்பாட்டிலேயே உளது. இதனையே இந்துசமய நெறி வலுவாக உறுதியாக நம்பிக்கை கொண்டுளது எனலாம்.

எப்பொழுதும் தர்மச் செயலானது அவன் செல்லும் வழியில் சென்று காத்திருக்கும் என்பதனை பின்வரும் குறள் அழகுற விளக்குகிறது.

**கதம் காத்துக் கற்று அடங்கல் ஆற்றுபவன் செவ்வி**
**அறம் பார்க்கும் ஆற்றின் நுழைந்து (130)**

கோபத்தினை அடக்கி, தான் கற்ற கல்வி அறிவினை மானுடப் பண்புடன் வாழும் சிறப்பினைப் பெற்றுள்ளவனைத் தர்மம் அவன் வழியில் சென்று காத்திருக்கும்.

**காய்த்தமர மதுமிக்க கல்லடிப்படும்**
**கன்மவினை கொண்ட காயம் கண்டனை பெறும்.**

நன்றாகப் பழம் காய்த்துத் தொங்கும் மரத்தின் மேல்தான் அனைவரும் கல்லடிப்பர். அதுபோல பாவம் செய்த உடல்தான் தான் ஆற்றிய வினைகளுக்கேற்ப தண்டனைபெறும் என்பது பாம்பாட்டிச் சித்தரின் பொன்மொழியாகும். வழக்கமாகக் காய்த்த மரத்திற்கே கல்லடிப்படும் என்பதனை அவர் வாழ்வியலின் தத்துவார்த்தமாக விளக்கியுள்ளார்.

ஒருவர் செய்யப்பெறும் வினைகளின் பயன்கள் அவரவரை விட்டு அகலமாட்டாது. அவரவர் அநுபவத்தே ஆகவேண்டும். இரும்பினைப் பழுக்கக்

காய்ச்சிய பின்பு அதனை வெளியில் எடுத்தாலும் அந்த இரும்பு சுடும். காரணம், வெளியே எடுத்தாலும் அதனுள் வெப்பம் இருக்கும். அதேபோன்றே அவரவர் வினைகள் அவரவரை விட்டு அகலமாட்டாது.

நாம் கிடைக்கப்பெற்ற அரிதாகிய மானிடப் பிறப்பான வாழ்வியலை நியதிப்படி நின்று தர்மநெறிகளை ஆற்றுதல் வேண்டும். எமது இறுதிநிலை எப்பொழுது ஏற்படும் என்று தெரியாது என்பதனை அப்பர் சுவாமிகள்,

**வந்தவாறு எங்ஙனே போவாமாறேதோ அங்ஙனமாம்**

என்கின்றார். எனவே எமக்கு மேல்மூச்சு, நாத்தழுதழுத்தல் போன்ற உபாதைகள் ஏற்படுவதற்கு முன்பாகவே உரிய தர்மநெறிகளைஆற்றுதல்வேண்டும். இவ்வுலகமானது நிலையானதன்று என்பதனை

**நெருநல் உளன் ஒருவன் இன்று இல்லை என்னும்**
**பெருமை உடைத்து இவ்வுலகு. (336)**

நேற்று இருந்தவன் ஒருவன் இன்று இல்லாமல் இறந்து போனான் என்று சொல்லப்படும் நிலையாமையாகிய தன்மையை உடையது இவ்வுலகு என வள்ளுவப் பெருந்தகை கூறியுள்ளார்.

கன்மம் பற்றிய நியதிகளும் உள்ளன. இதில் முக்கிய குறிப்புகளைக் கூறியாக வேண்டும். முதலாவது

தீயவினைகளினால் கிடைக்கப் பெறும் பாவத்தினை நல்ல செயல்களின் பலனான புண்ணியத்தினால் நீக்க முடியாது. அதாவது வினைக்குரிய பலனை அனுபவத்தே தீர வேண்டும். உதாரணமாக ஒரு ஆன்மாவை இம்சித்துவிட்டு அந்த ஆன்மாவின் பெற்றோர்க்கு உதவிகளைச் செய்தால் இம்சித்த பாவம் தீரமாட்டாது. அதற்குரிய பலன் கிடைத்தே தீரும். ஆனால் உதவிகள் செய்ததன் பலன் வேறாகக் கிடைக்கப்பெறும்.

அடுத்து, அதிக புண்ணியம் செய்த உயிர் அதிக பாவம் செய்த இன்னுமொரு உயிருக்குத் தனது புண்ணியத்தினை அளிக்கமுடியாது. இவையாவும் நடைமுறை விதிகள் என்றாலும் விதிவிலக்குகளாக இடம்பெறுவதற்கு இறைவனுடைய அருட்கடாட்சம் துணைபுரிதல் வேண்டும். எனவே பற்றற்ற வினைகளை ஆற்றவேண்டுமென இந்துதர்மம் வலியுறுத்துகிறது. இதற்கான வழியானது தீவினை செயற்பாடுகளில் வெறுப்பும், நல்ல செயல்களில் பயன் கருதாமலும் அதாவது இரண்டையும் ஒன்றாக நோக்கும் எண்ண மாகும். இதன் மூலம்தான் ஒவ்வொருவரது வாழ்வும் சுபீட்சத்துடன் வாழ முடியுமெனலாம்.

உடல் உயிர் என இரு கூறுகளைக் கொண்ட உடலானது தாம் ஆற்றிய தகாத செயல்களை எங்கு சென்று புனித நீர்நிலைகளில் நீராடினாலும் தூய்மையாக்க முடியாது. பாபக் கர்மாக்களை விலக்க

முடியாது. ஆனால் வரும் தீயனவெல்லாம் தலையுடன் வராதுதலைப்பாகையுடன்நீங்கிவிடும்.அதனாலேதான் இந்துதர்ம நியதியானது ஒவ்வொருவரும் தத்தமது வானப்பிரஸ்தநிலையில் அதாவது இல்லற வாழ்வினை துய்த்ததன் பின்பு தவறாது புனித யாத்திரை செய்வது வழக்கமாகும்.

நமது ஒவ்வொருவரது நிலையும் முடிவு பெறாத கடந்த காலத்தின் விளைவு ஆகும். மின்னல் மின்னுவது போல் ஒரு குழந்தை திடீரென வந்துவிடவில்லை. எல்லையில்லாத கடந்த காலம் எனும் சுமை அவனிடம் உளது. நல்லனவற்றுக்காகவோ அல்லது தீயனவற்றுக்காகவோ அவன்தன் கடந்த காலக் கர்மாக்களை கழிப்பதற்காகவே வந்துள்ளான். இந்தக் கர்மாக்கள் தான் மக்களிடையே பல வேற்றுமைகளை உண்டாக்குகின்றன. இதுதான் கர்மநியதி. ஒவ்வொரு வரும் அவர் அவரே தமது மொத்த விதியினை உருவாக்குபவர்களாக இருக்கின்றனர். தமது வாழ்க்கையை வேறு எங்கோ முன்பே வகுத்து வைத்துள்ளார்கள். அதாவது விதிப்படிதான் எல்லாக் கர்மாக்களும் நடக்கும் என்றெல்லாம் கூறுவதை விட்டுவிட்டு இந்தக் கர்மா என்ற நியதிதான் இறைவனுக்கும் மனிதனுக்கும் இடையில் ஒரே பாலமாகத் திகழ்கிறது என்பதை உணரவேண்டும். நாம் இன்பதுன்பமடைவதற்கு நாமேதான் காரணர். வேறு யாரும் அல்லர். எமதேதான் விளைவுகள், காரணங்கள்.

நாம் சுதந்திரமானவர்கள். நாம் துன்பம் அடைந்தால் அது எமக்கு நாமே உண்டாக்கிக் கொண்டது. நாம் பகுத்தறிவுக்கண் கொண்டு ஒவ்வொரு செயலையும் நியதிப்படியுடனும் நிதானமாகவும், சாத்வீகப் பண்புடனுடனும் செயற்பட்டால் மகிழ்ச்சியாக இருக்க முடியும். எனவே மானுட நெறியாள்கையானது எல்லாச் சூழ்நிலைகளிலும் கலந்து நிற்கிறது. கர்ம நியதிக்கு நாம் ஒதுக்கப்பட்டு அடிமைப்பட்டே ஆகவேண்டும். அதுவே கர்ம நியதி என்பதன் விளைவாகும்.

எமது இந்துநெறியின் கர்ம தாற்பரியம் யாதெனில் தத்துவ நெறிகள் யாவும் வாழ்வுடன் பின்னியுள்ளன மட்டுமன்றி நியதியான வாழ்வினை வாழ வைப்பதற்கும் காரணியாகவுள்ளன என்பதாகும்.

**தானமும் தவமும் தான் செய லரிது**
**தானமும் தவமும் தான் செய்வ ராயினும்**
**வானவர் உலகம் வழிதிறந் திடுமே.**

11

# விதி (ஊழ்)

மனிதரது வாழ்க்கையில் விதிதான் இன்பத்தையும் துன்பத்தையும் அளந்து வைக்கிறது. பாவமோ புண்ணியமோ அதனது பலாபலன்களை அனுபவிப்பதில் எவருமே தப்புவதற்கு விதி விடமாட்டாது.

விதி நன்மையையும் இன்னல்களையும் அளிக்க வல்லது. ஊழ் என்பதன் பொருள் முதிர்ந்தது அல்லது பக்குவப்பட்டது என்பதாகும். எமது முன்வினையான சஞ்சித வினைத் தொகுதியிலே பலன் தருவதற்குப் பக்குவப்பட்டிருக்கும் வினைகளின் பகுதிக்குரிய பெயரே விதி அல்லது ஊழ் எனப்படும்.

ஒவ்வொருவரதும் புண்ணியம் பாவத்திற்கு அமைய அவரவர் இன்பங்களும், துன்பங்களும் அளவுபடுத்தப்படுகின்றன. ஒவ்வொருவரும் தத்தமது விதியினை உருவாக்குகின்றனர். அவரவர் செய்த வினைப்பயன்கள்தான் விதி என்ற பெயரில்

செயற்படுகின்றது. எமக்குக் கிடைக்கப் பெற்ற மானுட வாழ்வை எங்ஙனம் சரியான நெறிப்படி வாழ வேண்டுமென எமது சமய நெறிகள் எடுத்துச் சொல்லியுள்ளன. இதன்வழி விதியை மதியால் மாற்றலாம். முறையற்ற தர்மநெறியற்ற செயல்களை ஆற்றிவிட்டு அதனின்றும் விடுபட முயற்சி செய்தால் மதியே விதியாக வந்துவிடும்.

விதியானது ஒவ்வொருவருக்கும் மூன்று வகைகளில் துன்பங்களைக் கொண்டு வந்து விடுகின்றது. அவை ஆதியாத்மிகம், ஆதிபௌதிகம், ஆதிதெய்விகம் என்பனவாம்.

வினைப்பயனை அனுபவித்தே ஆகவேண்டும். விதியின்மூலம் கால்முறிவு ஏற்பட்டு முடமாகப் போக வேண்டுமென விதி இருக்கு மானால் இறையருள்மூலம் காலில் ஒரு முள்தைப்பதோடு தப்பிவிடலாம்.

தன்னிடத்து உண்டாகும் சிக்கல்களினால் ஏற்படும் இன்னல்கள், ஊனம், காயம், சூடு, குளிர் அவமானம், வெறுப்பு, குழப்பம் முதலியவை தனக்குத்தானே அடைபவை யாவும் ஆதி ஆன்மிகம் ஆகும்.

ஆதி பௌதிகம் என்பதில் கிடைக்கப் பெறுபவை, தன்னைப் போன்ற மனிதர்களால், விஷ ஜந்துக்களால், காட்டு விலங்குகளால், ஏற்படும் இன்னல்களாகும்.

பஞ்ச பூதங்களான இடி, மின்னல், புயல், காற்று, நீர்நிலைகள் போன்றவற்றினால் கிடைக்கப் பெறும் இன்னல்கள் யாவும் ஆதி தெய்விகத்தினால் ஏற்படுவையாகும்.

இவை யாவற்றுக்கும் அடிப்படைக் காரணியாக அமைவது அவரவர் செய்த முன் வினைகளேயாம். உணர்வுகளைத் தூண்டவிட்டு, செயல்களை ஆற்றவைத்து, துன்பத்தில் உழல வைப்பதும் விதியே.

இளங்கோவடிகள் சிலப்பதிகாரத்தில்,

**அறங் கூற்றாவதும்,**
**ஊழ்வினை வந்து உருத்துவதும்**

எனக் கோவலன் கண்ணகியின் துன்பநிலைக்கான காரணத்தைக் குறிப்பிடுகின்றார்.

கோவலன் மாதவியின் மகளான மணிமேகலை துறவறம் எய்ய வேண்டிய நிலைமை விதியின் வலிமையினாலேதான்.

**வினைப்பயனை வெல்வதற்கு வேதம் முதலாம்**
**அனைத்தாய நூலகத்தும் இல்லை**

ஔவையார் கூற்றாக வருவது,

**நிதியும் கணவனும் நேர்படினும் தத்தம்**
**விதியின் பயனே பயன்.**

இன்றைய பிராரத்துவ வாழ்வியலை தர்ம நெறிப்படி, நியதிப்படி, கட்டுப்பாட்டுடன் நெறிப்படுத்தினால் நாளைய விதி நல்லனவற்றையே செய்யும்.

**எவ்வுயிரும் காக்கவொரு ஈசனுண்டோ இல்லையோ**
**அவ்வுயிரில் நானொருவ னல்லனோ – வவ்வினை**
**அருகுவது கொண்டிங்கலைவதேன் அன்னே!**
**வருகுவது தானே வரும்.**

*யாவும் விதிப்படியே நிகழும் என்பதனை வள்ளுவர்,*
**ஊழையும் உப்பக்கம் காண்பர் உலைவு இன்றித்**
**தாழாது உஞற்று பவர்** *(620)*
*எனக்கூறியுள்ளார்.*

*மனம் சோராது குறைகள் இன்றித் தொடர்ச்சியாக முயன்று உழைப்பவர் தம் முயற்சிக்கு இடையூறாக வரும் விதியையும் வென்றுவிடுவார். எனவே எமது எண்ணங்கள், செயல்கள் யாவும் விதிக்குக் காரணமாகும். காரணம் எங்கு உளதோ அங்கு பலனும் கிடைக்கும். விதையின் பலனால் மரம் தோன்றி மீண்டும் விதைகளை உண்டாக்குகின்றது. எனவே மரமே விதைகளுக்கு மூலமாக விளங்குகின்றது.*

**இம்மை செய்தது மறுமைக்கு ஆம் எனும்**
**அறவிலை வணிகன் ஆய் அலன்.**

*என்பது திருக்குறளுக்கு முன்னோடியான புற நானூற்றில் வரும் கூற்றாகும்.*

மனிதன் என்பவன் மூன்று இயல்புகளைக் கொண்டவன். இச்சை - ஆசை, ஞானம் - அறிதல், கிரியா -செயல்புரிதல். இம்மூன்றும் இணைந்தே அவன் ஒவ்வொரு செயற்பாடுகளையும் ஆற்றுகின்றான்.

ஒருசெயலுக்குப்பின்னால்பற்றும்அதனைஎங்ஙனம் அடைதல் என்ற எண்ணமும் தோன்ற அதனைப் பெற அவன் செயற்படுகின்றான். அவனது ஆசை, எண்ணம்-செயல் மூன்றும் இணைந்தே செயற்படுகின்றன. இவை மூன்றும் நூற்பிரிகள். இவை மூன்றும் திரிக்கப்பட்டு கயிறாக எல்லாச் செயல்களையும் ஆற்ற வைக்கிறது. ஒவ்வொரு செயலுக்கும் பலன் உளது. முன் பலன்களை விதி என்கின்றோம் வரும் பலன்களுக்கு எமது செயல்களே காரணகாரியமாகின்றது.

வள்ளுவரும் ஊழ் என்பதற்குத் தனியாக ஒரு அதிகாரமே வைத்துள்ளார்.

**ஊழின் பெருவலி யாவுள மற்று ஒன்று**
**சூழினும் தான் முந்துஉறும் (380)**

விதியினைப் போல் வலிமையான ஒருபொருள் உலகில் வேறு இல்லை. விதி மனிதனுடைய எல்லா முயற்சிகளையும் அழித்து முடிவில் அது வெற்றி பெறுகிறது.

கர்ணன் சூரிய பகவானின் சக்தியாலும், குந்தி கன்னியாக இருந்தபொழுது பிறந்த காரணத்தினாலும் தமது சகோதரர்களை இழந்து தகாத நட்புக்கு உள்ளாகின்றான். இதற்குக் காரணம் விதிதான். வாழும்

பொழுது குந்தியை அம்மா என விளிக்காமைக்குக் காரணம் விதிதான்.

பீஷ்மரை நைஸ்டிகப் பிரமச்சாரியாக வாழவைத்த மைக்கு காரணம் விதிதான்.

திருதராட்டினன் தனது 100 மைந்தர்களையும் கண்ணாரக் கண்டு அகமகிழ்ந்து இறுமாப்பு அடைய வைக்காத சூழலை அமைத்ததும் விதிதான்.

அதனாலே தான்,

**விருப்பாசைக்கு இடங்கள்**
**கொடாதே காய**
**வேதனைக்குள்ளே நீ கட்டுப்படாதே**

எனக் கஞ்சமலைச் சித்தர் கூறியுள்ளார்.

நாம் நேரிலே எத்தனையோ நிகழ்வுகளைக் காண் கின்றோம். ஒருவன் எத்தகைய செல்வங்கள் இருந்தும் அதன் அநுபவத்தினைப் பெறாமலே துறவறத்தினை மேற்கொள்கின்றான்.

பத்து வயதுவரை பிள்ளைகள் செய்யும் செயற்பாடு களின் பலன் பெற்றவர்களைத்தான் சேரும். பெற்றோர்களின் தகாத செயல்களின் பலன்கள் பிள்ளைகளைச் சாரும். விதுரன் விதியின் வலியினாலே தான் பணிப்பெண்ணுக்கும், வியாசருக்கும் மகனாகப் பிறந்தார்.

செல்வங்கள் சேர்த்து ஒருவர் வைத்திருந்தாலும் அதன் அநுபவத்தைப் பெறமுடியாதென வள்ளுவர்

கூறுகின்றார்.

**வகுத்தான் வகுத்த வகை அல்லால் கோடி**
**தொகுத்தார்க்கும் துய்த்தல் அரிது** *(377)*

கோடிக்கணக்கான செல்வத்தை இப்பிறப்பில் முயன்று சேகரித்தாலும் விதி இருந்தால்தான் அதன் அநுபவத்தை உய்க்க முடியும்.

விதியை நாம் வெற்றி பெற்று மண்ணில் நல்ல வண்ணம் வாழ்வதற்குச் சங்கல்பம் கொண்டோமானால் மார்க்கண்டேயர் தனது 16 வயதின் விதியினை வென்றது போல், இறைவனிடம் எமது மனம், மொழி, செயல் மூன்றினையும் தூயதாக்கி ஒன்றிணைத்து அவனது திருவடியில் சமர்ப்பிக்க வேண்டும்.

ஒருவரது வாழ்க்கையைச் செம்மை பெற வைப்பது அவரது செயற்பாடுகளிலேதான் உளது எனலாம்.

புராண இதிகாசங்கள் அனைத்துமே விதியின் வலிமையினையே வலியுறுத்துகின்றன. இராமாயணம், மகாபாரதம் இரண்டுமே வாழ்க்கை நியதியான அறத்தையே வலியுறுத்துகின்றன.

இறைவனையும் தேவர்களையும்கூட விதி விட்டு வைக்கவில்லை என்பதனைப் பின்வரும் பாடல் விளக்குகிறது.

**சந்திரனுக் குடலூனந் தனதனுக்கோர்**
**கண்ணூனந் தருவி னிழல்**
**இந்திரற்கோ பகற்குறியா மியமனுக்கோ**
**புழுக்காலா மிரவி யின்ற**

**மைந்தனுக்கோ கால்முடமாம் வசனனுக்கோர்**
**தலைக்குறையாம் வாழ்வா ரானால்**
**பந்தமுள மானிடரை விதிவிடுமோ**
**ஆலவாய்ப் பதியு ளானே** - *சொக்கநாதப்புலவர்.*

*சந்திரனுக்கு உடலில் கூன் உள்ளது. குபேரனுடைய ஒரு கண் குருடாகும். கற்பகதருவின் நிழலில் உள்ள தேவர்களின் தலைவனான இந்திரனுக்கு மேனியெங்கும் பெண் குறிகள். யமனுக்கு புழுக்கள் நிறைந்த கால்கள். சூரியனின் மைந்தனான சனீஸ்வரனுக்கு ஒரு கால் ஊனமாகும். பிரம்மனுக்கு ஒரு தலை குறைக்கப்பட்டு உள்ளது. ஞானியரையும் விதி விட்டுவைக்கவில்லை என்பது வரலாறு.*

*தேவர்களின் வரலாறே இவ்வாறாக இருக்குமானால், பந்த பாசங்களினால் பிணைந்து சிக்கித் தவிக்கும் சாதாரண மானிடரை விதி விட்டுவிடுமா? எனவே விளையத் தொடங்கிய வினை எனும் தளையினை அனுபவித்தே ஆகவேண்டும் மாற்றுவழி இல்லை யெனலாம்.*

*எம் ஒவ்வொரு செயற்பாடுகள், நடத்தைகள், இவைகளில் தீர்ப்புத்தான் விதி எனலாம்.*

*ஒவ்வொருவரும் இன்றைய வாழ்வியலை நியதிப்படி செய்யுமிடத்து நாளைய விதி நன்றாக அமையும். இதற்காகவே நாம் நல்லொழுக்க சீலராக இருக்க வேண்டும் ஒவ்வொரு இன்ப துன்பத்திற்குப் பின்னாலும் கடந்த காலப் பலனுள்ளது.*

✡

12

# மறுபிறப்புக் கோட்பாட்டின் வலிமை

ஒவ்வொருவரும் செய்யும் செயற்பாடுகள் மனத்தினால் எண்ணப்படுபவை, வாக்கினாற் கூறப்படுபவை, சரீரத்தினால் செய்யப்படுபவை என மூவகைப்படும்.

ஒரு உயிர் தொடர்பாகச் செய்யப் பெறுபவை பசு புண்ணியமெனவும், தீய செயற்பாடுகள் பசுத்துரோகமெனவும், பிரதிபயன் கருதாது செய்யப் பெறும் செயல்கள் யாவும் சிவபுண்ணியம் எனவும் கொள்ளப்படும். நல்ல செயல்களை ஆற்றிய உயிர்கள் நல்ல சூழலிற் பிறந்து இன்பத்தைத் துய்க்கும். தீய செயல்களை ஆற்றியிருப்பின் தகாத சூழலில் பிறந்து துன்பத்தில் உழன்று தவிக்கும். எனவே நற்செயல்களும் தீய செயல்களும் மறுபிறவிகளுக்கு காரணியாகின்றமையால் கர்மங்களை தளைகள் எனவும் வழங்குவர். உயிர் உடம்புடன் சேர்ந்தவுடனேயே செயல்களை ஆற்றத் தொடங்கும்.

எமது உடல் பஞ்ச பூதங்களினால் ஆனது. இவை

அழியும் தன்மை உடையது. ஆனால் ஆத்மா (உயிர்) என்பது தனிப்பொருள். அதற்கு அழிவில்லை அது நிரந்தரமானது. நெருப்பின் தன்மை சுடுவது, நீரின் தன்மை ஈரலிப்பாக்குவது, அதே போன்று உயிரின் தன்மை அழியாதது. சூரியன் சந்திரன் நட்சத்திரங்கள் அவைகளுக்குரிய பாதையிலேதான் சுழன்று கொண்டிருக்கின்றன. அவை தம் விதியினை அதாவது நியதியினை மாறிச் செல்லமுடியாது. அதேபோன்று தான் நாமெல்லாரும் எமக்குரிய விதிகளை மீறிச் செல்லமுடியாது. அதுதான் கர்மவிதியாகும். ஒவ்வொரு கன்மத்திற்கும் வினைப்பயன் உண்டு. சில வினைகளின் விளைவு உடனே வரும். காலந்தாழ்ந்து சில விளைவுகளின் பலன் வரும். இதுதான் இந்து தர்மம் கூறும் மறுபிறப்பு நியதி. நாம் ஆற்றும் செயல்களின் பலன்களை ஒரு பிறவியில் அநுபவிக்க முடியாது.

ஒருவனிடம் யாவற்றையும் வழங்கும் காமதேனுவும் கிடைத்தற்கரிய சொர்க்கத்துக் கற்பகதருவும் கிடைத் தாலும் சுகம் பெற முடியாது. பூர்வ புண்ணியம் இருந்தால்தான் அதன் சுகத்தினை அநுபவிக்க முடியும். வினைப்பயன்களை முழுமையாக அநுபவித்துத் தீர வேண்டுமென்பது நியதியாகும். அதற்காகவே உயிர்கட்கு மறுபிறவி என்ற சந்தர்ப்பம் வழங்கப் பெறுகிறது. பிறவிப் பிணியினின்றும் நீங்க வேண்டுமேயானால் எதிலும் பற்று இல்லாதவர்களாக, கடமையினை வழுவாது ஆற்றுபவர்களாக இருத்தல்

வேண்டும். அதாவது நிலையில்லாத லௌகிகப் பொருள்களில் மீதுள்ள பற்றினை நீக்கவேண்டு மேயானால் நிலையான இறைவனைப் பற்றி நிற்றல் வேண்டும்.

**பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றைப்**
**பற்றுக பற்று விடற்கு.** *(குறள் - 350)*

மனிதனின் உடல் அழிந்தாலும் ஆத்மா நித்தியமானது, அழியாதது. அதனை வெட்டவோ அழிக்கவோ முடியாது. உயிரானது காரணம் காரியம் என்ற வட்டத்தைச் சுற்றிச் சுழன்று கொண்டே இருப்பதான கர்மநியதி காரணமாக எமது வினைகள் உள்ளமட்டும் நாம் பிறந்து கொண்டே இருக்க வேண்டும். இதுதான் கர்ம மறுபிறப்பைப் பற்றிய கொள்கை ஆகும். நாம் ஒவ்வொருவரும் பிறப்பு, இறப்பு என்னும் விதிக்கு அடிமை. வினைகளின் அடிமைத் தளையினின்றும் விடுபட வேண்டுமேயானால் ஒவ்வொரு செயலையும் பயன் கருதாது யாவும் இறைவனுக்கே என்று ஆற்றுவதன் மூலம் பிறவிப்பிணித் தொடரைக் குறைக்கமுடியும்.

கழிந்த பிறவி, தற்காலிக பிறவி, வருங்காலப் பிறவி என்ற நம்பிக்கையை இந்து கர்மவிதி ஒவ்வொரு உயிருக்கும் தருகின்றது.

கழிந்த பிறவியினை எங்ஙனம் நிரூபிக்கலா மென்றால், ஒரு உயிர் பிறக்கும் பொழுதே ஊனம், ஏழ்மை, அகோரம், நோய் எனப் பல உண்டாவதற்கு வேறு என்ன காரணம் கூறமுடியும்? இதன் காரணி அவரவர்கள் முற்பிறவிகளில் செய்த கர்மப் பலன்களேயாம்.

ஒரு செயலும் ஆற்றாமலே பிறந்த உயிர்கட்கு ஏற்படும் இன்பதுன்ப சூழ்நிலைக்கு காரணம் உண்டென்றால், அது கழிந்த பிறவியில் செய்யப்பட்ட கர்மாவாகத்தானே இருக்க முடியும்.

பிறவி ஊனம், முடங்கள், பிணி எத்துணை அவலங்கள்! கண்ணெதிரே தோன்றும் இந்தப் பிறவிகள் ஒரு பாபச் செயலும் ஆற்றாத இவர்கள் இந்நிலையினை அடைவதற்கான காரணம் என்ன? இங்ஙனமாகத் துன்ப சாகரத்தில் உழரக்காரணம் கழிந்த பிறப்பில் செய்த வினைகள்தான் எனவேதான் வாழ்வில் ஏற்படும் இன்பம், துன்பம், ஏற்றம், இறக்கம், அமைதி, குழப்பநிலை இவற்றுக்கெல்லாம் நீதான் காரணம். மற்றவர்களைக் குறை கூறாதே என்கிறது இந்து கர்மவிதி. இதனையே கீதையில் கிருஷ்ணபரமாத்மா 'நல்லவர் கெடுவதில்லை, நற்செயல்களின் அளவு அடுத்த பிறவியிலும் பின் தொடர்ந்து வந்து நல்ல பலன்களைத் தரும்' என்கின்றார்.

இதன் காரணமாகவே முக்குணங்களான தாமத குணத்தினின்று விடுபட்டு இராசத குணத்தினின்றும் நீங்கி பௌர்ணமி போன்ற சாத்வீகக் குணப்

பண்புகளான அன்பு, பணிவு, நான் எனது என்ற கர்வமின்மை, ஆகியவற்றுடன் வாழவேண்டும். மனம், வாக்கு, காயம் மூன்றும் ஒன்றிணைந்த தூய சிந்தனையுடன் செயல்கள் யாவும் இறைவனுக்கே என ஆற்றுதல் முக்கியமானதாகும்.

ஒருவரது பண்பினைத் தகாத வழிக்கு நெறிப் படுத்துவது காமம், வெகுளி, மயக்கம் இவை மூன்றும் ஆகும்.

நாம் ஆற்றிய வினை தீயினைப் போன்றது. தீ சிறிது சிறிதாகப் பெருகி மூண்டு எரிந்து துன்பம் செய்யும். அதனால் வினைக்கு மூளும் வினை என்ற ஒரு பெயரும் உண்டு. செங்கல் சூளை மூண்டெரிவது போல் வினை மூண்டெரியும். 'மூளும் வினை சேர' என்கின்றார் அருணகிரிநாதர். "முன் செய்த தீவினையோ, இங்ஙனே வந்து மூண்டதுவே" என்கிறார் பட்டினத்தார். கண்ணப்பர் ஆறே நாளில் இறையடி சேர்ந்தமையை சேக்கிழார், 'முன் செய்த தவத்தின் ஈட்டம்' எனப் பெரிய புராண வாயிலாகக் கூறியுள்ளார்.

மனிதன் தான் விரும்பியவாறு வாழ முடியாது. மனிதன் தன் விருப்பத்திற்கமைய எவ்வளவு ஆயுள் காலம் வேண்டுமானாலும் வாழ முடியாது. மனம் அடைந்திருக்கும் பக்குவத்திற்கமையவே அவனுடைய சிந்தனையும் அமைகிறது. மனிதனைக் கட்டுப்படுத்தி வைத்திருக்கும் விதிக்குத்தான் ஊழ் அல்லது கர்மத்தின் நியதி என்று பெயர்.

சூனியத்திலிருந்து எதுவும் தோன்றமுடியாது

எமக்கு ஏற்படுகின்ற அனைத்திற்கும் ஏதோ நியதி உளது. அதுதான் கர்மக்கோட்பாட்டின் மறுபிறப்பின் வலிமையாகும்.

அரிதான மானிட வாழ்வானது பிறவியுடன் தொடர்பானது என்பதனை வள்ளுவரின் கூற்று பின்வருமாறு எடுத்தியம்புகிறது.

**உறங்கு வதுபோலும் சாக்காடு உறங்கி**
**விழிப்பது போலும் பிறப்பு. (குறள் 339)**

ஒருவனது உடலைவிட்டு ஆன்மா வீடுபேறு அடைவது தூங்குவதற்கு ஒப்பாகும். அவன் பிறவி எடுப்பது தூங்கி விழித்தெழுந்த நிலையினை ஒத்த தாகும். அது பழைய சட்டைகளைக் களைந்து புதிய சட்டைகளை அணிவது போன்றாகும். கன்மங்களுக்கு பலன்களுக்கமைய ஆத்மாக்கள் புதிய பிறவிகளை எடுக்கும் என்பதுதான் இந்துதர்மக் கோட்பாடாகும்.

உடம்பிற்கும் உயிருக்கும் உள்ள உறவு என்பது கூட்டுக்கும் பறவைக்குமுள்ள தொடர்பு போன்றது. தான் சிரமப்பட்டுத் தேடிய பொருட்களால் கட்டிய கூட்டைத் தனியாக விட்டுவிட்டுப் பறவை எந்த நேரத்திலும் பறந்து போய்விடும். தான் புதிதாக ஒரு கூட்டைக் கட்டித்தான் அடுத்தமுறை முட்டையிட்டு குஞ்சுபொரிக்கும். பழையகூட்டைத்தேடாது. பிணிக்கு இடமாகிய உடம்பில் ஒரு மூலையில் குடியிருந்த

*உயிருக்கு நிரந்தரமாகத் தங்கியிருப்பதற்குரிய வீடு இதுவரையில் அமையவில்லை. அதனாற்றான் உயிர்கள் தத்தமது கர்மங்களுக்கொப்ப விருப்புள்ள உடம்பினைத் தேடி அதன் பிரகாரமாக மறுபிறவி எடுத்துக் கொண்டிருக்கின்றன.*

*திருமூலர் உயிர் குடிகொண்டிருக்கும் உடம்பினை பேணுதல் வேண்டும். உடம்பினைப் பேணுமிடத்து தான் உரிய கர்மங்களை அறநெறி நின்று ஆற்றலாம் என்கின்றார்.*

*உயிரானது தனது கர்மப் பலனுக்கமைய கூடுகளைத் தேடிதேடித் தங்கித் தனது கர்மாத்துவம் முடிந்தவுடன் உடம்பினின்றும் நீங்கிவிடும் என்பதனை வள்ளுவர்,*

**புக்கில் அமைந்தின்று கொல்லோ உடம்பினுள்**
**துச்சில் இருந்த உயிர்க்கு.** *(340)*

*'பிணிகளுக்கு இடமாகிய உடம்பில் ஒரு மூலையில் குடியிருந்த உயிர்க்கு நிலையாகத் தங்கியிருப்பதற்குரிய வீடு இதுவரையில் அமையவில்லை.'*

**பிறந்தன இறக்கும், இறந்தன பிறக்கும்**
**தோன்றின மறையும், மறைந்தன தோன்றும்**

*என்பது பட்டினத்தாரின் பொன்மொழியாகும்.*

*பிறவிப் பிணியினின்றும் நீங்கவேண்டுமென் பதனை அகப்பேய் சித்தர் கூறுகின்றார்.*

**பிறவி தீரவென்றால் பேதகம் பண்ணாதே**

**பிச்சை யெடுத்தாலும் பிறவி தொலையாதே.**

நாம் எடுத்த பிறவியானது இத்துடன் முற்றுப்பெற வேண்டுமென்றால் நாம் எவரும் பாவம் செய்யக் கூடாது.

பிச்சையெடுத்து முற்றும் துறந்த துறவியாக வாழ்ந்தாலும் பிறவித்துன்பத்தை அநுபவத்தே தீர வேண்டும்.

ஐம்புலன்களின் ஆசைகளையும் ஒழித்த இறைவனின் மெய்யான தர்மநெறியில் நிற்பவர் பிறப்பும் இறப்பு மின்றி நிலைத்து வாழ்வர்.

**'பொறிவாயில் ஐந்தவித்தான் பொய்தீர் ஒழுக்க**

**நெறிநின்றார் நீடு வாழ்வார். (06)**

பேராற்றல் கொண்ட இறைவன் திருவடிகளை வணங்கினால் மட்டுமே பிறவியாகிய பெருங்கடல் நீந்திக் கடக்க முடியும்.

எமது பிறவிகள் எண்ணிலடங்காதவை என்பதனை இப்பாடல் தெளிவுறு விளக்குகிறது.

**எடுத்தசன ங்கடொறு மீன்றெடுத்த தாய்மார்**
**கொடுத்த முலைப் பாலனைத்துங்கூட்டில் – அடுத்தமணிப்**
**பைந்நா கணைதுயில்மால் பாலாழி யுஞ்சிறிதாம்**
**மன்னா சிதம்பரதேவா.**

சொக்கநாதப்புலவர்.

சிதம்பர இறைவனே! நான் எடுத்த எல்லாப் பிறவிகளிலும் என்னை ஈன்றெடுத்த தாய்மார்கள், எனக்கு ஊட்டிய தாய்ப்பாலைக் கூட்டிப் பார்த்தால், அதன் அளவுக்கு ஆதிசேடன் பாம்பின் மீது அறிதுயில் கொள்ளும் திருபாற்கடலும் சிறியதாகும். மனிதப் பிறவியானது எண்ணிலடங்காதவை என்பது இதன் கருத்து.

நான் ஒன்றினை இவ்வுலகிற்கு கொண்டு வருவதில்லை. மண்ணைவிட்டு போகுமிடத்தும் ஒன்றுமே கொண்டு போவதில்லை. ஆனால் எமது கர்மச் செயற்பாடுகளைத்தான் கொண்டு வருகின்றோம். முறையற்ற முறையில் வாழுமிடத்து கர்மாக்களுடன் தான்செல்வோம். நாம்அழியும்பொருட்களையெல்லாம் கைக்கொண்டு அலைவதால் என்ன பயன்? விதிப்படி நடக்க வேண்டியவைதானே நடக்கும்.

எனவே எமக்கு கிடைத்த அரிதற்கரிதான மானிடப்பிறவிதனை மனம், மொழி, மெய் ஒருமித்து வழிபாடியற்றுமிடத்து அமைதியடைந்து சாத்வீக மான வாழ்வினை வாழ்ந்துய்யமுடியும்.

**தன்னை அறியத் தனக்கொரு கேடில்லை**
**தன்னை அறியாமற் தானே கெடுகின்றான்**
**தன்னையே அறியும் அறிவை அறிந்தபின்**
**தன்னையே அர்ச்சிக்கத் தானிருந் தானே!**

**தானே தனக்குப் பகைவனும் நண்பனும்**
**தானே தனக்கு மறுமையும் இம்மையும்**
**தானே தான்செய்த வினைப்பயன் துய்ப்பானும்**
**தானே தனக்குத் தலைவனும் ஆமே!**

இதனை திருமூலர் மேல்வரும் திருமந்திரப் பாடலில் மிகவும் திறம்படத் தெளிவாக்கியுள்ளார். ஒவ்வொருவனின் நிலைக்கும் அவன்தான் காரண மாகின்றான். வேறு எவரையும் நோக நைவப்பதில் எவ்விதமான பலனும் இல்லை. அறிவுத் தேடலுடன் எமது வாழ்வினை அறநெறிப்படி தர்மநியதி ஒழுக்கத்தின்படி வாழ்வதற்கான சுதந்திரம் அவரவர் கைகளிலேதான் உள்ளது.

**'புரையற்ற பாலினுள் நெய் கலந்தாற் போல தன்னகரில்லா இறைவன் தாள்களை சிக்கென பற்றுவோமாக!'**

நாம் ஒவ்வொருவரும் அந்தக்கரணங்களான மனம், புத்தி, சித்தம், அகங்காரம் எனும் நான்கின் பிரதிபலிப்பாக விளங்குகின்றோம். எனவே நாம் சில சந்தர்ப்பங்களில் புத்தியின்படி நல்லனவற்றையும் தீயனவற்றையும் அறிந்தும் பல சந்தர்ப்பங்களில் சித்தத்தின் வழியே ஐம்புலன்களால் அடிமைப்பட்டு பல தவறுகளைச் செய்கின்றோம். இதனால் நற்செயல்களும் தீய செயல்களான பாவச் செயல்களும்

ஏற்படுகின்றன. பாவ புண்ணியங்களின் பலன்களை சுகமாகவும் துக்கமாகவும் அநுபவிக்கும் இடம்தான் உடம்பாகும். நாம் ஆற்றும் செயல்களுக்கொப்ப பிறவிகளை எடுக்கின்றோம்.

அந்தக் கரணங்களான அகங்காரம் மூலந்தான் உயிர் செயல்களை ஆற்றுகின்றது. காமம், குரோதம், லோபம், மதம், மாச்சர்யம், மோகம் இவை அகங்காரத்தில் அடங்கும். இவை ஆறுமே உயிர்களின் செயற்பாடுகளுக்கு மூலகாரணம்.

எனது என்ற புறப்பற்று இருக்குமிடத்து பிறவிகள் தொடரும். புத்திரிகிரியார் என்ற சித்தர் யாசகம் செய்யும் ஓடு ஒன்றினை வைத்திருந்தமையால் பட்டினத்தார் அவரைப் பார்த்து சம்சாரி என அழைத்தார். உடனே பத்திரிகிரியார் தனது ஓட்டை வீசி யெறிந்தார்.

இந்துசமயநெறியானது மறுபிறப்புக் கோட் பாட்டில் ஆழமாக வேரூன்றியுள்ளது.

கர்ம மறுபிறப்பு பற்றி பகவத் கீதை வாயிலாக அர்ச்சுனனிடம் கிருஷ்ணபகவான் கூறியதாவது,

அர்ச்சுனா, 'நீயும் நானும் இதற்கு முன்னால் எத்தனையோ பிறப்புக்கள் எடுத்துள்ளோம். அந்த உண்மை உனக்குத் தெரியாது அனைத்தும் எனக்கு மட்டுந்தான் தெரியும். பிறப்பு, தவிர்க்க முடியாத நிலையில் இறப்பைப் பின்பற்றுகிறது. இறப்பு மறுபிறப்பைப் பின்பற்றுகிறது. ஒரு மனிதன் கந்தைத்

*துணிகளை வீசியெறிந்து விட்டுப் புத்தம்புதிய உடைகளை உடுத்திக் கொள்வது போன்று, உடம்பில் உள்ள ஆன்மா தேய்ந்து போன சடலங்களைக் களைந்துவிட்டு புத்தம் புதிய உடல்களில் புகுந்து கொள்கின்றது. உடல் தானிய மணியைப் போன்று பழுத்த நிலையடைகிறது, தானியக் கதிரைப் போன்று மனிதன் மீண்டும் மறுவாழ்விற்குத் தாவுகிறான். (கடோபநிடதம்).*

**ஒரு பொற்கொல்லன் துண்டு தங்கம் கொண்டு புதிய தோர் அழகுமிக்க உருவம் சமைப்பது போன்று,ஆத்மாவும் பழைய உடலை களைந்துவிட்டு, அறியாமையையும் அகற்றிவிட்டு புதிய வடிவத்தை ஏற்றுக் கொள்கிறது.**

*(பிருகதாரண்ய உபநிடதம்)*

**'உயிர்கள் உடலை விட்டுப் பிரிந்ததும்,**
**தம்தமது வினைகளுக்கேற்ப உடலை**
**அடையும் பொருட்டு முதலில் புல்நுனியைப்**
**பொருந்தி பசு வயிற்றில் புகுந்து**
**சாணத்தின் வழியாகப் பயிர்களோடு**
**பரவி, புருஷ கல்ப்பந்தியில் தங்கும் என்பது**
**உபநிடத வாக்கியமாகும். உயிர்கள்**
**புல்நுனியில் தங்குவதே முதற்படியாகும்'**

**அவரவர் வினைவழி அவரவர் வந்தனர்**
**அவரவர் வினைவழி அவரவர் அநுபவம்**

இந்து சமயத்தின் மிகச் முக்கிய கோட்பாடுகளில் ஒன்று மறுபிறப்புக் கோட்பாடாகும். இது ஆதார பூர்வமான விஞ்ஞான ஆராய்ச்சியின் அடிப்படையில் உருவாக்கப்பட்டது. விஞ்ஞானியான ஐசாக் நியூட்டன் என்பவர் இக்கருத்தினை ஒரு பௌதிக விதியாகவே கூறியுள்ளார். 'ஒவ்வொரு செயலுக்கும் சம அளவிலான எதிர்வினையுண்டு' (For every action there is an equal and opposite reaction) என்பதே அதுவாகும்.

வேத விற்பன்னர்களான ஞானிகள் இதனை முன்பே கண்டுபிடித்துச் சொல்லியுள்ளார்கள்.

கர்மமே செய்யாமல் யாரும் வாழமுடியாது. வினை செய்யும்பொழுது மேலும் வினைப்பயன் உருவாகியே தீரும். பற்றின்றிக் கருமங்கள் செய்யுமிடத்து அனைத்து வினைகளிலிருந்தும் விடுபட்டு வினைப்பயன் இல்லாத, மறுபிறப்பு இல்லாத நிலையை அடையலாம். இந்நிலையை அடைவதையே 'முக்தி' என்கிறது இந்துநெறி.

✡

# நிறைவாக...

சமயம் வேறு வாழ்க்கை வேறு அல்ல. வாழ்வுடன் பின்னிப் பிணைந்து இரண்டறக் கலந்தவைதான் ஆன்மீகமும் சமயநெறியும். இதன் **அடிப்படையில்** சமயத் தத்துவங்களை நாம் புரிந்துகொள்ளுமிடத்துத்தான் எமது வாழ்க்கை அர்த்தமானதாகும். **மனிதன் பிறக்கும்**போதே அவனிடத்து **முக்குணங்களும்** அந்தக்கரணமான **மனம் என்ற கருவி**யும் வந்துவிடுகின்றன. முக்குணங்களும் மனத்தில் தோன்றும் எண்ண அலைகளிடம் தாக்கம் செலுத்துகின்றன. மனம் எனும் அகக்கருவியானது **எண்ணத்தைத்** தோன்றுவிப்பதன் மூலம் அறிவைப் பெற்று **பகுத்தறிவு** எனும் இறைவனை நெருங்கும் வழியை மனிதனுக்குத் தந்துவிடுகிறது. இதனைப் புரிந்துகொண்டு நாம் வாழ்வாங்கு வாழ்வை வாழ்தல் வேண்டும். இ**வ்வாழ்வில்** பாவம் செய்வதை மனிதன் விடுதல்வேண்டும். **பாவம்** தவிர்க்கப்படுவதற்கான

*காரணத்தை* ***கர்ம தத்துவம், விதி, மறுப்பிறப்பு*** *எனும் கோட்பாடுகளால் நாம் விளங்கிக்கொள்ளலாம்.*

*மேற்கண்ட தத்துவ சாரத்தை இந்நூலில் **12** அத்தியாங்களில் ஒழுங்குபடுத்தி எடுத்துக் கூறியுள்ளேன். இவற்றை உணரும்போது வாழ்வு இலகுபடும். அறிமுக நிலையில் கூறப்பட்டுள்ள இத்தத்துவங்களை இந்நிலையில் நின்றுவிடாது மேலும் அதனை ஆராய்ந்து ஆழமான கருத்துக்களைப் பெற்றுப் பயன் பெறுவீர்களாக.*

**எல்லோரும் சுகமாக வாழ்க!**
**எல்லோரும் நோயின்றி வாழ்க!**
**எல்லோருக்கும் மங்களமுண்டாக!**
**ஒருவரும் துன்புறாது இருக்க!**

**ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!**

# சுபம்

## உசாத்துணை நூல்கள் :


1. **தர்ம சாஸ்திரங்கள்**

   *எஸ். சுப்பிரமணிய ஐயர்*

2. **இந்து சமயம்**

   *சுவாமி மதுசானந்தர்*

3. **இந்து தர்மம்**

   *சுவாமி சிவானந்தர்*

4. **சித்தர் பொன் மொழிகள்**

   *தமிழ்ப் பிரியன்*

5. **தெய்வத் தமிழ் தத்துவங்கள்**

   *பரமஹம்ஸ ஸ்ரீமத் பரத்வாஜ் ஸ்வாமிகள்*

6. **கிருபானந்த வாரியார் அருளுரை**

7. **விவேகானந்தர் உபதேசங்கள்**

8. **இந்து சமய தத்துவம்**

   *ரி.எம்.பி. மகாதேவன்*

9. **தர்மசாத்திரங்கள்**

   *எஸ். சுப்பிரமணிய ஐயர்.*

10. **சைவமத வினாவிடை**

    *வித்துவான் மறை திருநாவுக்கரசு*